THE

SECOND THIRTY CHAPTERS

OF

POPE'S ANTHOLOGY

WITH

GRAMMATICAL NOTES, EXPLANATIONS, TRANSLATIONS;

AND THE

EXPLANATION

OF

ALL THE DIFFICULTIES FOUND IN THE

PORTION OF

THE TRANSLATION OF ROBINSON CRUSOE PRESCRIBED FOR MATRICULATION

BY

C. RAJAGOPALA PILLAI

HEAD TAMIL PANDIT, GOVERNMENT NORMAL SCHOOL,

AND PUBLISHED BY

K. SINGARAVALOO MOODELIAR, TAMIL PANDIT GOVINDOO NAIKEN'S SCHOOL,

MADRAS.

PRINTED AT THE ORIENTAL PRESS, BY M. RAMALINGAH CHETTY AND CO.

1868.

ஸ்ரீ

ஸ்ரீமத்வரவரமுநயேநம:

௧௧ - ஆம்பாடம்முதல் - ௩௰ - ஆம்பாடம்வரை

தமிழ்ச்செய்யுட்கலம்பக

வரைபாடம்.

இங்லீஷ்மொழிபெயர்ப்பு,

நூலாசிரியர்கள்சரித்திரம்,

சென்னைக்கவரன்மெண்டுநார்மல்கல்விச்சாலைத்

தமிழ்த்தலைமைப்புலவர்

கோமளபுரம்

இராசகோபாலபிள்ளையவர்கள்

எழுதியஇலக்கணக்குறிப்பு,

ராபின்ஸ[illegible]குருஸோ

அருஞ்சொ[illegible]கராதி, முதலியன.

இப்புத்தகம்

சென்னைக்கோவிந்தப்பநாயகர்கல்விச்சாலைத்

தமிழ்ப்புலவர்

கி. சிங்காரவேல்முதலியாரால்

களாநிதி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

பிரபவஹு தைமீ.

ஓரியன்டல்அச்சுக்கூடத்தில் இங்கிலீஷ்

பதிப்பிக்கப்பட்டது.

PREFACE.

In preparing this edition of a portion of Pope's Anthology for the press, I have taken great care to go fully into all important grammatical points, and explain every difficulty occurring in the stanzas. References to the Abridgment of the Nunnul have been given wherever necessary. The translations (with the exception of a few for which I am indebted to Mr. Savundranayagum Pillai) are a reprint from Walker's well-known selections and Drew's Kural; and the notes of authors, excepting that regarding Naladi &c., have been extracted from that excellent work of Mr. Cassie Chetty of Ceylon, known as the Tamil Plutarch.

My thanks are due to Mr. Savundranayagum Pillai for the valuable assistance he has given me in preparing the English portion of this little work.

C. R.

2307

NOTICES OF AUTHORS.

TIRUVALLUVER.

Tiruvalluver deservedly ranks foremost among the poets and moralists of India; for he has had no superior or equal in either character. Some place the date of his existence in the third or fourth and others in the eighth or ninth century of the Christian era, but the last is generally considered as most probable. All accounts concur in representing him as the offspring of a Brahmin by a Pariah woman, brought up by a Valluven* at Mailapur, near Madras, who had found him exposed in an Illippe grove in his neighbourhood. It is not known who directed his studies; but we are told that while yet a youth, he had acquired so great a reputation for learning that Margasagayen, a wealthy farmer who lived at Kaveripakam, did not disdain to bestow on him the hand of his only daughter named Vàsuki, and besides the highest personages in the place felt a pride in the enjoyment of his friendship. He, however, appears to have pursued a quiet and unobstructive course of life, working at the loom for subsistence as the other Pariahs did until he was prevailed upon by his friends to take up the gauntlet against the professors of the Madura College, who had arrogantly defied all other men of learning in the country

* *A priest of the Pariah tribe.*

and claimed all literary honors to themselves. In order to humble the pride of the professors, he wrote an ethical poem, under the title of Kural (குறள்), and repairing to the College asked them to review it as judges of poetical composition, that he may have a seat on their College bench in case it was approved. The professors at first scorned at the idea of a Pariah-born poet offering himself as a competitor for a seat with them, but afterwards when he drew them into a contest and completly vanquished them, they not only approved his work and gave him the desired seat, but also conferred on him several honorary titles, such as, Deivapulaver (தெய்வப்புலவர்) the divine poet, Mudetpavaler (முதற்பாவலர்) the first of poets, Perunaveler (பெருநாவலர்) the great poet, etc. A legend would have it that the professors were so sensible of their discomfiture, that unable to survive it, they all drowned themselves in the pond in the neighbourhood of the College, but this is not confirmed by other accounts. Nothing further is known of Tiruvalluver which can be relied upon, execpting that some time after his return to Mailapur, he was visited with a severe domestic calamity by the death of his wife to whom he was tenderly attached and it so deeply affected his mind that secluding himself from society, he devoted the remainder of his life to religious comtemplation. It is said that while lying sleepless and agitated, on the night following his wife's death, he ejaculated extempore the following verse :

அடசிற்கினியாளையாக்கஞ்செயவாளைப்
படிசொற்படிகடவாளை-அடிவருடிப்
பின்றுஞ்சிமுன்னெழூஉம்பேதையைவிட்டையையோ
என்றுஞ்சுமென்கண்ணிணை.

When I have lost a woman who excelled in the knowledge of housewifery, who performed rightly all domestic duties, who never transgressed my word or my door, who chased my limbs and never slumbering until I slept, arose before I awoke ; Alas ! Alas ! How can my eyes again know sleep !*

The time of his death is uncertain ; but a tradition would have it that when he died his body was according to his express desire exposed in the open air outside the town to be devoured by crows.

It is difficult to judge from the tenor of his Kural to what sect he belonged ; for he has entirely avoided in the work every thing that savours of sectarianism in order to harmonize the suffrages of all the sects. The Jainas however claim him to belong to their sect from his having used in one of his distichs in praise of God the epithet Andanan (அந்தணன்) which is applicable to Arha (அருகன்) the object of their worship.

[The above is not based upon any good authority.—Ed.]

AUVEYAR.

Auveyar was the first of her sex in the Tamil country, who acquired a reputation as a poetess. The name

---

* *See Ellis' Kural, p.* 168.

Auiveyar is merely titular, signifying "the elderly lady:" what may have been her real name is not known. She was one of the sisters of Tiruvalluver, and her mother, who gave birth to her in a Choultry near Ureiyar having exposed her there, she was found and brought up by a Panan or ministrel. How, and in what manner, she acquired her prodigious learning cannot be ascertained, but it is very probable she was in some measure indebted for it to her foster-father himself. Though she taught others that marriage was preferable to celibacy, yet she continued unmarried all her life. It is stated that by the virtue of a panacea, which she had discovered, she prolonged her existence to the period of 240 years, and then, according to the custom of her times made the Mahaprasthanagamana, or great journey to the Imaus and died there.

"She sang like Sappho; yet not of love, but of virtue." Her two books of moral aphorisms usually called Attishudi (ஆத்திசூடி) and Kondei Veynden (கொன்றைவேந்தன்) have been considered by the learned Beschi as being "worthy of Seneca himsilf;" for they are as the Rev. Mr. Percival has justly remarked, "of great beauty and value, replete with lessons of wisdom," and "they have never been surpassed for sententious brevity; and generally they are equally distinguished by purity of principle." In both the books the aphorisms are written in the order of the Tamil alphabet; hence they have been most appropriately called "the Golden Alphabet of the Tamils." No less than

three English versions of Auveyar's aphorisms have been published, the first by the Rev. Dr. John in the Asiatic Researches; the second by the Rev. Mr. Bisset, the author of the History of Ceylon under the name of Philalethes and the third by the Rev. Mr. Sudjen, and there is also a version of them in German, and another in Dutch but it is hardly neccssary to remark that they all merely convey the sense of the original, and that too often not very correctly. The other works of Auveiyar are the Muduri (மூதுரை), Nalvazhi (நல்வழி) Kalviozhukam (கல்வியொழுக்கம்), Asadikovei (அசதிக்கோவை) Nannurkovei (நன்னூற்கோவை), Nanmanikovei (நான்மணிக்கோவை) Aruntamilmalei (அருந்தமிழ்மாலை) Tarisanapattu (தரிசனப்பத்து), Gnana Kural (ஞானக்குறள்), and Pandenantadi (பந்தனந்தாதி), and of these the first eight are on ethics and religion, the ninth on metaphysics, and the tenth is a panegyric on a wealthy merchant of the name of Panden, who resided at Kaveripatnam. There is also extant under her name a Nigundu, or dictionary in verse, containing the Tamil Synonyma of the materia medica, but it is not in general use.

Auveiyar was more keen and clever than even her brother Tiruvalluver. The Hindu system of Moral philosophy involves four questions, viz. 1. What is virtue, and how is it to be exercised? 2. What is Wealth, and how is it to be acquired? 3. What is pleasure, and how is it to be enjoyed? 4. What is heavenly bliss, and how is it to be obtained? Tiruvallu-

ver, however, in his Kural containing 1333 couplets, treated only of the three first questions, and when Auveiyar heard of it she compressed all the four questions, and their answers, within the compass of the following single Stanza, which she uttered extempore :—

ஈதலறந்தீவினைவிட்டீட்டல்பொருளெஞ்ஞான்றும்
காதலிருவர்கருத்துறணைவத்-தாதரவு
பட்டதேயின்பம்பரனைநினைந்திம்மூன்றும்
விட்டதேபேரின்பவீடு.

To give is Virtue. That which is acquired without sin, is Wealth.
The constant mutual affection of two, whose tastes agree, is Pleasure.
To forsake these three, in the contemplation of the Supreme Being is Heavenly Bliss.*

---

* *The following Stanzas which Pugazhenti and Ottaikuttar have improvised, are stated by some to have been uttered by Avvai.*

ஒட்டக்கூத்தர்.

இவ்வளவுகண்ணினாளிவ்வளவுசிற்றிடையாள்
இவ்வளவேபோன்றவிளமுலையாள்-இவ்வளவு
நைந்தவுடலானைமேவுமன்மதன்கை
ஐந்துகணையால்வாடுவாள்.

புகழேந்திப்புலவர்.

ஐயமிடுமினறநெறியைக்கைப்பிடிமின்
இவ்வளவேயாயினுநீரிட்டுண்மின்-தெய்வம்
ஒருவனேயென்றுள்ளுணரவல்லீரேல்
அருவினைகளைந்துமறும்.

Kumaragurupara Desikur (குமாரகுருபரதேசிகர்)

Kumaragurupara Desikur was a Siva ascetic and above of considerable eminence, born of Velala parents at Strivyguntam, in the Tinnevelly district, about two hundred years ago. He established his fame as a poet while yet a child! for it is reported of him that when only five years old, he composed a poem, called Kalivenba கலிவெண்பா. In praise of the shrine of Menakshi at Madura, which he recited before the King Tirumalanayaker. He soon afterwards entered the Matam at Dharmapuram, and after studying there, the Siva system of philosophy, and improving his knowledge of the Tamil and Sanskrit languages and poetry, assumed the habit of an ascetic; and the heads of the Matam being convinced of his deep learning, invested him with the title of Tambiran. He then repaired to Benares, and presided over all Matam in that city until his death, which occured in the prime of his manhood. Besides his two juvenile productions, he was also the author of twelve others, of which the last one entitled Nidineri-vilakkam consisting of 102 stanzas on moral subjects, is considered the best, and has been translated into English in prose by Mr. Stokes of the Madras Civil Service.

SIVAPRAKASA DESIKER—சிவப்பிரகாசதேசிகர்.

Sivaprakasa Desiker was the eldest of the three sons of Kumaraswami Pandaram, a Junguma priest, who lived

at Kunjipuram in the early part of the seventeenth century of the Christian era. Losing his father at an early age, and whilst still pursuing his studies he went with his mother and brothers to Trinomali to settle hmself there; but he shortly after set out to Tinnevelly for the purpose of perfecting himself in grammar and paetry. On his way, however, he was delayed at Tirumangalam for a period of two years, in consequence of Annamalei Reddi, the Gramadhipati, of Tirumangalam, having prevailed on him by his entreaties to reside in a Matam, which he had erected there. Afterwards taking leave of Annamalei Reddi, who presented him with a sum of 300 pons (equivalent to £5210), he proceeded to Tinnevelly in company with his brothers. When he reached Tinnevelly, hearing that Velliyambala Tambiran, the head ascetic of the Saiva Matam at Sindupundurie on the banks of the Tambraparni, was the best of Tamil Scholars, he with his brothers, presented himself before him and asked his instruction in grammar and poetry. The Tambiran in order to know the progress he may have already made in composing verses, desired him to compose a verse beginning and ending with the letter கு ku, and having in the middle the name of Urudeiyan (Siva), upon which he uttered the following off hand :—

குடக்கோடுவானெயிறுகொண்டார்க்குக்கேழல்
முடக்கோடுமுன்னமணிவார்க்கு-வடக்கோடு
தேருடையான்றெவ்வுக்குத்தில்லைதோன்மேற்
ஊருடையனென்னுமுலகு

The Tambiran was so much satisfied with the performance that he embraced him, and offering him an honorable seat, told that he did not require any further instruction, but that he would gladly teach his brothers. When his brothers had finished their course of studies, he offered the 300 pons which he had, to the Tambiran as a remuneration for his trouble, but this offer was declined. The Tambiran only required in return that he should go to Trichendur, and by his poetry defeat and put to shame a poet, who had set himself up there as the Tambiran's rival, and had lampooned him. He gladly undertook the task and repaired to Trichendur as required, and found the poet in the temple there. No sooner had the object of his visit been reported to the poet than he challenged him to a contest, in which each was to improvise thirty Yamakama stanzas (a kind of stanza consisting of four lines beginning with the same word but having a different sense in each line) within a given time, and that the vanquished was to become the slave of the victor. The challenge being accepted, they proceeded to the trial of their skill but the poet failing delivered himself over as a slave to his compititor who thereupon conducted him to Sindupunturei, and consigned him to the Tambiran. The Tambiran was so much gratified with the success of Sivaprakasa Desiker, that unwilling to part with him, he endeavoured to make him his associate in the Matam at Sindupanturei ; but Sivaprakasa Desiker preferring to live by himself in solitary dignity

took his farewell of the Tambiran and returned to his own Matam at Tirumangalam. The fame of his superior attainments soon spread over the country, and all persons wishing to avail themselves of his instruction flocked to him from all parts. His time in the latter part of his life appears to have been wholly engrossed in philosophical and metaphysical researches, and in imparting their result to the public by means of a series of poetical treatises. His useful career was however cut short by death which occurred at Nalcottur in the thirty second year of his age, as he was on a visitation to the Matam there. It is said that he was a staunch defender of celebacy, and that when his friend Annamala Reddi proposed to him a marriage, he disdainfully rejected the proposal observing that he would rather be possessed of a devil than be possesed of a wife. Sivaprakasa Desiker was a prolific writer, and the following work all of which are written in well measured poetry, may be mentioned as his productions:

1. Prabulinga Lila, பிரபுலிங்கலீலை
2. Tirukuva Puranem, திருக்கூவப்புராணம்
3. Sittanda Sikamani, சித்தாந்தசிகாமணி
4. Vedanta Sudamani, வேதாந்தசூளாமணி
5. Sivaprakasa Vikasam, சிவப்பிரகாசவிகாசம்
6. Sivanama Mahimei, சிவநாமமகிமை
7. Tarkaparipashei, தர்க்கபரிபாஷை
8. Shonasaila Malei, சோணசைலமாலை
9. Vénghai Kalambagam, வெங்கைக்கலம்பகம்
10. Vénghai Kovei, வெங்கைக்கோவை

11. Vénghai Ula, வெங்கையுலா
12. Vénghai Alangkaram, வெங்கையலங்காரம்
13. Tiruchendil Antadi, திருச்செந்திலந்தாதி
14. Satamani Malei, சதமணிமாலை
15. Nalver Namani Malai, நால்வர்நான்மணிமாலை
16. Niranjana Malei, நிரஞ்சனமாலை
17. Kaietala Malei, கைத்தலமாலை
18. Abishega Malie, அபிஷேகமாலை
19. Ishtalinga Perungkazhinedil, இஷ்டலிங்கப்பெ [ருங்கழிநெடில்
20. Ishtalinga Kurunkazhinedil, இஷ்டலிங்கக்குறு [ங்கழிநெடில்
21. Nanneri, நன்னெறி

Sivaprakasa Desiker was also the author of three different panegyrics on Balayannanda Swami, who was his Guru or spiritual instructor, besides a hymn on each of the Siva shrines in Southern India, which were commemorated in the chants of Apper, Sundarer and Sampanter in ancient times. He undertook to perfect the Kalatti Puranam (காளத்திபுராணம்) which his brother Karunaiprakasa Desiker had left unfinished; but he died before he could execute his task.

NALADIYAR.

Pazhamozhi and Aranerichcharam.

Eight thousand Rishis of a certain religious sect wrote a stanza each on moral subjects and delivered them to one of the Pandiyan Kings. There were a large number of stanzas on the same subjects, and

therefore the king, with a view to select those which were distinct from the rest and to reduce the size of the volume, asked the Rishis to settle as to the manner in which the selection was to be made. They proposed to drop the cadjans containing the stanzas into the river Vaigay, and to approve of those stanzas which were written on such cadjans as floated on the river in a direction opposite to the current.

Some of these containing four hundred stanzas were taken up from the surface of the stream and were collected into the work called Naladi; another group were found to have floated in equal portions to the opposite banks. These formed the book Pazhamozhi. A third series drifted to one bank near the mouth of the river and were collected in the book Aranerichcharam.

It is here necessary to add that all the above accounts of authors are based on tradition alone.

THE END

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

தமிழ்ச்செய்யுட்கலம்பக

வுரைபாடம்.

தமிழ்ச்செய்யுட்கலம்பகமென்பது, தமிழில்வழங்கும் பல்வகைச் செய்யுளாலமைந்த கலம்பகமென இந்நூலுக்குக் காரணப்பெயராயிற்று. எனவே-மூன்றுசொல், இரண்டுசந்தி. முன்னது ஏழாம்வேற்றுமைத் தொகைநிலைச் சந்தியும். பின்னது மூன்றும் வேற்றுமைத்தொகை நிலைச்சந்தியுமாம், மூன்றுசொல் என்பவற்றுள் தமிழ் என்பதுதிரமிட மென்னும் ஆரியமொழிசிதைந்த வடமொழிப்பெயர். தன்னிலே கலப்புள்ளதென்னும் பொருள்பட ஏழாம்வேற்றுமைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையாகிய அகக்கலப்பென்னுந் தொடர்மொழி முன்பின்னுகமாறி இலக்கணப்பொலியாய் ஒருசொன்னீர்மைத்தாய் நின்ற கலம்பகமென்பது இடுகுறிமாத்திரையாய்ப் புயமுதலிய பதினெட்டுறுப்புகளையுடையதாயும், ஒருபோகுமுதலியபாவை முதலினுரைக்கப்பெற்றுத் தேவர்க்கும், அந்தணர்முதலிய வருணத்தார்க்கும் இத்துணைய வெனவரையறுத்த செய்யுள்களுடையதாயும் வரும் பிரபந்தத்துக்கும், காரணங்கருதியவழி-பல்வகைப்பொருளைக் கூறும் பல்வகைச்செய்யுளாலமைந்த நூலுக்கும் பெயராமாதலால் காரணவிடுகுறிப்பெயர். இங்கே கலம்பகமென்றது பின்னையது. கலம்பகவிலக்கணம்வெண்பாப்பாட்டியலில் பரக்கக்காண்க.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

௲க - ஆம்பாடம் - குறள்.

(178) நடுவின்றிநன்பொருள்வெஃகிற்குடிபொன்றிக்
குற்றமுமாங்கேதரும்.

இ-ள். நடுவு-(பிறர்பொருளைக்கொள்ளல் அறம் அன்றென்னும்)நடுவுநிலைமை, இன்றி-இல்லாமல், நன்பொருள்-(அவருடைய) நன்மையாகியபொருளை, வெஃகின்- வெளவக்கருதினால், குடிபொன்றி-(அவ்வெஃகுதல் அவனுடைய) குடும்பத்தைக் கெடச்செய்து, குற்றமும்-பலகுற்றங்களையும்,ஆங்கே-அப்பொழுதே, தரும்-(அவனுக்கு) கொடுக்கும். எ-று.

பொருளுக்கு நன்மையாவது குடும்பத்தை வளரச்செய்து பல நன்மைகளையும் உண்டாக்கும் தன்மை. நன்பொருள்-நல்-பண்பாதலால் ஈற்றுலகரம் மென்கணத்தின்முன் திரிதல்போல வன்கணத்தின்முன்னும் னகரமாகத்திரியும். நன்னூற்சுருக்கம்-சூத்திரம். எரு. நடுவு-ஒருவன் பொருளுக்குப் பிறன் உரியவன் அல்லனென்பதுபொருள். நடு-பகுதி-வு-பண்புப்பெயர்விகுதி. பொன்றி-என்னும்- செய்தெனெச்சம் பொன்ற-என்னும்செயவெனெச்சத்தின்திரிபு. செய்து-என்பது-சொல்லெச்சம். இது தொல்காப்பிய வுரைகாரர் முதலியோர் மதம். இதனை நன்னூலுரைகாரர் இசையெச்சமென்பர். பொன்றி-என்பது- பொன்றுவித்து என்னும் பிறவினையில் விவ் விகுதி தொக்குநின்றதெனினும் ஒன்று. உம்மை-இறந்ததுதழீஇயது. வெஃகுதல் - எழுவாய்; தரும்-பயனிலை; குற்றம்-செயுப்படுபொருள்.

(179.) படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடு வன்மை நாணு பவர்.

(இ-ள்.) நடுவு - நடுவுநிலைமை, அன்மை - அல்லாமையை, நாணுபவர்-அஞ்சுவோர், படுபயன்-உண்டாகும்பயனை, வெ

ஃகி-விரும்பி, பழி-பழியினிடத்து, படுவ-பொருந்துஞ்செய லகளை, செய்யார்-செய்யார்கள்—எ-று.

அன்மை நாணுபவர்- நீத்தற்பொருளைத்தரும்-உ-ஆம் வேற் றுமைத் தொகைநிலைத்தொடராகவாயினும், பகைப்பொரு ளைத்தரும் - ச-ஆம்-வேற்றுமைத் தொகைநிலைத்தொடராக வாயினுங் கொள்க. படுவ, நாணுபவர் வினையாலணையும் பெ யர்;பின்னது ஈறு திரிந்துநின்றது.பயன்-மொழியிறுதிப்பொ லி. இது இரு குறிலையடுத்த மகரவிறுதி அஃறிணைப்பெயரிட த்தேவரும்.

(180.) சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்.

(இ-ள்.) மற்றுஇன்பம்-(தருமத்தால்வரும்) நிலையுடைய இன்பத்தை, வேண்டுபவர் - விரும்புவோர், சிற்றின்பம் - (வெளவியபொருளால் தாமடையும்) நிலையில்லாத இன்பத் தை, வெஃகி-விரும்பி, அறன்அல்ல - தருமம்அல்லாதசெய் கைகளை, செய்யார்-செய்யார்கள்—எ-று.

நிலையில்லாமைஎன்பது - பாவத்தால் வருதலினால் அப் பொழுதே அழிதல். அறனல்ல-எழுவாய்த்தொகாநிலைத்தொ டர். அல்ல-குறிப்புவினையாலணையும் பெயர். மற்று-பிறிதெ ன்னும் பொருளஃது.

(181.) இலமென்று வெஃகுதல் செய்யார்புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்.

புலம்வென்ற-ஐம்புலன்களையும்வென்ற, புன்மை இல்-குற் றமில்லாத, காட்சியவர்-அறிவினையுடையோர், இலம்என்று- (நாம்) வறுமையுடையோமென்று, வெஃகுதல் செய்யார்- (அது தீரும்பொருட்டுப் பிறன்பொருளை) விரும்பார்—எ-று.

வெல்லுதல் - பாவவழியில் மனத்தைச்செல்லவிடாமை. காட்சியவர்-காண்-பகுதி, சி-தொழிற்பெயர் விகுதி, ணகர

ம்-டகரமானது சந்தி. அது பகுதியாய்நின்று ய்-சந்தி, அ-சாரியை, வ்-சந்தி, அர்-பலர்பால் விகுதிபெற்று முடிந்த தொழிலடியாகப்பிறந்தபெயர். இலம்-பண்படியாகப்பிறந்த தன்மைப் பன்மைக்குறிப்பு வினைமுற்று. அல்லது அவ்விடப்பெயரொனினும் பொருந்தும்.

(182.) அஃகி யகன்ற வறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்.

(இ-ள்.) வெஃகி-(பொருளை)விரும்பி, யார்மாட்டும்-தகுந்தாரிடத்தும் தகாதாரிடத்தும், வெறிய- அறிவோடுபொருந்தாதசெயல்களை, செயின் - (அறிவுடையோர்) செய்தால், அஃகி-நுட்பமுள்ளதாகி, அகன்ற (எல்லாநூல்களிலும் பழகி) விசாலமான, அறிவு-(தமது)அறிவு, என்ஆம் -என்னபயனுடையதாகும்—எ-று.

என் - எவனென்னும்வினவினைக்குறிப்புமுற்றின்மரூஉ. இது-என்ன, என்னை, ஏன் எனவும் மருவிவழங்கும். யார்-யாவரொன்னும் வினப்பெயரின்மரூஉ. வெறிய- பண்படியாகப்பிறந்த பலவின்பாற் படர்க்கைப்பெயர். உம்மை-முற்று.

(183.) வேண்டற்க வெஃகியா மாக்கம் விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன்.

(இ-ள்.) விளைவயின்-(பின்) அநுபவித்தலில், பயன் - பிரயோசனமானது, மாண்டற்கு-மாட்சிமைப்படுதற்கு, அரிது ஆம்- இல்லதுஆகும், (அதாவது நன்றாகுதல் இல்லை ஆதலால்) வெஃகி- (பிறன்பொருளை) விரும்பி, (அடைந்து) ஆம்-(அதனால்)ஆகின்ற, ஆக்கம் - செல்வத்தை, வேண்டற்க - (ஒருவன்) விரும்பாமலொழியக்கடவன்—எ-று.

வேண்டற்க-வேண்டு-பகுதி, அல்-எதிர்மறைவிகுதி, உகரக்கேடு-சந்தி, வேண்டல்என அனைத்துமொருபகுதி, க-வியங்கோள்விகுதி, லகரம்- றகரமானது சந்தி. ஆக்கம்-குச்சாரி

யைபெற்று நின்ற ஆகு- பகுதி, அம்-தொழிற்பெயர்விகுதி, ககரம்இரட்டியதுவிகாரம், உகரக்கேடு சந்தி. வினை - முதனிலைத்தொழிற்பெயர். மாண்டல்-மாண்-பகுதி, தல்-தொழிற்பெயர்விகுதி, தகரம் - டகரமானது சந்தி. குவ்வுருவு - பகைப்பொருளது.

௩௨-ஆம் பாடம்.

(184.) தூஉய்மை யென்பத தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்.

(இ-ள்.) தூய்மையென்பது-(ஒருவர்க்கு) வீடென்றுசொல்லப்படுவது, அவாஇன்மை-விருப்பம்இல்லாதிருத்தல், அது அவ்விருப்பமில்லாமை, வாய்மை - மெய்ம்மையாகிய பரம்பொருளை, மற்றுவேண்டவரும்-வேண்ட (தானே) உண்டாகும்—எ-று.

வீடாவது, உயிர் அவிச்சைமுதலிய மாசு நீங்குதல்ஆதலால் அதனைத் தூய்மை என்றார். மெய்ம்மை- பண்பாகுபெயர். இன்மை-குறிப்புத்தொழிற்பெயர். மற்று-வினைமாற்றின்கண் வந்தது. அளபெடையிரண்டும் இசைநிறைக்கவந்தன. என்பது-இடைச்சொலடியாகப்பிறந்த எதிர்காலவினையாலணையும் பெயர்.

(185.) அற்றவ ரென்பா ரவாவற்றார் மற்றையார்
அற்றாக வற்ற திலர்.

இ-ள். அற்றவர் என்பார்- (பிறப்பு) அற்றவரொன்று சொல்லப்படுவார், அவா-(அதற்கு நேரோ ஏதுவாகிய) விருப்பம், அற்றார் - இல்லாதவர், மற்றையார்-மற்ற ஏதுக்கள் ஒழிந்து அந்த அவா ஒன்றும் ஒழியாதவர்கள், அற்றுஆக-அவர் பிறப்புப்போல, அற்றது-(தமது பிறப்பு) ஒழிந்தது, இலர் - இல்லார்—எ-று.

மற்றையார்-தன்னியல்பிலேயே ஐகாரச்சாரியை பெற்று நின்ற மற்றை-பகுதி, ய்-சந்தி, ஆர்-பலர்பால்விகுதி. இடைச்சொலடியாகப் பிறந்த பெயர்ச்சொல். அன்றிக்குறிப்பு வினையாலணையும் பெயர்ச்சொலெனினும் பொருந்தும். அற்றன்-அன்-பகுதி,று-ஒன்றன்பால்விகுதி, னகரம்றகரமானது சந்தி. குறிப்புவினையாலணையும்பெயர். ஆக என்னும் செயவெனெச்சம் ஒப்புப்பொருள்படநின்றது. அற்றது-அறு-பகுதி, அ-சாரியை, து-தொழிற்பெயர்விகுதி, பகுதி ஒற்று இரட்டியதே இறந்த காலங்காட்டியது; அது விகாரம், உகரக்கேடு-சந்தி. இவ்விகுதி அறுகின்றது, அறுவது என மற்ற இரண்டு காலங்களிலும், அறுதது என எதிர்மறையிலும்வரும். அவாவற்றார், அற்றதிலர்-எழுவாய்த்தொகாநிலைத்தொடர்; திணைவழுவமைதி. ரு, நன்னூற்சுருக்கம். கஅகூ. பின்னது இரண்டாம் வேற்றுமை த்தொகைநிலைத் தொடரெனினும் பொருந்தும்.

(186.) அஞ்சுவ தோரு மறனே யொருவனை
வஞ்சிப்ப தோரு மவா.

(இ-ள்.) ஒருவனை - (முத்தியை அடைதற்குரியவனாகிய) ஒருவனை, வஞ்சிப்பது - (மறப்பின்வழியாற்புகுந்து மேலும் பிறப்பிலே விழச்செய்து) கெடுக்கவல்லது, அவா-விருப்பம் (ஆதலால்) அஞ்சுவதே-(அந்த அவாவை) அஞ்சிக்காப்பதே, அறம்-துறவறமாவது—எ-று.

அஞ்சுவது - எதிர்காலத்தொழிற்பெயர். வஞ்சிப்பது - எதிர்கால வினையாலணையும்பெயர். ஒரும் என்பன - அசைநிலை. பிரிநிலை-ஏகாரத்தை அஞ்சுவதென்பதனோடுகூட்டுக. சிலகாலங்களில் பரம்பொருளை விரும்புதலை ஒழிந்து பராக்கால்காக்காவிடில் அது இடமாக அவனறியாமற்புகுந்து பிறப்பினை உண்டாக்குதலால் அந்த அவாவைவஞ்சிப்பதென்றார்.

(187.) அவாவில்லார்க்கில்லாகுந்துன்பமஃதுண்டேல்
தவா அது மேன்மேல் வரும்.

(இ-ள்.) அவாஇல்லார்க்கு-விருப்பம்இல்லார்க்கு, துன்பம்-(வரக்கடவதாகிய) ஒருதுன்பமும், இல்ஆகும்-இலதாகும், அஃது-அந்த அவாவொன்றும், உண்டேல்-உண்டாயின், தவாது-(எல்லாத் துன்பங்களும்) முடிவில்லாமல், மேல்மேல்வரும்-இடைவிடாது வரும்—எ-று.

இல்-இல்லையென்பதின் ஈறு கடைக்குறை-ஏல்-எனிலென்பதன்மரூஉ. இவ்வாறே எனின்-ஏனெனவும், ஆயில்-ஆலெனவும், ஆயின்-ஆனெனவும்மரூஉவாய்வழங்கும். அடுக்கு இடருமையைமைப்பொருளில் வந்தது. அளபெடை-இசைநிறை. தவாது எதிர்மறைவினையெச்சம். தவ் பகுதி, ஆ-எதிர்மறைவிகுதி அனைத்துமோர்பகுதி, த்-விரித்தல், உ-வினையெச்சவிகுதி.

(188.) இன்ப மிடையறா தீண்டு மவாவென்னும்
துன்பத்துட் டுன்பங் கெடின்.

(இ-ள்.) அவாஎன்னும் - விருப்பமென்று சொல்லப்படும், துன்பத்துள்துன்பம் - துன்பங்களுக்குள்துன்பம் (சிறந்ததுன்பம்) கெடின் - (ஒருவனுக்கு) கெடுமானால், ஈண்டும்-இவ்விடத்தும், (உடம்போடுகூடிநின்றபோதும்) இன்பம் இடையறாது-சுகம்நடுவில் அற்றுப்போதலில்லை—எ-று.

உம்மைஎதிரதுதழீஇயஎச்சவும்மை. மற்றதுன்பங்களெல்லாம் இன்பமாக வருந்துன்பம். வினைவிலே அல்லாமல் தோன்றுதலிலும் துன்பமுண்டாதலால் அந்த அவாவைத்துன்பத்துள் துன்பமென்றார்.

௩௩ - ஆம் பாடம். நீதிநெறிவிளக்கம்.

(189.) முற்று முணர்ந்தவ ரில்லை முழுவதூஉம்
கற்றன மென்று களியற்க-சிற்றுளியால்
கல்லுந் தகருந் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னால்.

(இ-ள்.) கனங்குழாய்-கனமாகியகாதணியையுடையாளே முற்றும்-முழுதும், உணர்ந்தவர்-கற்றறிந்தவர், இல்லை - இலர், (ஆதலால்) முழுவதும்-எல்லாம், கற்றனமென்று-கற்றுணர்ந்தோமென்று, களியற்க-(ஒருவன்) களியாதிருக்கக் கடவன், (ஏனெனில்) கல்லும்-மலைகளும், சிறு உளியால்-சிறுமையாகிய உளியாலே, தகரும்-சிதையும், கொல்-கொல்லனுடைய, உலை-உலைக்களத்திற்செய்த, கூடத்தினால் சம்மட்டியினால், தகரா-சிதையமாட்டா—எ-று.

கல்லுஞ்சிற்றுளியால்தகரும், கூடத்தினல் தகரா என்றது கல்விமிகுதி உடையவனால் வெல்லப்படாத ஒருவன் சிறிது உடையவனால் வெல்லப்படுதலுங் கூடுமெனப்பொருள் தருதலால் இதுபிறிது மொழிதலென்னும் அணி. இவ்வாறன்றி மிகுதியுங்கற்றோனுக்குத் தோன்றாதபொருளும் சிறிதுகற்றோனுக்குத்தோன்றுதலுங்கூடுமென உரைக்கினும் குற்றமன்று - உம்மைகள்மூன்றனுள் முதலிலுள்ள இரண்டும்முற்று-ஈற்றிலுள்ள ஒன்றும் உயர்வுசிறப்பு. கொல்-சொல்லால் அஃறிணை, பொருளால் உயர்திணை. மூன்றனுருபுகள் ஏதுப்பொருளன. கனங்குழாய் - பண்புத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. அளபெடை இன்னிசை.

(190.) தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க-தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லாம்
எற்றே யிவர்க்குநா மென்று.

(இ-ள்.) (ஒருவர்) தம்மின் - தம்மைப்பார்க்கினும், மெலியாரை-எளியவர்களை, நோக்கி - பார்த்து, தமது - தம்முடைய, உடைமை-பொருள், அம்மா-ஆச்சரியப்படும்படி, பெரிதென்று-அதிகமானதென்று, அகம்மகிழ்க-மனமகிழக்கடவர், தம்மினும் - தம்மைப்பார்க்கினும், கற்றாரை - படித்தவர்களை

நோக்கி-பார்த்து, நாம்கற்றதெல்லாம் - நாம்படித்ததெல்லாம், இவர்க்கு-இவருடையகல்விக்கு, எற்றுஎன்று-எத்தன்மையதென்று, கருத்துஅழிக-உள்ளம்வருந்துக—எ று.

ஐந்தனுருபிரண்டும் எல்லைப்பொருளன. நான்கனுருபும் அப்பொருளில்வந்தது. உடைமை-பண்பாகுபெயர். கற்றதெல்லாம்-ஒருமையிற்பன்மைவந்தவழுவமைதி. அம்மா-வியப்பிடைச்சொல். உம்மை - உயர்வுசிறப்பு. எற்று - என்-பகுதி, று-ஒன்றன்பால் குறிப்பு வினைமுற்றுவிகுதி, னகரம் றகரமானது சந்தி. ஏ ஈற்றசை. அகம் - இடவாகுபெயர். கருத்து தொழிலாகுபெயர். அன்றிக் கருது - பகுதி, இ-வினைமுதற்பொருள் விகுதி புணர்ந்து கெட்டுக்கெட்டபோது தகரம் இரட்டியதொழிலடியாகப் பிறந்தபெயரெனினும் பொருந்தும் அகமகிழ்க, கருத்தழிக திணைவழுவமைதி. நன்-சு ௬-கஅசு.

(191.) விலக்கிய வோம்பி விதித்தனவே செய்யும்
நலத்தகையார் நல்வினையுந் தீதே-புலப்பகையை
வென்றனநல்லொழுக்கி னின்றேம்பிறவென்று
தம்பாடு தம்மிற் கொளின்.

(இ-ள்.) விலக்கிய - (நூல்களால்) விலக்கியகருமங்களை, ஓம்பி-(செய்யாமல்) காத்து, விதித்தனவே - விதித்தகருமங்களையே, செய்யும்-செய்கின்ற, நலத்தகையார் - நன்மையாகிய தன்மையுடையார், புலப்பகையை - விடயமாகியபகையை, வென்றனம்-யாம் வென்றேம், நல் ஒழுக்கில்- நன்மையாகிய ஒழுக்கத்தில், நின்றேம் என்று - நின்றேமென்று, தம்பாடு - தமதுபெருமையை, தம்மில் - தமக்குள், கொளின்- மதித்துக்கொள்வாராயின், நல்வினையும் - (அவரது) நற்கருமமும், தீதே-தீமையுள்ளதே—எ-று.

உம்மை-உயர்வுசிறப்பு. ஏ-இரண்டனுள்முன்னது பிரிநிலை; பின்னது தேற்றம். ஒழுக்கு முதனிலைதிரிந்ததொழிற்பெயர்

பிற-அசை. புலம்-டு-சத்தம், பரிசம், உருவம், இரசம், கந்தம். வினை-சாதியொருமை.

(192. பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு-பிறர்பிறர்
சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல்.

(இ-ள்.) பிறரால் - மற்றவர்களால், பெருஞ்சுட்டு - மிகுதியுங் குறித்துப் பேசப்படுதலை, வேண்டுவான் - விரும்புவோன், யாண்டும்-எக்காலத்திலும், மறவாமே - மறவாமல், நோற்பது-ஆசரிப்பதாகிய, ஒன்று - ஒருசெய்கை, உண்டு - உளது, (அது) பிறர் - அந்நியர், பிறர் - பகைவர், (ஆகிய இருவகையாருடைய) சீரெல்லாம்- சிறப்பை எல்லாம், தூற்றி - பலரறியச்சொல்லி, சிறுமை - (அவர்களது) குற்றத்தை, புறங்காத்து - புறத்தில் (சொல்லாமல்) அடக்கி, யார்க்கும் - கல்வி செல்வமுதலியவற்றால் சிறந்த எவர்க்கும், யார்க்கும்-அச்சிறப்பில்லாதஎவர்க்கும், தாழ்ச்சி - தாழ்மையான சொற்களை, சொலல்-சொல்லுதல்—எ-று.

சிநேகருடைய சிறப்பைத்தானே புகழ்ந்து சிறுமைபுறங்காப்பானுதலின் அவரையொழித்துத்தன்னின்வேறாகியநொதுமல், பகை என்னும் இருவகையாருடைய சீர்தூற்றிச் சிறுமைகாத்தென்றும், அவ்விருவருள்ளும் வேற்றுமைதோன்ற பிறர்பிறரெனஇரட்டித்துங்கூறினார். சுட்டு-முதனிலைத்தொழிற்பெயர். உம்மைகள்-முற்று. மறவாமே-எதிர்மறைவினையெச்ம்.மற-பகுதி, வ் - சந்தி, ஆ - எதிர்மறை விகுதி, அனைத்துமொருபகுதி, மே - விகுதி. ஒன்று - எண்ணலளவையாகுபெயர்.தனது தாழ்ச்சியை உணாத்துஞ்சொற்களைத் தாழ்ச்சியென்றது காரியவாகுபெயர்.

நாலடியார்.

(193.) புல்லாப்புன் கோட்டிப் புலவ ரிடைப்புக்குக்
கல்லாத சொல்லுங் கடையெல்லாங் கற்ற
கடாஅயினுஞ் சான்றவர் சொல்லார் பொரு
படாஅ விடுபாக் கறிந்து. [ண்மேல்

(இ-ள்.) கடையெல்லாம் - கடையாயினரொல்லாம், புல்லா -(இலக்கணத்தோடு) பொருந்தாத, புன்கோட்டி - சிறுமையாகிய கூட்டத்தில, புலவரிடை-அறிவில்லாதவரிடத்து, புக்கு-போய், கல்லாத - தேர்ச்சியில்லாத பொருள்களை,சொல்லும்- எடுத்துப்பிரசங்கிப்பர், சான்றவர் - (நூற்கேள்விகளால்) நிறைந்தோர், கற்ற - (தமக்கு) தெரிந்தனவற்றை, கடாயினும்-(பிறர்) கேட்பினும், (அவரது அறிவு)பொருள்மேல் - (அவ்வினவிய)பொருளில், படா-பொருந்தாமல், விடுபாக்கு-விடுதலை, அறிந்து-தெரிந்து, சொல்லார் - சொல்லாதொழிவர்—எ-று.

பண்பாகுபெயராகிய கடையென்பது சொல்லால் அஃறிணையாயினும் பொருளாலுயர்திணையாய் எல்லாமென்னுஞ் சொல்லோடுகூடிப் பன்மையாயிருத்தலால் அதன் வினையாகிய சொல்லுமென்பதற்குச் சொல்லுவரெனப்பொருள்கூறப்பட்டது. கோட்டியிலுள்ளாரது அறிவின்புன்மையை அதன்மேலேற்றிப் புன்கோட்டிஎன்றார். புலவர் என்றது அறிவில்லாரை. அது புன்கோட்டியென்னுங் குறிப்பினால் விளங்கிற்று. கல்லாத, கற்ற, சான்றவர் மூன்றும் வினையாலணையும்பெயர். விடுபாக்கு இவ்வெதிர் காலவினையெச்சம் தொழிற்பெயர்ப் பொருள்படநின்றது. மற்ற இரண்டு வினையெச்சங்களும் அவர்கள் உண்பான் ஏன், அவர்கள் இங்குவருவான் ஏன் என அவ்வாறுவரும். அளபெடையிரண்டில் முன்னது அலகு பெற்றும் பெறாதும் வந்த இன்னிசையளபெடை, பின்னது இசைநிறையளபெடை.

(194) கற்றறிந்த நாவினர் சொல்லார்தஞ் சோர்வஞ்சி
மற்றைய ராவார் பகர்வர் பனையின்மேல்
வற்றிய வோலை கலகலக்கும் எஞ்ஞான்றும்
பச்சோலைக் கில்லை யொலி.

(இ-ள்.) பனையின்மேல்-பனையின்மேல், வற்றியஓலை-உலர்ந்தஓலைகள், கலகலக்கும்-கலகலவென்று ஒலிக்கும், எஞ்ஞான்றும்-எந்நாளிலும், பச்சோலைக்கு-பசுமையாகிய ஓலைகளுக்கு, ஒலிஇல்லை-ஒலித்தல்இல்லை, (அதுபோல கற்று-(கற்கவேண்டியவற்றை) கற்று, அறிந்த-உணர்ந்த, நாவினர்(பிறருக்கு அறிவுறுத்தலில் வல்லவர், தம்-தமது, சோர்வு-மறதிக்கு, அஞ்சி-பயந்து, சொல்லார்-(புலவர் சபையில் ஒன்றும்) பேசார், மற்றையராவார்-கற்றறியாதவர், பகர்வர்-சொல்வார்—எ-று.

தம்சோர்வு என்றது-மற்றையராவார்க்கு உளதாகுஞ்சோர்வுபோன்றதன்று. உயிர்களுக்கெல்லாம் பொதுப்படநின்ற உயிர்க்குணங்களி லொன்றாகியசோர்வை. சோர்வஞ்சி-இரண்டாம்வேற்றுமைத்தொகையாகவாயினும் நான்காம் வேற்றுமைத் தொகையாகவாயினும் கொள்க. கலகலக்கும்-ஒலிக்குறிப்பை உணர்த்திநின்ற இரட்டைக்கிளவியாகிய கலகல-பகுதி, க்-சந்தி, கு-சாரியை, உம்-விகுதி. உகரக்கேடு-சந்தி. செய்யுமென்னும் பெயரொச்சமே செய்யுமென்னும் வாய்பாட்டு வினைமுற்று ஆனதென்று கொள்க. உம்மை முற்று. பச்சோலை நன்-சுருக்-ஙசு-சு.

௫௪-ஆம் பாடம்.

(195) சக்கரச் செல்வம் பெறினும் விழுமியோர்
எக்காலுஞ்சொல்லார்மிகுதிச்சொல்-எக்காலும்
முந்திரிமேற் காணி மிகுவதேற் கீழ்தன்னை
இந்திரனா வெண்ணி விடும்.

(இ-ள்.) விழுமியோர்-சிறந்தோர், சக்கரச்செல்வம்-அரச ச்செல்வத்தை, பெறினும்-பெற்றாலும், எக்காலும்-எக்காலத் திலும், மிகுதிச்சொல் - வரம்புகடந்தசொல்லை, சொல்லார்-சொல்லார்கள், கீழ்-கீழ்மகன், முந்திரிமேல்- முந்திரிப்பொ ன்னுக்குமேல், காணி-காணிப்பொன், மிகுவதேல்-மிகுதலு ண்டானால், தன்னை-தன்னை, இந்திரனு-தேவராசனாக, எண் ணிவிடும்-நினைத்தேவிடுவன்—எ-று.

சக்கரம்என்பது அரசுத்தன்மையை உணர்த்தியகுறிப்புச் சொல். அன்றிச்சக்கரச் செல்வமென்பதற்குப் பெருமையா கிய செல்வமெனக்கூறினும் பொருந்தும். உம்மை மூன்ற னுள் முன்னையது உயர்வுசிறப்பு. பின்னைய இரண்டும் முற் று. முந்திரி-காணியி னன்குகூற்றில் ஒருகூறு. காணியாவ து ஒன்றின் எண்பது கூற்றில் ஒருகூறு. அவ்விரண்டும் எண் ணலளவை ஆகுபெயர். கீழ்-பண்பாகுபெயர். விழுமியோர் விழுமு-பகுதி, இ-சாரியை, ய்-சந்தி, ஆர்-விகுதி, உகரக்கே டு-சந்தி. விகுதி ஆ-ஓவானது-நன்-சுசூ. கசுள - எண்ணிவி டும், எண்-பகுதி, ண்-சந்தி, இ-சாரியை, விடு-துணிவுப்பொ ருள்விகுதி, அனைத்துமோர்பகுதி, உம்-விகுதி.ஆக என்பதன் ஈறு தொகுத்தல்.

பழமொழி.

(196) தமரோயுந்தம்மைப் புகழ்ந்துரைக்கும்போழ்தில்
அமரா ததனை யகற்றலே வேண்டும்
அமையாரும் வெற்ப வணியாரோ தம்மைத்
தமவேனுங் கொள்ளாக் கலம்.

(இ-ள்.) அமை-மூங்கில்கள், ஆரும்- செறிகின்ற, வெற்ப-மலைநாட்டரசனே, (ஒருவர்) தமவேனும்-தம்முடையனவாயி ருப்பினும், கொள்ளா- அணியக்கூடாத (பிடியாத) கலம்-அ ணிகளால், தம்மை - தம்மை, அணியாரோ- அலங்கரியாரோ,

(அதுபோல) தமரேயும்- உறவினரும், தம்மைப்புகழ்ந்து உரைக்கும்போழ்தில்-தம்மை (எதிரில்) புகழ்ந்துபேசுங்காலத்தில், அமராது-விரும்பாமல், அதனை-அப்புகழ்ச்சியை, அகற்றலே-ஒழித்தலே, வேண்டும்-தகுதி—எ-று.

உம்மை-உயர்வுசிறப்பு. ஏ-மூன்றனுள் முன்னது ஈற்றசை, பின்னையன தேற்றம் தமர் - தாம்-பகுதி, அர்-விகுதி, தா-தவ்வானது குறுக்கல்விகாரம். போழ்து என்பது பொழுது, என்பதன் விகாரம். இது போது எனவும் விகாரப்பட்டு வழங்கும். வேண்டும், தகும், படும் என்பன ஒருபொருட் கிளவியாய்த் தேற்றப் பொருள் தந்து நிற்கும் தொழிற்பெயர். (கிளவி-சொல்) தம-பொருளடியாகப்பிறந்த குறிப்புவினைமுற்று. தாம்-பகுதி, அ - பலவின்பால்விகுதி, தா-தவ்வானது விகாரம். அவ்வினையாலணையும் பெயரெனினும் ஒக்கும்.

அறநெறிச்சாரம்.

(197 பலகற்றேம் யாமென்று தற்புகழ வேண்டா
அலர்கதிர்ஞாயிற்றைக் கைக்குடையுங்காக்கும்
சிலகற்றார் கண்ணு முளதாம் பலகற்றார்க்
கச்சாணி யன்னதோர் சொல்.

(இ-ள்.) அலர் - (உலகெங்கும்) பரந்த, கதிர்-கிரணங்களையுடைய, ஞாயிற்றை - சூரியவெப்பத்தை, கைக்குடையும்-சிறுகுடையும், காக்கும்-தடுக்கும், (அதுபோல) பல-பலநூல்களை, கற்றார்க்கு-கற்றஅறிவுடையோர்க்கு, அச்சு - சக்கரங்கோத்தமரத்தில், ஆணி-(அச்சக்கரங்கழலாமல்செருகிய) ஆணியை, அன்னது-ஒத்ததாகிய. ஓர்சொல்-ஒருசொல், சிலகற்றார்கண்ணும் - சிலநூல்களைக்கற்றவரிடத்தும், உளதுஆம்-உள்ளதுஆகும், (ஆதலால்) யாம் - நாம், பல-பலவற்றை, கற்றேமென்று-கற்றறிந்தோமென்று, தற்புகழ-தற்புகழ்ச்சி செய்தல், வேண்டா-(அறிவுடையோரால்) வேண்டப்படா.

தற்புகழ-செய்வெனெச்சம் தொழிற்பெயர்ப்பொருள் ப டநின்றது. கற்றவைபல ஆதலின் தற்புகழ்ச்சியும் பலவாயி ன. தற்புகழ்ச்சி ஒருசொன்னீர்மைத்து. அன்றிப் பன்மையி னொருமைவந்த வழுவமைதியெனினும் பொருந்தும். ஞாயி று பொருளாகுபெயர். கை - சிறுமைப்பண்பை யுணர்த்தும் இடைச்சொல். அன்றிக்கைக்குடை கையிலுள்ள குடைஎ ன ஏழாம்வேற்றுமைத். தொகைநிலைத்தொடரெனினுங் குற் றம் அன்று. இங்கே காத்தல்-தடுத்தல், அது "குன்றமேந்திக் குளிர்மழைகாத்தவன்" என்பதனுலும் அறிக. உம்மைகளிர ண்டும் இழிவு சிறப்பு. உளவாமென்றும்பாடமாயின் தவ்வி குதி தொகுத்தல். அன்னது இடைச்சொலடியாகப்பிறந்தகு றிப்பு வினையாலணையும்பெயர்.

(198) மறுமனத்தா னில்லாத மாநலத்த வேந்தன்
உறுமனத்தா னாகி யொழுகின்-செறுமனத்தார்
பாயிரங் கூறிப் படைதொக்கா லென்செய்ப
ஆயிரங் காக்கைக்கோர் கல்.

(இ-ள்) மறுமனத்தான் - (உட்பகையாகிய) குற்றமுடை ய மனமுள்ள மந்திரியை, இல்லாத-உடையவனாயிராத, மா நலத்த-பெரியநற்குணங்களையுடைய, வேந்தன்-அரசன், உ றுமனத்தன்ஆகி - ஊக்கமுடையானாகி, (மிக்கமனமுடையா னாகி) ஒழுகின்-நடந்தானாயின், செறுமனத்தார் - கோபிக்கி ன்றமனமுடையபகைவர், பாயிரம்-முகவுரையை,(அதாவது பிரதாபத்தை) கூறி-எடுத்துச்சொல்லி, படைதொக்கால்-சே னையோடுகூடிவந்தெதிர்த்தால், என்செய்ப - (அவனை) யாது செய்வார்கள், (வெல்லமாட்டார்கள்) ஆயிரங் காக்கைக்கு- ஆயிரங்காக்கைகளுக்கு, ஓர்கல்-ஒருகல்லை(அவன்) ஒப்பான்.

மறுமனத்தான் பண்புத்தொகை நிலைத்தொடர். உறுமன த்தன் - உரிச்சொற்றொகாநிலைத்தொடர், அன்றிவினைத்தொ

கைநிலைத்தொடருமாம். செறுமனத்தார் வினைத்தொகை நிலைத்தொடர். செய்ப-செய்-பகுதி, ப-பலர்பால்விகுதி. அவை செய்பஎன அஃறிணைக்கண்வரின் செய் பகுதி, ப் எதிர்கால இடைநிலை, அ-விகுதி. நான்க னுருபு பகைப்பொருட்டு.

நன்னெறி.

(199) அறிவுடையா ரன்றி யதுபெறார் தம்பால்
செறிபழியை யஞ்சார் சிறிதும் - பிறைநுதால்
வண்ணஞ்செய்வாள்விழியேயன்றிமறைகுருட்டு
கண்ணஞ்சு மோவிருளைக் கண்டு. [க்

(இ-ள்) பிறைநுதால்-பிறைச்சந்திரனையொத்தநெற்றியை யுடையாளே, இருளைக்கண்டு - இருளைப்பார்த்து, வண்ணம் செய் - (முகத்துக்கு) அழகைச்செய்கின்ற, வாள்விழியே-ஒளியாகிய கண்களே, அன்றி-அல்லாமல், மறை-(பார்வை)மறைந்த, குருட்டுக்கண்-குருட்டுக்கண்கள், அஞ்சுமோ-பயப்படா, (அதுபோல) தம்பால்-தம்மிடத்து, செறிபழியை-நெருங்குகின்றபழியை, அறிவுடையார்- விவேகமுடையவரே, அன்றி-அல்லாமல்,அதுபெறார்-அவ்விவேகத்தைப்பெறாதவர், சிறிதும்அஞ்சார்-சிறிதும்பயப்படார்—எ-று.

காணுதலில்லாத குருட்டுக்கண்ணைக் கண்டென்றது இலக்கணை. பிறைநுதால் பிறைநுதல் என்னும் உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை எட்டனுருபெற்றது. ஏ-பிரிநிலை. இதனை அறிவுடையா ரென்பதனோடுங் கூட்டுக. உம்மை முற்றுப்பொருளும் இழிவுசிறப்புப்பொருளும்படகின்றது. ஓ எதிர்மறை. அன்றி அல்-பகுதி, து-சாரியை, இ-விகுதி, லகரதகரங்கள் றகரமானதும், உகரக்கேடும்-சந்தி, லகாரத்திரிபாகிய றகரம் னகரமானது மெலித்தல்.

(200) பொன்னணியும்வேந்தர் புனையாப்பெருங்கல்வி
மின்னுமறிஞராத்தா மற்றெவ்வார்-மின்னுமணி

பூணும் பிறவுறுப்புப் பொன்னே யதுபுனையாக்
காணுங்கண் ணொக்குமோ காண்

(இ-ள்) பொன்னே-பொன்னையொத்தவளே, மின்னும்-பிரகாசிக்கின்ற, அணி-ஆபரணத்தை, பூணும்-பூண்கின்ற, பிறஉறுப்பு-மற்றஅவயவங்கள், அது - அவ்வாபரணத்தை, புனையா-அணியாத, காணும்-காண்கின்ற, கண்-கண்களை, ஒக்குமோ-ஒவ்வா, (அதுபோல) பொன்-பொன்னுபரணங்களை, அணியும்-அணிகின்ற, வேந்தர்-அரசர்கள், புனையா - (அவ்வாபரணங்களை) அணியாத, பெருங்கல்வி-மிக்ககல்விச்செல்வம், மன்னும்-நிலைபெற்ற, அறிஞரை-அறிவுடையவர்களை, ஒவ்வார்-ஒப்பாகார்—எ-று.

முதலிலுள்ள பொன்கருவியாகுபெயர். ஈற்றிலுள்ள பொன் உவமையாகுபெயர். மன்னும் இடைச்சொலடியாகப் பிறந்த பெயரொச்சம். தாம், மற்று அசைநிலை. காண் முன்னிலையசைநிலை.

௩௫ - ஆம்பாடம் - குறள்.

கேள்வி

(201) செல்வத்துட்செல்வஞ் செவிச்செல்வமச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை.

(இ-ள்) செல்வத்துள்செல்வம் - செல்வங்களுக்குள்செல்வமாவது, (அதாவதுசிறப்புடையசெல்வம்) செவிச்செல்வம் காதினால்வருஞ்செல்வம், அச்செல்வம்-அந்தச்செல்வம், செல்வத்துள்எல்லாம் - மற்றஎல்லாச்செல்வங்களிலும், தலை-தலைமையுடையதாதலால்—எ-று.

காதினால்வருஞ்செல்வம்என்பது கேள்வியால் எல்லாப் பொருளையும் அறிதல் மற்றசெல்வங்கள் பொருளால் வருவன.

(202) இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல்.

(இ-ள்) (ஆக்கினைச்சக்கரம்நடத்தும்அரசர்க்கு) ஒழுக்கம்-நல்லொழுக்கத்தை, உடையார்வாய்ச்சொல் - உடையாரது வாயினிடத்துண்டாகுஞ்சொல், இழுக்கல் - வழுக்குதலை, உடைஉழி - உடையசேற்றுநிலத்தில், ஊற்றுக்கோல்அற்று - (நடப்போர்க்கு) ஊன்றுதற்குரிய கோல்போல்உதவுதலை உடையது—எ-று.

இழுக்கல் - பிறவினைத்தொழிற்பெயர். இழுகு - தன்வினைப்பகுதி; இழுக்கு-பிறவினைப்பகுதி, அல் - தொழிற்பெயர்விகுதி, உகரக்கேடுசந்தி. உடைய என்னும் குறிப்புப்பெயரெச்சம் விகுதிதொகுத்தலாய் உடைஎன நின்றது. ஊற்று முதனிலைதிரிந்ததொழிற்பெயர். அற்று அநுபந்தம் பகுபதமுடிபிற்காண்க. ஒழுக்கம் - ஒழுகு - பகுதி, அம் - தொழிற்பெயர்விகுதி,பகுதி - ஒற்று இரட்டியது விரித்தல்விகாரம், உகரக்கேடு - சந்தி. உயிர்த்தொடர், நெடிற்றொடர், மென்றொடர்க் குற்றியலுகரப் பகுதியோடு இந்த அம்விகுதி புணர்ந்தால் ஒழுக்கம், ஆட்டம்,நெருக்கம், எனப் பகுதிவிகாரப்பட்டேவரும். சிறுபான்மைமுற்றியலுகரப்பகுதியும் இவ்விகுதியோடு புணரும்போது பகுதிவிகாரப்படும். உ-ம். அற்றம். வாய் என்றது தீச்சொல்அறியாமையாகிய சிறப்புத்தோன்ற நின்றது.

(203) பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லாரிழைத்துணர்ந்
தீண்டிய கேள்வி யவர்.

(இ-ள்) இழைத்து-(பொருள்களைத்தாமும்) நுட்பமாக ஆராய்ந்து, உணர்ந்து-அறிந்து, ஈண்டிய- (அதன்மேலும்) நிறைந்த, கேள்வியவர்-கேள்வியையுடையார், பிழைத்து-பிற

ழ, உணர்ந்தும்-அறிந்தவிடத்தும், பேதைமை - அறியாமை யைத்தருஞ் சொற்களை, சொல்லார்- சொல்லார்கள்—எ-று.

பிழைத்து என்பது பிழைக்க என்னுஞ் செயவெனெச்சத் திரிபு. நன்-சு-சூ-கசசு. பேதைமை - காரியவாகுபெயர். பி ழைத்துணர்ந்தும்-என்பதிலும்மை. பிழைத்துணரார் என்னு ம் பொருள்தருதலால் எதிர்மறை. ஈண்டிய - ஈண்டு-பகுதி, இன் இறந்தகாலஇடைநிலை. அ-பெயரொச்சவிகுதி, இடைநி லை னகரக்கேடு - கடைக்குறை, ய்-சந்தி, இதற்குப் பிறவினை ஈட்டிய. கேள்வியவர்-கேள்வி-பகுதி, (தொழிற்பெயர்) ய்-சந்தி, அ-சாரியை, வ் சந்தி, அர்-பலர்பால்விகுதி.

(204) நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராத லரிது.

(இ-ள்) நுணங்கிய-நுட்பமாகிய, கேள்வியர்-கேள்வியை யுடையார், அல்லார்-அல்லாதவர், வணங்கிய-பணிந்த, வா யினர்ஆதல்-சொல்லையுடையாராதல், அரிது-கூடாது—எ-று.

கேட்கப்படுகிற பொருளினது நுண்மை கேள்விமேலேற் றப்பட்டது. பணிந்தசொல் என்பது பணிவைத்தோற்றுவிக் குஞ்சொல். வாய்-கருவியாகுபெயர். அல்லார்-குறிப்புவினை யா லணையும்பெயர்.

(205) நன்றென் றவற்றுள்ளு நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு.

(இ-ள்) முதுவருள்-(தன்னினும்) மிகுந்தவர் கூடியசபை யில், முந்து-முற்பட்டு, கிளவா-(ஒன்றை)சொல்லாத, செறி வு-அடக்கம், நன்று- (ஒருவனுக்கு இது) நல்லது, என்றவற் றுள்ளும் - என்றுசிறப்பித்துச்சொல்லுங் குணங்களெல்லா வற்றிலும், நன்றே-நல்லதே—எ-று.

தனது குறைவும், அவரது மிகுதியும், முன்னே சொன்னா ல் உண்டாகுந் தவறும், சொல்லாவிட்டால் அடையும் நன்

மையும் அறிந்தே அடங்கினமையால் அவ்வடக்கத்தினை நன்றென்றவற்றுள்ளு நன்றேயென்றார். ஏ - தேற்றம். இளவா- இளவாத என்பதன் ஈறு தொகுத்தல். என்றவற்றுள் - என்ற இடைச்சொல்லடியாகப்பிறந்த இறந்தகாலவினையாலணையும் பெயர். அது எழனுருபு ஏற்கும்போது இடையே அற்றுச் சாரியைபெற்றது. என்-பகுதி, ற்-இடைநிலை, அ-பலவின்பால்விகுதி. நன்று-ஒன்றன்பால் குறிப்புவினைமுற்று. நல்-பகுதி, று-விகுதி, லகரம்-றகரமானது சந்தி, அந்த றகரம் னகரமானது மெலித்தல். உம்மை-உயர்வுசிறப்பு.

(206) வியவற்க வெஞ்ஞான்றுந் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை.

(இ-ள்.) எஞ்ஞான்றும்-எந்நாளிலும், (அதாவது தான்மிக உயர்ந்தநாளிலும்) தன்னைவியவற்க-(ஒருவன்மதத்தால்)தன்னை நன்குமதியாதிருக்கக்கடவன், நன்றி-நன்மையை, பயவா-(தனக்கு)தராத, வினை-தொழில்களை, நயவற்க-(மானத்தால்(விரும்பாதிருக்கக்கடவன்—எ-று.

வியவற்க-விய-பகுதி, அல் - எதிர்மறைவிகுதி, வ் - சந்தி, அனைத்தும் ஒருபகுதி, க-வியங்கோள்விகுதி, லகரம் றகரமானது சந்தி. உம்மை முற்றும்மை. பயவாத பயன்என்னும்பெயரடியாகப் பிறந்த எதிர்மறைப்பெயரொச்சம்.

௩௬ - ஆம்பாடம் - நீதிநெறிவிளக்கம்.

(207) உறுதி பயப்ப கடைபோகா வேனும்
இறுவரை காறு முயல்க-இறுமுயிர்க்கும்
ஆயுண் மருந்தொழுக்க றீதன்றாலல்லனபோல்
ஆவனவு முண்டு சில.

(இ-ள்) சில-சிலகருமங்கள், அல்லனபோல்-முடியாதனபோலக்காணப்பட்டு, ஆவனவும் - (பின்) முடிவனவும், உண்

டு - உள, (ஆதலால்) இறும் உயிர்க்கும் - இறக்குமெனக் காணப்படும்உயிர்க்கும், ஆயுள்மருந்து-ஆயுளைத்தருமருந்தை (பிழைக்குமருந்தை) ஒழுக்கல் - (வாயில், விடுதல், தீது அன்று-குற்றம்அன்று, (அதுபோல) உறுதி - நன்மையை, பயப்ப-தரத்தக்கமுயற்சிகள், கடைபோகாஎனும் - முடியாவிட்டாலும், இறுவரைகாறும்-முடியுங்காலமட்டும், முயல்க-(அறிவுடையார்) முயற்சிசெய்யக்கடவர்—எ-று.

உறுதி-தொழிற்பெயர். உறு-பகுதி, தி - தொழிற்பெயர்விகுதி. அதுதொழிலாகுபெயராய் அடையும் பயனுக்காயிற்று. அன்றி-உறு-பகுதி, து-சாரியை, இ-செயப்படுபொருள்விகுதி உகரக்கேடுசந்தி. உம்மைநான்கனுள் முதலிலுள்ளஒன்றும் ஈற்றிலுள்ளஇரண்டும் இழிவுசிறப்பு; ஒழிந்த இடையிலுள்ள ஒன்றும் முற்று.

(208)நல்லா றொழுகின் றலைநின்றார் நல்கூர்ந்தும்
அல்லனசெய்தற்கொருப் படார் - பல்பொறிய
செங்கட் புலியே றறப்பசித்துந் தின்னுவாம்
பைங்கட் புனத்தபைங் கூழ்.

(இ-ள்) பல்பொறிய-பலபுள்ளிகளுள்ள, செங்கண்-சிவந்தகண்களையுடைய, புலிஏறு-ஆண்புலிகள், அறப்பசித்தும்-மிகப்பசித்தும், பைங்கண்-பசியஇடமுடைய, புனத்த-புனத்திலுள்ள, பைங்கூழ்-பயிரை, தின்னு-உண்ணு, (அதுபோல) நல்ஆறு-நல்வழியில், ஒழுக்கின்தலை-நடப்பதில், நின்றார்-நின்றவர்கள், நல்கூர்ந்தும்-வறுமைஅடைந்தும், அல்லன - பாவுங்களை, செய்தற்கு - செய்வதற்கு, ஒருப்படார் - உடன்படார்—எ-று.

ஒழுக்கு-முதனிலைதிரிந்ததொழிற்பெயர். நல்கூர்ந்து. நல்கூர்-பகுதி, த்-சந்தி, த்-இடைநிலை, உ-விகுதி, தகரம் நகரமானது மெலித்தல் விகாரம். இது நல்குரவு என்னும் பெயரடி

யாகப்பிறந்தது. ஆம்-அசை. உம்மைகள் இழிவுசிறப்பு. பொறிய, புனத்த-குறிப்புப்பெயரொச்சம். அன்றி முறையேபண்டியாகப்பிறந்தபெயர், பொருளடியாகப் பிறந்தபெயர் ஆகவாயினும், அவ்வாறுபிறந்த குறிப்புவினையா லணையும்பெயராகவாயினுங்கொண்டு, முடிக்குஞ்சொற்களாகியபுலி, பைங்கூழ்என்பவற்றோடு முறையே இருபெயரொட்டுப் பண்புத்தொகையாகமுடிக்கினும்பொருந்தும்.

(209.) சிறுமுயற்சி செய்தாங் குறுபயன் கொள்ளப்
பெறுமெனிற் றாழ்வரோ தாழார் - அறனல்ல
எண்மைய வாயினுங் கைவிட் டரிதெனினும்
ஒண்மையிற் றீர்ந்தொழுக லார்.

(இ-ள்) அறன்அல்ல-தருமம்அல்லாதவைகள் (பாவச்செயல்கள்) எண்மையஆயினும்-(செய்தற்கு) எளியனவாயிருப்பினும், கைவிட்டு - (செய்யாமல்) நீக்கி, அரிதுஎனினும் - (செய்ய) அருமையுடையதாயினும், ஒண்மையில்-தருமவழியினின்றும், தீர்ந்து-நீங்கி, ஒழுகலார்-நடவாதவர்கள், சிறுமுயற்சி-சிறுமையாகியமுயற்சிகளை, செய்து-செய்துமுடித்து, ஆங்கு-அம்முயற்சியில், உறுபயன்-மிக்கபயன், கொள்ளப்பெறும்எனில்-கொள்ளப்படுமானால், தாழ்வரோ - தாமசஞ்செய்வரோ, தாழார்-தாமசஞ்செய்யார்—எ-று.

உம்மைகள்இரண்டில் முன்னது இழிவுசிறப்பு. பின்னது உயர்வுசிறப்பு. ஒழுகலார்-ஒழுகு. பகுதி-அல்-எதிர்மறை விகுதி, உகரக்கேடு-சந்தி, அனைத்தும்ஒருபகுதி, ஆர் பலர்பால் விகுதி, விகுதிஆ - முதற்குறை. ஓ-வினா.

நாலடியார்.

(210.) ஆடுகோ டாகி யதரிடை நின்றதூஉம்
காழ்கொண்டகண்ணே களிறணைக்குங்கந்தாகும்

வாழ்தலு மன்ன தகைத்தே யொருவன்றான்
தாழ்வின்றித் தன்னைச் செயின்.

(இ-ள்) ஆடுகோடுஆகி - (பிறர்ஆட்டுதலால்)ஆடுகின்றகொம்பாகி, அதரிடை-வழியில், நின்றதும் - நின்றமரக்கன்றும், காழ்கொண்டகண்ணே - வயிரங்கொண்டஇடத்தே, களிறு-யானையை, அணைக்கும்-சேர்த்துக்கட்டும், கந்துஆகும் - தறியாகும், ஒருவன்-ஒருவன், தாழ்வு-(நன்முயற்சியில்) தாமசஞ்செய்தல், இன்றி-இல்லாமல், தன்னைச்செயின் - தன்னைச்செய்துகொள்வானானால், வாழ்தலும்-செல்வமுடையவனாகுதலும், அன்ன-அதுபோன்ற; தகைத்தே - தன்மையுடையதே—எ-று.

நின்றது இறந்தகாலவினையாலணையும்பெயர். அளபெடை இன்னிசை. உம்மைகளிரண்டில் முன்னது இழிவு சிறப்பு. பின்னது இறந்ததுதழீஇயது. முன்னுள்ள ஏ-பிரிநிலை. பின்னுள்ள ஏ-தேற்றம். தான் அசை. அன்ன இடைச்சொல்லடியாகப்பிறந்த குறிப்புப்பெயரொச்சம், தகைத்துஎன்னும் பண்படியாகப்பிறந்த வினைக்குறிப்பு முற்றினது பகுதியோடுமுடிந்தது.

(211.) உறுபுலி யூனிரை யின்றி யொருநாள்
சிறுதேரை பற்றியுந் தின்னும்-அறிவினால்
காற்றொழி லென்று கருதற்க கையினால்
மேற்றொழிலு மாங்கே விடும்.

(இ-ள்) உறுபுலி-(வலி)மிகுந்தபுலி, ஊன்இரை-இறைச்சியாகியஉணவு, இன்றி-இல்லாமல், ஒருநாள் -(கிடையாத)ஒருநாளில், சிறுதேரைஉம் - சிறுதவளையையும், பற்றி-பிடித்து, தின்னும்-உண்ணும், (அதுபோல) அறிவினால் - (உனக்குள்ள) அறிவின்மிகுதியால், கால்தொழிலென்று-காலால்செய்யப்படுந்தொழிலென்று, (சிறுமைத்தொழிலென்று) கரு

தற்க - அவமதியாதிருக்கக்கடவாய், கையினல் - கையினல் செய்யப்படும், மேல்தொழிலும் - மேன்மையாகியதொழிலும், ஆங்கே - அச்சிறுதொழில்செய்ய உடன்பட்டஇடத்திலேயே, மிகும்-உயரும்—எ-று.

கால்-சிறுமையையும், கை-மேன்மையையும் உணர்த்திய குறிப்புச்சொற்கள், உம்மையைத் தேளாயென்பதனேடுகூட்டுக. அது-இழிவுசிறப்பு. பின்னுள்ளஉம்மை இறந்தது தழீஇயதனேடு உயர்வு சிறப்புப்பொருள்படநின்றது. ஏ-தேற்றம்.

(212.) ஈனமா யில்லிருந் தின்றி விளியினும்
மானந் தலைவருவ செய்பவோ-யானை
வரிமுகம் புண்படுக்கும் வள்ளுகிர் நோன்ருள்
அரிமா மதுகை யவர்.

(இ-ள்) யானை-யானையினது, வரிமுகம் -(கோலம்) எழுதியமுகத்தை, புண்படுக்கும்-புண்படச்செய்யும், வள்உகிர்-கூர்மையாகியநகங்களமைந்த, நோன்தாள்- வலியகால்களையுடைய, அரிமா -சிங்கத்தையொத்த, மதுகையவர் - (அறிவின்) வலியுடையார், ஈனமாய்-வறியராய், இல்இருந்து-வீட்டிலிருந்து, இன்றி -(உணவுமுதலியன) இல்லாமல், விளியினும்-இறக்கவரினும், மானம்-குற்றம், தலை-தம்மிடத்து, வருவ-உண்டாகுஞ்செய்கைகளை, செய்பவோ-செய்யார்கள்—எ-று.

உம்மை-உயர்வுசிறப்பு. ஓ-எதிர்மறை. வரிமுகம் என்பதற்கு அங்குசத்தால் தாக்கியவடு அமைந்த முகம்எனினும் அமையும். இது கவிகள் சாதிபற்றிய அடையாய்க் கூறும்செய்யுள் வழக்கு. இவ்வாறன்றி இரேகை அமைந்த முகம் எனினும் பொருந்தும். அரிமாஇருபெயரொட்டுப்பண்புத்தொகை

௩௭ - ஆம்பாடம் - குறள்.

(213.) உடைய ரெனப்படுவ தூக்க மஃதில்லார்
உடைய துடையரோ மற்று.

(இ-ள்)உடையர் எனப்படுவது (ஒருவனை) உடையானென்றுசொல்லச் சிறந்தது, ஊக்கம்-தைரியம், அஃதுஇல்லார்-அத்தைரியம்இல்லாதார், மற்றுஉடையது - மற்றஉடையபொருளையும், உடையரோ-உடையாராவரோஆகார்—எ-று.

மற்றஉடையபொருளாவது முன்னே பெற்றிருந்தபொருள். இறந்தது தழீஇய எச்சவும்மை விகாரத்தாற் றொக்கது. எனப்படுவது இடைச்சொலடியாகப்பிறந்த செயப்பாட்டுவினையாலணையும்பெயர். மற்று பிறிதென்னும் பொருள்படவந்தது. ஓ-எதிர்மறை.

(214.)உள்ள முடைமை யுடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்.

(இ-ள்-)உள்ளம்-தைரியத்தை, உடைமை-உடைத்தாயிருத்தலே, உடைமை - (ஒருவனுக்கு) நிலைபெற்ற உடைத்தாயிருத்தல், பொருள்உடைமை(மற்ற)பொருளை உடைத்தாயிருத்தல், நில்லாது - நிலைபெறுமல், நீங்கிவிடும் - நீங்கிப்போம்—எ-று.

உள்ளம் பொருளாகுபெயர், உடைமைமூன்றும் குறிப்புத்தொழிற்பெயர். நில்லாது- நில்-பகுதி, ல்-சந்தி, ஆ-எதிர்மறைவிகுதி, அனைத்தும் ஒருபகுதி, த் - எழுத்துப்பேறு, உ-வினையெச்சவிகுதி, அன்றி வினைமுற்று வினையெச்ச மானதெனக்கொள்ளினும் பொருந்தும்; து-வினைமுற்றுவிகுதி.

(215.)வெள்ளத் தனைய மலர்நீட்ட மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு.

(இ-ள்.) வெள்ளத்துஅனைய (நின்ற) நீரினது அளவினஆம் மலர்நீட்டம் - நீர்ப்பூக்களினுடையதாள்களினது நீளங்கள் மாந்தர்தம் - (அதுபோல) மக்களது, உள்ளத்துஅனையது-தைரியத்தினுடைய அளவினது ஆம், உயர்வு- அவரதுஉயர்ச்சி, (பொருள்படைகளால்மிகுதல்)—எ-று.

மலர் முதலாகுபெயர். வெள்ளத்தனைய, உள்ளத்தனையஇரண்டும் வருமொழிப்பகுதியோடு ஆறும்வேற்றுமைத்தொகைநிலைத்தொடர்களாய் முடிந்தன. பொருள்பண்புத்தற்கிழமை. அனைய, அனையது இரண்டும் இடைச்சொலடியாகப்பிறந்த குறிப்புவினைமுற்று. நீட்டம் தொழிற்பெயர். மாந்தர்நித்தியபகுவசனம், மக்களென்பதும்அது.

(216.) உள்ளுவ தெல்லா முயர்வுள்ளன் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து.

இ-ள். உள்ளுவது எல்லாம்-(அரசராயினார்) கருதுவதெல்லாம், உயர்வு -(தம்) உயர்ச்சியையே, உள்ளல் - கருதக்கடவர், அது-அவ்வுயர்ச்சி, தள்ளினும் - (ஊழ்வகையால்கூடாதபடி) தள்ளப்படினும், தள்ளாமை - நீக்கப்படாமையாகிய நீர்த்து-தன்மையுடையது—எ-று.

உம்மை-இழிவுசிறப்பு. உள்ளுவதெல்லாம் - ஒருமையிற்பன்மைவந்த வழுவமைதி. உள்ளல்-வியங்கோள் வினைமுற்று உள்-பகுதி, ள்-சந்தி, அல்-விகுதி. மற்று-அசை. தள்ளாமை எதிர்மறைத்தொழிற்பெயர். அது நீர்த்துஎன்னுங் குறிப்புவினைமுற்றின் பகுதியோடு பண்புத்தொகை நிலைத் தொடராகமுடிந்தது.

(217.) அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

இ-ள். அருமை உடைத்துஎன்று (தமதுசிறுமையை நோக்கிநாம் இவ்வினைமுடித்தல்) அருமைஉடையதென்று கருதி, அசாவாமைவேண்டும்-தளராதிருத்தல்வேண்டும், பெருமை (அதைமுடித்தற்குஏற்ற) பெருமையை, முயற்சிதரும் (தமக்கு) முயற்சிஉண்டாக்கும்—எ-று.

அசாவாமை-எதிர்மறைத்தொழிற்பெயர். அசா-பகுதி, வ் சந்தி, ஆ-எதிர்மறைவிகுதி, அனைத்துமோர்பகுதி, மை-விகுதி.

(218.) தாளாண்மை யென்னுந் தகைமைக்கட் டங்கிற்
வேளாண்மை யென்னுஞ் செருக்கு [றே

(இ-ள்.) தாளாண்மை என்னும் - முயற்சியென்றுசொல்லப்படுகின்ற, தகைமைக்கண்-உயர்ந்தகுணத்தினிடத்தே, தங்கிற்று-நிலைபெற்றது, வேளாண்மைஎன்னும்- (யாவர்க்கும்) உபகாரஞ் செய்தலென்று சொல்லப்படுகிற, செருக்கு - மேம்பாடு—எ-று.

தங்கிற்று-ஒன்றன்பாற்படர்க்கைவினைமுற்று. தங்கு-பகுதி, இன்-இறந்தகால இடைநிலை, று-விகுதி; உகரக்கேடும்னகரம் றகரமானதும்-சந்தி.

ரு௮-ஆம்பாடம்.

(219.) இன்பம்விழையான் வினைவிழைவான்றன்கேளி
துன்பந் துடைத்தூன்றுந் தூண். [ர்

(இ-ள்) இன்பம் - (தனக்கு) இன்பத்தை, விழையான்-விரும்பானாகி, வினை-வினைமுடித்தலையே, விழைவான்-விரும்புவோன், தன்கேளிர்- தன்சுற்றத்தாராகியபாரத்தினது, துன்பம்துடைத்து-துன்பத்தைநீக்கி, ஊன்றும்தூண்-அதனைத்தாங்குந்தூணாம்—எ-று.

விழையான்-வினைமுற்றுவினையெச்சமாய் விழைவானென்னும் வினையாலணையும்பெயரோடுமுடிந்தது. கேளிர்-கேள், பகுதி, இர்-பலர்பால்விகுதி. விழைவானை ஊன்றுந்தூண் என உருவகஞ்செய்தாற்போலக் கேளிரைப் பாரமென உருவகஞ்செய்யாது சும்மா கூறினமையால் இது ஏகதேசவுருவகவணி,

(220.) முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

(இ-ள்) முயற்சி-(அரசரிடத்துள்ள) முயற்சி, திருவினை-(அவரது) செல்வத்தை, ஆக்கும்-வளர்க்கும், முயற்று-முயற்சி, இன்மை-இல்லாமை, இன்மை-வறுமையை, புகுத்திவிடும்-அடைவித்துவிடும்—எ-று.

முயற்று-முயல்-பகுதி, து-தொழிற்பெயர்விகுதி, லகரமும், தகரமும் றகரமானதுசந்தி. இவ்விகுதிபெரும்பாலும் முயன்றது, முயல்கிறது, முயல்வது எனமுக்காலஉடன்பாட்டிலும், முயலாததுஎன எதிர்மறையிலும் வரும். இன்மைஇரண்டில் முன்னையது குறிப்பெதிர்மறைத் தொழிற்பெயர். பின்னையது பண்புப்பெயர். புகுத்திவிடும். புகுத்து பிறவினைப் பகுதி, இ-சாரியை, விடு-துணிவுப்பொருள்விகுதி, உகரக்கேடு சந்தி, அனைத்தும் ஒருபகுதி, உம்-விகுதி, உகரக்கேடுசந்தி இதுபெயரொச்சவினையே வினைமுற்றுனது.

(221.) வெள்ளத் தனைய விடும்பை யறிவுடையா ன
உள்ளத்தி னுள்ளக் கெடும்

(இ-ள்) வெள்ளத்து அனைய - வெள்ளத்தைஒத்த, இடும்பை-(முடிவில்லாத) துன்பங்களெல்லாம், அறிவுஉடையான் அறிவையுடையவன், உள்ளத்தின்-(தனது) உள்ளத்தால், உள்ள - (ஒருதுன்பத்தை) நினைக்க, கெடும் - (அம்மட்டிலே) கெடும்—எ-று.

ஒருதுன்பத்தை நினைத்தலாவது-அது ஒரு கோட்பாடேஅன்றி வேறில்லையென்றுகருதுதல். அனையஇடைச்சொல்டியாகப்பிறந்தகுறிப்புப் பெயரொச்சம். உள்ளத்தின் ஐந்தனுருபுகருவிப்பொருளில்வந்தது. உடையான் குறிப்புவினைப்பெயர்.

(222.) பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்
தாள்வினை யின்மை பழி.

இ-ள். பொறி-(பயனைத்தருவதாகிய) விதி, இன்மை-இல்லாமை, யார்க்கும்-எவருக்கும், பழிஅன்று - பழிப்பாகாது,

அறிவு - அறியவேண்டியவற்றை, அறிந்து-தெரிந்து, ஆள்வினை-முயற்சி, இன்மை-செய்யாதிருத்தலே, பழி-பழிப்பாம்.

பொறியின்மை, ஆள்வினையின்மை எழுவாய்த்தொடர்நிலைத்தொடர் வினைமுதற்பொருளில்வந்த ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடரும் ஆம். பொருள்-தொழிற்பண்புத்தற்கிழமை. இன்மைகள் குறிப்புத்தொழிற்பெயர்கள். யார் என்பது யாவரொன்னும் வினைப்பெயரின்மரூஉ. உம்மை முற்று.

(223.) உரமொருவற் குள்ள வெறுக்கை யஃதில்லார்
மரமக்க ளாதலே வேறு.

(இ-ள்) ஒருவற்கு-ஒருவனுக்கு, உரம் உறுதியாகியஅறிவானது, உள்ளவெறுக்கை-தைரியத்தினதுமிகுதி, அஃது - அத்தைரியமிகுதி, இல்லார்-இல்லாதவர், மரம் - மரங்களாவார், வேறு-(சாதிமரங்களோடுஇம்மரங்களிடத்தில்) வேற்றுமை வடிவு, மக்கள்ஆதலே - மனிதர்வடிவாயிருத்தலே, (வேறில்லை —எ-று.

உறுதியறிவு இல்லாதவரிடத்தில் மக்களுக்குரிய நல்லறிவும், காரியமுயற்சியுமில்லாமையைப்பற்றி மரமென்றார். உள்ளவெறுக்கை ஆறும்வேற்றுமைத்தொகைநிலைத் தொடர்; உள்ளத்தினது வெறுக்கைஎனவிரியும். பொருள் பண்புத்தற்கிழமை. ஏ-தேற்றம்.

(224.) ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்.

(இ-ள்) ஊழையும்-(பயனைவிலக்குவதாகிய) ஊழையும், உப்பக்கம்காண்பர். புறங்காண்பார், உலைவுஇன்றி- (அதுவிலக்குவதற்கு) இளைத்தல்இல்லாமல், தாழாது-தாழ்வற, உஞற்றுபவர்-முயற்சிசெய்பவர்—எ-று.

உம்மை-உயர்வுசிறப்பு. ஊழை உப்பக்கங்காண்பர் என்னுந்தொடரில் உப்பக்கங்காண்பரொன்பதை- ஒருசொல்லின் த

ன்மையதாகக்கொள்ளாமல் உப்பக்கத்தைக் காண்பரென இரண்டாம்வேற்றுமை விரிக்கில் ஊழைஎன்பதிலுள்ள ஐயுருபை அதுஉருபாகத் திரித்துக்கொள்க. ஊழ் - இருவினைப்பயன் செய்தவனையேசென்று அடைவதற்கு ஏதுவாகியமுறை.

நீதிநெறி விளக்கம்.

(225.) மனத்த கறுப்பெனி னல்ல செயினும்
அனைத்தெவையுந்தீயவேயாகும்-எனைத்துணையும்
தீயவே செய்யினு நல்லவாக் காண்பவே
மாசின் மனத்தி னவர்.

(இ-ள்.) கறுப்பு - (ஒருவன்மேல்) கோபங்கள், மனத்தளவின்-(தம்)மனத்திலுள்ளன ஆனால், நல்ல - (அவன்) நற்கருமங்களை, செய்யினும்-செய்தாலும், அனைத்துஎவையும்-அவையெல்லாம், தீயவே-தீக்கருமங்களாகவே, ஆகும்-தோன்றும், மாசுஇல்(ஒருவன்மேல்) வெறுப்பாகியகுற்றமில்லாத, மனத்தினவர்-மனமுடையார், எனைத்துணையும் - (அவன்) எவ்வளவு மிகுதியாக, தீயவே- தீக்கருமங்களையே, செய்யினும்- செய்தாலும், நல்லஆ-நற்கருமங்களாக, காண்ப-கருதுவார்கள்.

முதலிலுள்ள உம்மை உயர்வுசிறப்பு. ஈற்றிலுள்ளஉம்மை இழிவுசிறப்பு. இடையிலுள்ள உம்மைகளிரண்டும் முற்று. அனைத்து எவை பன்மையில் ஒருமை வந்தவழுவமைதி. முன்னே உள்ள ஏ - இரண்டும் தேற்றம்• பிரிநிலையுமாம். பின்னேயுள்ள ஏ-ஈற்றசை. ஆக என்பதன் ஈறு தொகுத்தலாய் ஆ-எனநின்றது. [ச்சி

226. மெய்யுணர்ந்தார்பொய்மேற்புலம்போக்கார்மெய்யுணர்க்கவருதல்கண்ணுப்புலங்காப்பார்.-மெய்யுணர்ந்தார்
காப்பே நிலையாப் பழிநாண நீள்கதவாச்
சேர்ப்பார் நிறைத்தாழ் செறித்து.

(இ-ள்.) மெய்யுணர்ந்தார் - உண்மையை அறிந்தவர்கள், பொய்மேல்-நிலையில்லாவிடயங்களில், புலம்போக்கார்-ஐம்புலன்களைச்செலுத்தாதவராகி, மெய்உணர்ச்சி - மெய்ஞ்ஞானம், கைவருதல்-சித்திப்பதே, கண்ணு-கருத்தாக, புலங்காப்பார் - அப்புலன்கள் ஐந்தையுங்காப்பார்கள், மெய்உணர்ந்தார்-அந்தஉண்மைஅறிந்தோர், காப்பே-(புலன்களை)அடக்குதலே, நிலையா-வாசற்காலாகவும்; பழிநாணம் - பழிக்குநாணுதலே, நீள்கதவா-நெடுங்கதவாகவும், நிறைத்தாழ் - நிறையாகிய தாழக்கோலை, செறித்துச்சேர்ப்பார்-நெருக்கிச்சேர்ப்பார்—எ-று.

நிறை-விடயங்களில் மனம்செல்லாமல் நிறுத்தல். நிறு-பகுதி, ஐதொழிற்பெயர்விகுதி, உகரக்கேடு-சந்தி. அல்லது அச்சொல்லுக்கு நிறுத்தலுடையதன்மை எனப்பொருள்கொண்டு- நிறுபகுதி, ஐ-வினைமுதற்பொருள்விகுதி, உகரக்கேடு சந்தி யெனினும் பொருந்தும். தேற்றஏகாரத்தை-கைவருதலென்பதனோடும், நாணமென்பதனோடுங்கூட்டுக.

அறநெறிச்சாரம்.

(227.) தன்னைத்தா னெஞ்சங் கரியாகத் தானடங்கின்
பின்னைத்தா னெய்தாப் பயனில்லை- தன்னைக்
குடிகெடுக்கு நெஞ்சிற்குக்குற்றேவல்செய்யின்
பிடிபடுக்கப் பட்ட களிறு.

(இ-ள்.) தன்னை - (ஒருவன்) தனக்கு, நெஞ்சம் - மனம், கரியாக - சாட்சியாக, தான்அடங்கின் - (ஐம்புலஆசையுங்கெட) தான்அடங்கி ஒழுகுவானானல், பின்னை - பின்பு, தானெய்தா-தான்பெருத, பயன்-பெரும்பயன், இல்லை - இலது ஆகும்,(அவ்வாறுசெய்தல்ஒழிந்து) தன்னைகுடிகெடுக்கும்-தன்னைமுதலறக்கெடுக்கும், நெஞ்சிற்கு-மனத்துக்கு, குற்றேவல்செய்யின் - சிறுமையாகிய ஏவல்களைச்செய்தால், பிடிபடு

க்கப்பட்ட - (பாகனுல்) பிடித்தலில்அகப்படுத்தப்பட்ட, களிறு-யானையைஒப்பாவான்—எ-று.

செய்யுந்தீமைமிகுதிபற்றிக்குடிகெடுக்கும்நெஞ்சென்ருர். பிடிபடுக்கப்பட்ட களிற்றை ஒத்தலாவது யானைதன்வசமில்லாமல் பாகன் துகுறிப்பின்வழியேசென்றுஅலேந்து மகிழ்ச்சியில்லாமல் துன்பப்படுவதுபோல மனஞ்சென்ற வழியே சென்று அலேந்து மகிழ்ச்சியில்லாமல்பலதுன்பங்களையும் அநுபவித்தல். நரகுக்கேதுவாகிய தீவினையாதலால் அச்செயல் குற்றேவலெனப்பட்டது. முன்னுள்ளதான் அசை. தன்னை-ஐயுருபை நான்கனுருபாகத் திரித்துக்கொள்க. நெஞ்சம் இடவாகுபெயர். பிடி - முதனிலைத்தொழிற்பெயர்.

(228) நின்னை யறப்பெறு கிற்கிலே ன்னெஞ்சே
பின்னையான் யாரைப் பெறுகிற்பேன் - நின்னை
அறப்பெறு கிற்பேனேற் பெற்றேன்மற் றீண்டு
துறக்கந் திறப்பதோர் தாள்.

(இ-ள்.) யான்-நான், நல்நெஞ்சே-நன்மையாகிய மனமே நின்னை-உன்னை, அறப்பெறுகிற்கிலேன்-முற்றும் (வசப்பட) பெறவலியில்லேன், பின்னையாரை - வேறேயாவரை, பெறுகிற்பேன்-பெறமாட்டுவேன், நின்னை - உன்னை, அறப்பெறுகிற்பேனேல்-முற்றும் (வசப்பட) பெறமாட்டுவேனுயின், ஈண்டு-இவ்வுலகினில், துறக்கம்-முத்தியுலகத்தின்கதவை, திறப்பது-திறப்பதற்குக்கருவியாகிய, ஓர்தாள்-ஒருதாழக்கோலே, பெற்றேன்-அடைந்தேன்—எ-று.

வசப்படாதநெஞ்சை தீநெஞ்சேஎன்னுமல் நன்னெஞ்சேயென்றது வசப்படும்படி புகழ்ந்துரைத்தபடி. பெற்றேன் என்றது தெளிவினுல் எதிர்காலம் இறந்தகாலமாகவந்தகாலவழுவமைதி. நன். சு. ௬, ௧௩௯. பின்னை -பிறிதென்னும்பொருள்படநின்ற இடைச்சொல். இது உம்மை என்ருற்போல ஐ

சாரியைபெற்றது. பெறுகிற்கிலேன் பெறு-பகுதி, கில்-ஆற்றலையுணர்த்தும்விகுதி, அனைத்தும்ஒருபகுதி, கு-சாரியை, இல்-எதிர்மறைவிகுதி, லகரம் றகரமானதும், உகரக்கேடும் சந்தி, இவையனைத்தும் ஒருபகுதி, ஏன் - தன்மையொருமைவிகுதி.

(229) உள்ளூ ரிருந்துந்தம் முள்ளமறப் பெற்றாரேல்
கள்ளவிழ்பூஞ் சோலையாங் காட்டுளார் காட்டுள்ளும்
உள்ள மறப்பெறு கல்லாரே னாட்டுள்ளும்
நண்ணி நடுவூருள் ளார்.

(இ-ள்.) உள்ளூர்-ஊரினதுஉள்ளிடத்தில், இருந்தும்-வசித்தும், தம்உள்ளம் - தமதுமனத்தை, அறப்பெற்றாரேல் - முற்றும் வசப்பட பெற்றாரானால், (இல்லறத்தாராயினும் அவரே) கள்அவிழ் - தேன்ஒழுகுகின்ற, பூ - மலர்களையுடைய, சோலைஆம்-சோலைஆகிய, காட்டுள்ளார் - காட்டில்வசிக்குமுனிவரோடொப்பார், காட்டுள்ளும்-காட்டில்இருந்தும், உள்ளம்-மனத்தை, அறப்பெறுகல்லாரேல்-முற்றும் (வசப்பட பெறாதவராயின், (அவரே) நாட்டுள்ளும்- நாட்டினுள் ளிடத்தும், நண்ணி-சேர்ந்து, நடுஊர்-ஊர்நடுவில், உள்ளார் - உள்ளஇல்லறத்தாரோடொப்பார்—எ-று.

உள்ளூர், நடுவூர்என்பனஇலக்கணப்போலி. உம்மைகள் மூன்றனுள் இடையிலுள்ளது உயர்வுசிறப்பு; மற்றவை இழிவுசிறப்பு. பெறுகல்லார் பெறு-பகுதி,கு-சாரியை, அல்-எதிர்மறைவிகுதி, அனைத்தும்ஒருபகுதி, ஆர்-பலர்பால்விகுதி. இச்சொல்லில் லகரம் இயற்சீர்வெண்டளைகுறித்துவந்தவிரித்தல்விகாரம்.

ஔவையார் நான்குபயனையும் ஒருபாவி
லடக்கியது.

(230) ஈதலறந்தீவினைவிட் டீட்டல்பொருளெஞ்ஞான்
காத லிருவர் கருத்தொருமித்-தாதரவு [றும்

பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

(இ-ள்.) ஈதல் - (இரப்பவர்க்கு) கொடுத்தலே, அறம்-தருமமெனப்படும், தீவினைவிட்டு - பாவத்தொழிலைவிட்டு, ஈட்டல் - (நல்வழியில்) தேடுவதே, பொருள்-பொருளெனப்படும், இருவர்-மனையாளும் கணவனும், எஞ்ஞான்றும் - எந்நாளிலும், காதல்-விருப்பத்தை, கருத்து-மனத்தில், உறவைத்து - மிகுதியும்வைத்து, ஆதரவுபட்டதே- அன்புடையவர்களாயிருப்பதே, இன்பம்-இன்பமெனப்படும், பரனை-கடவுளை நினைந்து-சிந்தித்து, இம்மூன்றும்-இந்தஅறமுதலிய மூன்றையும், விட்டதே-விட்டுஞானவழியில்நிற்பதே, பேர்இன்பவீடு (எல்லாஇன்பங்களிலும்) பெருமையாகிய இன்பத்தைத்தருகின்றமுத்திஎனப்படும்—எ-று.

ஏகாரம்இரண்டும்-பிரிநிலை. பட்டதேஎன்பதிலுள்ள ஏகாரத்தைஈதல், ஈட்டல்என்பவற்றோடுங்கூட்டுக. உம்மைகளிரண்டும் முற்று.

குறள்.

(231) சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு.

இ-ள். சிறப்பு-வீடுபேற்றையும், ஈனும்-தரும், செல்வமும் - (சுவர்க்கமுதலிய) செல்வத்தையுய், ஈனும் - தரும், (ஆதலால்) உயிர்க்கு-உயிர்களுக்கு, அறத்தின்ஊங்கு- அறத்தின்மிக்க, ஆக்கம்-விருத்தியைத்தருவது, எவன்-யாது—எ-று.

உயிர்என்றது-சிறப்பையும், செல்வத்தையும் அடைவதற்கு உரியமக்களுயிரா. சிறப்புஈனும் என்றவிடத்து எதிரதுதழீஇய எச்சஉம்மை. அறத்தினூங்கு - என்பதை அறத்தின்ஊங்கு என்றாயினும், அறத்தின் நூங்கு என்றாயினும் பிரிக்க. வருமொழிகளிரண்டும் மிகுதிப் பொருள்படநின்ற இடைச்

சொற்கள். அளபெடை அலகுபெற்றும், பெருதும்வந்த இன்னிசை அளபெடை. ஐந்தனுருபு எல்லைப்பொருளது.

(232) அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு.

(இ-ள்.) அறத்தின் நூங்கு - (ஒருவனுக்கு) அறஞ்செய்தலின்மேற்பட்ட, ஆக்கம் - விர்த்தியைத்தருவதும், இல்லை - இலது, அதனை-அவ்வறஞ்செய்தலை, மறத்தலின் நூங்கு (மயக்கத்தால்) மறந்துவிடுதலின்மேற்பட்ட, கேடு-கேட்டைத்தருவதும், இல்லை-இலது—எ-று.

இறந்தது தழீஇய எச்சஉம்மை விகாரத்தால் தொக்கது

(233) ஒல்லும் வகையா லறவினையோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்.

(இ-ள்.) ஒல்லும்வகையால்-கூடியவகையால், அறவினை-அறமாகிய நற்கருமத்தை, ஓவாதே-ஒழியாமலே, செல்லும்வாய் எல்லாம் - பொருந்தும் இடங்களெல்லாம், செயல் - செய்க—எ-று.

அறவினை-இருபெயரொட்டுப் பண்புத்தொகை. ஏ-தேற்றம். கூடியவகையாற் செய்தலாவது; இல்லறம் பொருளளவுக்குத் தகுதியாகவும், துறவறம்-உடல்நிலைமைக்குத் தகுதியாகவும் செய்தல். பொருந்துமிடம்-மனம், வாக்கு, காயம். அவற்ருற்செய்யும் அறங்களாவன முறையே நற்சிந்தையும், நற்சொல்லும், நற்செய்கையுமாம். ஏ-தேற்றம்.

(234) மனத்துக்கண் மாசில னாதல் லனைத்தறன்
ஆகுல நீர பிற.

(இ-ள்.) மனத்துக்கண் (அறஞ்செய்வோன்) தன்மனத்தில், மாசு-குற்றம், இலன்-இல்லாதான், ஆதல்-ஆகக்கடவன், அனைத்து அறன் - அவ்வளவினதே அறம், பிற (அது அல்

லாத)சொல்லும் வேடமும், ஆகுலம்-ஆரவாரமாகிய, நீர-த ன்மையுடையன, (அறமென்றுசொல்லப்படாஆம்)—எ-று.

ஆதல்-ஆ-பகுதி, த-சாரியை, அல்-வியங்கோள்வினைமுற் றுவிகுதி, உகரக்கேடுசந்தி. ஆகுலமென்னுஞ்சொல்-நீர என் னுங் குறிப்புவினை முற்றின்பகுதியோடு இருபெயரொட்டுப் பண்புத்தொகை நிலைத்தொடராய் முடிந்தது. பிற-இடைச் சொலடியாகப்பிறந்த பெயர்ப்பகுபதம். பிற-பகுதி, அ-பல வின்படர்க்கைவிகுதி, பகுதி அகரம் கடைக்குறை.

(235) அழுக்காறவாவெகுளி யின்னாச்சொ னான்கும்
இழுக்கா வியன்ற தறம்.

(இ-ள்.) அழுக்காறு (பிறர்செல்வத்தைக்கண்டு) பொறா மையும், அவா (புலன்களின்மேற்செல்லுகின்ற) விருப்பமு ம், வெகுளி (அவைகாரணமாக பிறர்மேல்உண்டாகும்) கோ பமும், இன்னாச்சொல் (அதுபற்றிவரும்) கடுஞ்சொல்லும் ஆகிய, நான்கும்-இந்நான்கையும், இழுக்கா-கடிந்து, இயன் றது (இடைவிடாமல்) நடந்தது-அறம்-அறமாம்—எ-று.

இன்னாச்சொல்-பண்புத்தொகை நிலைத்தொடர். விரிந்தா ல் இன்னாமையாகியசொல் எனவிரியும். அன்றிஈறுதொகுத் தலாய்நின்ற குறிப்புப்பெயரெச்சத் தொகாநிலைத்தொடரெ னினும்பொருந்தும். அதுஇன்னாத. உம்மை-முற்று. இழுக் கா செய்யாஎன்னும் வாய்பாட்டு இறந்தகால் வினையெச்சம்.

(236) அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில.

(இ-ள்.) அறத்தான்வருவதே-இல்லறத்தோடு பொருந்தி வருவதே, இன்பம்-இன்பமாம், மற்றுஎல்லாம்-இல்லறத்தோ டுபொருந்தாமல் வருவனவெல்லாம், புறத்த (இன்பமாய்த் தோன்றினும்) துன்பத்தைச்சார்ந்தன. புகழும்இல-புகழை யும்உடையன அல்ல—எ-று.

ஆன்உருபு உடனிகழ்ச்சிப் பொருளில்வந்தது. ஏ-பிரிநிலை. மற்று - பிறிதென்னும்பொருள்து. உம்மை இறந்ததுதழீஇய எச்சவும்மை.

௬௧-ஆம் பாடம்-மூதுரை.

(237) அடக்க முடையா ரறிவிலரொன் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா-மடைத்தலையில்
ஓடுமீ னோட வொருமீன் வருமளவும்
வாடி யிருக்குமாங் கொக்கு.

(இ-ள்.) கொக்கு-கொக்கானது, மடைத்தலையில் - நீர்மடையினிடத்தில், ஓடுமீன்-ஓடுகிறசிறுமீன்கள், ஓட-ஓடிக்கொண்டிருக்க, ஒருமீன் (தகுந்ததாகிய) ஒருமீன், வருமளவும்-வரும்வரையும், வாடியிருக்கும் (யாதொருமுயற்சியுமில்லாமல்) சோம்பியிருக்கும், (ஆதலால்) அடக்கம்உடையார் (வலி) அடங்கியிருப்பவரை, அறிவுஇலரொன்று-அறிவுஇல்லாதவ்ரொன்று, எண்ணி-நினைத்து, கடக்க (அவரை) வெல்ல, கருதஉம்-நினைத்தலும், வேண்டா (அறிவுடையோரால்) விரும்பப்படாது—எ-று.

அடக்கம்-அடங்கு-பகுதி, அம்-தொழிற்பெயர்விகுதி, உகரக்கேடுசந்தி, பகுதிமெல்லொற்றுவல்லொற்றுனது வலித்தல்விகாரம். கருதஎன்னும் செய வென் எச்சம் தொழிற்பெயர்ப் பொருள்படநின்றது. ஓடுமீன் என்னுந்தொடரை-ஓடுமீன் எனக்கொண்டால் வினைத்தொகை நிலைத்தொடராகவும், ஓடும் மீன் எனக்கொண்டால் பெயரொச்சத்தொகா நிலைத்தொடராகவுங்கொள்க. முன்னுள்ளஉம்மை இழிவுசிறப்பு பின்னுள்ளஉம்மைமுற்று. ஆம்-அசை.

நாலடியார்.

(238) நளிகடற் றண்சேர்ப்ப நல்கூர்ந்த மக்கட்
கணிகல மாவ தடக்கம்-பணிவில்சீர்

மாத்திரை யின்றி நடக்குமேல் வாழூமூர்
கோத்திரங் கூறப் படும்.

(இ-ள்) நளி-பெருமையாகிய, கடல்-கடலினது, தண்சேர்ப்ப-குளிர்ந்ததுறையையுடையானே, நல்கூர்ந்த-வறுமையடைந்த, மக்கட்கு-மனிதர்களுக்கு, அணி-அணிவதற்குரிய, கலம்ஆவது-ஆபரணமென்பது, அடக்கம்-அடங்கிநடத்தலாம் (இஃது அறியாதவறியவனொருவன்) பணிவு-தாழ்தல்-இல்-இல்லாமல், சீர்மாத்திரை (தனது) நிலைமையினளவில், இன்றி (நடத்தல்) இல்லாமல், நடக்குமேல் (மேற்பட்டு) நடப்பானானல், வாழும் (தான்) வாழ்கின்ற, ஊர் - ஊரிலுள்ளோரால், கோத்திரம்-அவனதுகுலத்தின்முதல், கூறப்படும்- குற்றஞ்சொல்லப்படும்—எ-று.

கடற்சேர்ப்ப-கடலென்னும் நிலைமொழி சேர்ப்பஎன்னும் வருமொழிப்பகுதியோடு ஆறும்வேற்றுமைத்தொகைநிலைத் தொடராய்முடிந்தது. பொருள் - உறுப்புத்தற்கிழமை. இல் என்னும்பண்படி வினையெச்சப்பொருள்பட நின்றது.

பழமொழி.

(239) கற்றறிவார் கண்ட தடக்க மடங்காதார்
பொச்சாந்துந் தம்மைப் புகழ்ந்துரைப்பார் -தெற்ற
அறைகல் லருவி யணிமலை நாட
நிறைகுட நீர்தளும்ப லில்.

(இ-ள்.) தெற்ற-தெளிவாகிய, அறை-ஒலிக்கின்ற, கல்அருவி-கல்லினிடத்துண்டாகும் அருவியையுடைய, அணி-அழகிய, மலை-மலையைச்சார்ந்த, நல்நாட-நல்லநாட்டையுடையானே, நிறைகுடம்-நிறைந்தகுடம், நீர்தளும்பல்இல்-நீர்தளும்புதல்இல்லை (அதுபோல) கற்று (கற்கவேண்டியவைகளை) கற்று, அறிவார் (அவற்றின்உண்மைப்பொருள்களை) அறிப

வர், கண்டது (அக்கல்வியறிவால்) கண்டபயன், அடக்கம்-அடங்குதலே, அடங்காதார் (அவ்வாறு) அடங்குதலில்லார், பொச்சாந்தும்-மறந்தும், தம்மை - தங்களை, புகழ்ந்துஉரைப்பர்-புகழ்ந்துபேசுவார்—எ-று.

கற்றறிதல் அமையுமெனஒழியாது மேலுமேலு அறிதலின் அறிகின்றார் என நிகழ்காலத்தால்-நன்-சு-சூ-கக௦ படிகூறவேண்டும், எதிர்காலத்தால்கூறியது தெளிவினால்வந்த காலவழுவமைதி-ஷை-சூ-கஙக. கண்டது-இறந்தகாலவினையாலணையும்பெயர். உம்மைஇறந்ததுதழீஇய எச்சவும்மை.

(240) கோவாத சொல்லுங் குணனில்லா மாக்களை
நாவா யடக்க லரிதாகும்-நாவாய்
களிகள்போற் றூங்குங் கடற்சேர்ப்ப வாங்கி
வளிதோட் கிடுவாரோ மற்று.

(இ-ள்.) நாவாய்-மரக்கலங்கள், களிகள்போல் (கள்ளுண்டு) களிப்பவர்களைப்போல, தூங்கும்-அசைந்துசெல்கின்ற, கடற்சேர்ப்ப-கடலினதுதுறையையுடையானே, வாளி-வாளியென்னுங்காதணியை, வாங்கி (காதினின்றும்) கழற்றி, தோட்கு-தோளுக்கு, இடுவாரோ-அணிவாரோ, இல்-இல்லை, (அதுபோல) கோவாத-முறைபிறழ்வாகியசொற்களை, (கோக்கப்படாதன) சொல்லும்-எடுத்துப்பேசுகின்ற, குணன்இல்லா-நற்குணமில்லாத, மாக்களை-மக்களை, நா-நாவையுடைய, வாய் - வாயை, அடக்கல் (பேசவொட்டாதபடி) அடக்குதல், அரிது-கூடாது—எ-று.

பயனில்லாதனவற்றைப் பேசுதலால் இழித்தற்பொருட்டு வாயெனச்சும்மா சொல்லாமல் நாவாயென்றார். களி, களி-பகுதி, இ-என்னும் வினைமுதற்பொருள் விகுதிபுணர்ந்துகெட்டது. அப்படிக் கெட்டசொல் - கள்என்னும் பன்மைவிகுதியோடு புணர்ந்து களிகள்எனநின்றது. போல - என்பது

போல்என் அகரவிகுதிதொகுத்தலாய் நின்றது. வாளி என்பது வளியெனத்தொடையும், தளையும்நோக்கி குறுக்கல்விகாரம் பெற்றது.

(241) உடைப்பெருஞ் செல்வத் துயர்ந்த பெருமை
அடக்கமி லுள்ளத்த னாகி-நடக்கையில்
ஒள்ளிய னல்லான்மேல் வைத்தல் குரங்கின்
கொள்ளி கொடுத்து விடல். [கைக்

(இ-ள்.) உடைபெருஞ்செல்வத்து-பெருஞ்சிறப்பையுடைய, உயர்ந்தபெருமை - உயர்ந்தபெரியஅதிகாரத்தை, அடக்கம்இல்-அடங்குதலில்லாத, உள்ளத்தன்ஆகி-கருத்துடையவனாய், நடக்கையில்-ஒழுக்கத்தில், ஒள்ளியன் - நன்மையுடையான், அல்லான்மேல்-அல்லாதவன் மேல், வைத்தல் (அரசன்) வைக்குதல், குரங்கின்கை-குரங்கினதுகையில், கொள்ளி - தீக்கொள்ளியை, கொடுத்துவிடல் - கொடுத்துவிடுதல் போலும்—எ-று.

குரங்கு அக்கொள்ளியால் ஊரிலுள்ளாருடைய பொருளிழவுமுதலியவற்றை நோக்காமல்சுட்டு எரிப்பதுபோல-அடக்கமும், நன்னடக்கையுமில்லாத இவன்தான்பெற்ற அதிகாரத்தால் தன்கீழுள்ள குடிகளுடைய பொருளிழவுக்கு இரங்காமல் அவர்களைப் பலவகையாலும் வருத்துவானென்பது கருத்து. உடை-அகரவிகுதிதொகுத்தலாய்நின்ற குறிப்புப் பெயரெச்சம். அல்லான்மேல்வைத்தலென்பதினாலும், குரங்கின்கைக்கொள்ளியை உவமித்தலாலும் பெருமைஎன்பதற்குப்பெரியஅதிகாரமெனப் பொருள்கூறப்பட்டது. கொள்ளி கொள்-பகுதி ள்-சந்தி, இ-வினைமுதற்பொருள்விகுதி. தீயைக்கொள்ளுதலுடையது என்பதுபொருள். தீயாற்கொள்ளப்பட்டது எனப்பொருள்கொள்ளின்இ - செயப்படுபொருள் விகுதி.

(242) எண்ணக் குறைபடாச் செல்வமு மிற்பிறப்பும்
மன்ன ருடைய வுடைமையும் மன்னரால்
இன்ன ரெனல்வேண்டா விம்மைக்கு மும்மை
தம்மை யுடைமை தலை. [க்கும்

(இ-ள்.) தம்மை-தம்மை, உடைமை (தாமே) உடையவர்களாயிருத்தல் (அதாவது தம்மனத்தைப் புலன்களிற்செல்லவிடாமல் அதைஆளுந்தன்மை) இம்மைக்கும்-இப்பிறப்பிற்கும்,உம்மைக்கும்-மறுமைக்கும், தலை-சிறந்தது, (ஆதலால்) எண்ண-கணக்கிட, குறைபடா(அக்கணக்குக்கு) குறையாத, செல்வமும்-செல்வமும்,இல்பிறப்பும்-நற்குடிப்பிறப்பும்,மன்னருடைய-அரசர்களுடைய,உடைமையும் - பொருள்களும், மன்னரால்-அரசரால்,இன்னர்-(இவர் இத்தன்மையானவர், எனல்-என்றுமதித்தலும், வேண்டா (அறிவுடையோரால்) வேண்டப்படா—எ-று.

எனல் என்றவிடத்து எண்ணும்மை தொகுத்தல். இன்னர் இடைச்சொலடியாகப்பிறந்த குறிப்புவினைமுற்று. அவ்வினையாலணையும் பெயரெனினும் ஒக்கும். உடைமை - பண்பாகு பெயர்.

சஉ-ஆம்பாடம். குறள்.

(243.) அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
ஆரிரு ளுய்த்து விடும்.

(இ-ள்.) அடக்கம் - அடக்கமாகிய அறம், அமரருள்-(பின்) தேவருலகத்தில், உய்க்கும் - (ஒருவனை) செலுத்தும், அடங்காமை - அடங்காமையாகியபாவம், ஆர்இருள் - (தள்ளுதற்கு) அரியஇருளென்னும் நரகத்தில், உய்த்துவிடும்-செலுத்திவிடும்—எ-று.

அமரர் மரணமில்லார் என்பதுபொருள். வடமொழி. அடக்கம் - உடன்பாட்டுத்தொழிற்பெயர். அடங்காமை எதிர்ம

றைத்தொழிற்பெயர். ஆர்-இருளென்பதுபுணரும்போது ஈ றுபோதலென்பதனுல் அருமை-என்பதன்மை விகுதிகெட்டு, ஆதிநீடலென்பதனுல் முதலெழுத்துநீண்டு, இனையவும்என்ப தனுல்-உகரங்கெட்டது. முற்று மற்றெரோ வழியென்பதனு ல் உகரங்கெட்டதென்றுல் ஆர்பொருள், கார்க்குழல் என மெய்ம்முதல் மொழிபுணரும்போதும் உகரங்கெடுதலின் அ துகுற்றமாம். நன்-சு-சூ-ந௲. ௫௲.

(244. காக்க பொருளா வடக்கத்தை யாக்கம்
அதனினூஉங் கில்லை யுயிர்க்கு.

(இ-ள்.) உயிர்க்கு-உயிர்களுக்கு, அதனின்நூங்கு - அடக்க த்தினும்மிகுந்த, ஆக்கம்இல்லை-செல்வம்இல்லை, (ஆதலால்) அ டக்கத்தை-அவ்வடக்கத்தை, பொருளா-(நன்மைதரும்)பொ ருளாக, காக்க-(அழியாமல்) காக்கக்கடவன்—எ-று.

உயிரென்றது-ஒருமையாய்நின்று அச்சாதி முற்றுமுணர்த் தலால்சாதியொருமை. அது,அறிந்து அடங்கிப் பயன்கொள் ளும் மக்களது உயிரென்றுகொள்க. காக்க வியங்கோள்வி னைமுற்று. ஆதலால் வருமொழிப்பகரம் மிகாது இயல்பாயி ற்று. கா-பகுதி, க்-சந்தி, க-விகுதி. இச்சொல்செயவெ னெ ச்சமாய்வந்தால் - காக்கப்பொருள்கொடுத்தானென வரு மொழிப்பகரமிகும். கா-பகுதி, க்-சந்தி, கு- சாரியை, அ- விகுதி, உகரக்கேடு-சந்தி. ஆக - என்பதில் ஈறுதொகுத்தலா ய் ஆ-எனநின்றது. அளபெடை, அலகுபெற்றும், பெறாதும் வந்த இன்னிசையளபெடை. ஐந்தனுருபு எல்லைப் பொரு ளது.

(245.)நிலையிற் றிரியா தடங்கியான் றோற்றம்
மலையினு மாணப் பெரிது.

(இ-ள்.) நிலையின் - (இல்வாழ்க்கையாகிய) தனதுநிலையி னின்று, திரியாது-வேறுபடாது, (நின்று) அடங்கியான் - அ

டங்கினவனது, தோற்றம்-உயர்ச்சி, மலையினும் - மலையினுய ர்ச்சியினும், மாணப்பெரிது-மிகப்பெரிது—எ-று.

நிலையின் - ஐந்தனுருபு வருமொழி எதிர்மறைவினையாத லால் நீங்கலின்மையாகிய பொருளது. திரியாது, திரி-பகுதி ய்-சந்தி, ஆ - எதிர்மறைவிகுதி, அனைத்தும் ஒருபகுதி, த்-எ ழுத்துப்பேறு, உ - வினையெச்சவிகுதி. அடங்கியான் - இ றந்தகால வினையாலணையும்பெயர். அடங்கு - பகுதி, இன் இறந்தகாலஇடைநிலை, ஆன்-ஆண்பால்விகுதி, உகரக்கேடு-ச ந்தி, இடைநிலையீறுகெட்டது கடைக்குறை, யகரமெய்-ச ந்தி. தோற்றம்-தோன்று-பகுதி, அம்-விகுதி, உகரக்கேடு-ச ந்தி, னகரம்-றகரமானது வலித்தல்விகாரம். மலையின்-ஐந்த னுருபு எல்லைப்பொருட்டு. மலை-பொருளாகுபெயர். உம்-உய ர்வுசிறப்பு. மாண - உரியடியாகப்பிறந்த செயவெனெச்சம்.

(246. எல்லார்க்கு நன்றும் பணித லவருள்ளும்
செல்வர்க்கே செல்வந் தகைத்து.

(இ-ள்) பணிதல்-(பெருமிதமில்லாமல்) அடங்குதல், எல் லார்க்கும்நன்றுஆம்-எல்லாருக்கும் (ஒக்க) நல்லதேஆம், (ஆ யினும்) அவருள்ளும்-அந்தஎல்லாரிலும், செல்வர்க்கே-செல் வமுடையவர்க்கே, செல்வம்-வேறொருசெல்வமாகிய, தகை த்து-சிறப்பினையுடையது—எ-று.

உம்மைகளிரண்டும்முற்று. ஏ-பிரிநிலை. செல்வத்தகைத் து என்பது செல்வந்தகைத்து என்றானது சந்தவின்பப் பொருட்டுமெலித்தல் விகாரமடைந்தது. செல்வமென்னுநி லைமொழிதகைத்து என்னுங்குறிப்புவினைமுற்றின் பகுதியோ டு இருபெயரொட்டுப்பண்புத்தொகை நிலைத்தொடராகமுடி ந்தது.

(247.)யாகாவா ராயினு நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

(இ-ள்.)யா-(காக்கப்படுவன) எல்லாவற்றையும், காவார் ஆயினும்-காக்கமாட்டாராயினும், நாகாக்க-நாக்கு ஒன்றையுங்காக்கக்கடவர், காவாக்கால் - (அதை) காக்கமாட்டாராஞல், சொல்இழுக்கு - சொல்லிலேதோன்றுங்குற்றத்தில், பட்டு-பொருந்தி, சோகாப்பர்-(தாமே துன்பப்படுவர்—எ-று.

யா வகரமெய்விகுதிபுணர்ந்துகெட்டுநின்ற அஃறிணைப்பன்மை வினப்பெயர். உருபுகள் ஏற்கும்போது யாவற்றை யாவற்றல் என அற்றுச்சாரியைபெறும்.வற்றுச்சாரியையெனினும் குற்றமில்லை. இது வினப்பொருளை ஒழித்து எல்லாம் என்னும்பொருளைத் தந்தால் முற்றும்மைபெற்றே வரும். ஆதலால் அவ்வாறுநின்ற யா-என்பதனிற்றில் அவ்வும்மை செய்யுள்விகாரத்தால் தொக்கது. எல்லாவற்றையுங்காக்க வேண்டுமென்னுங் கருத்தாகலால், காவாராயினும் என்பதிலுள்ள உம்மை எதிர்மறைஉம்மை. காவாமையினது இழிவைக் கருதியபோது இழிவுசிறப்பும்மையுமாம். சோகாப்பர்-சோகம்யாப்பர் - சோகாப்பவொன்ருயிற்று. பகுதிமுதலிய வுறுப்பு நன்-சு - அறு-காண்க

(248) தீயினுற் சுட்டபு ணுள்ளாறு மாருதே
நாவினுற் சுட்ட வடு.

(இ ள்.)தீயினல்சுட்டபுண்-(ஒருவனைஒருவன்) தீயினல்சுட்டபுண், உள்ஆறும்- (உடம்பிலேஇருந்தாலும்) மனத்திலே ஆறிப்போம், நாவினல்-(கடுஞ்சொல்லையுடைய) நாவினுல், சுட்டவடு - சுட்டவடு, ஆருது-(அம்மனத்திலும்எப்போதும்) ஆருமலிருக்கும்—எ-று.

ஆறிப்போவதினல் தீயினுற்சுட்டதனைப் புண்என்றும்,ஆருமலிருத்தலால் நாவினுற்சுட்டதனை வடுஎன்றுங்கூறினர், சுட்டபுண் காரணப்பொருட்டாகவந்த இறந்தகாலப் பெயரெச்சம் செய்பவன்முதலிய ஆறுபெயருளொன்றைக் கொள்

ளாமல் வேறுபெயரைக்கொண்டது. சுட்டவடு என்பதும் அது. ஏ-ஈற்றசை.

சுங-ஆம்-பாடம்-நன்னெறி.

(249.) எந்தைநல் கூர்ந்தா னிரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் மீகை மறுப்பரோ-பைந்தொடீ
நின்று பயனுதவி நில்லா வரம்பையின்கீழ்க்
கன்று முதவுங் கனி.

(இ-ள்.) பைந்தொடீ-பசும்பொன்னாற்செய்த வளையலணிந்தவளே, நின்று-நிலைத்து, பயன்-(கனிகளாகிய) பயனை, உதவி-கொடுத்து, நில்லா-(உடனே) அழிந்த,அரம்பையின்கீழ்-வாழைமரத்தின்கீழுள்ள, கன்றும்-(அதன்) கன்றுகளும், கனி-கனியாகிய, (பயனை) உதவும்-உபகரிக்கும், (அதுபோல) எந்தை-பிதாஆனவன், இரப்பார்க்கு - யாசிப்பவர்க்கு, ஈந்து-கொடுத்து, நல்கூர்ந்தானென்று - தரித்திரனானனென்று அவன்மைந்தர்-அந்தஈகையாளனுடையபுத்திரர், தம்ஈகை-தமதுகொடையை, மறுப்பரோ-மறுக்காமல்கொடுப்பர்-எறு

எந்தை-முறைப்பெயர். யாம்-பகுதி, த்-எழுத்துப்பேறு, ஐ விகுதி, இடப்பிறப்பால் ஒத்தலால்-யாம்-எம் ஆனது குறுக்கல்விகாரம், மகரம்-நகரமானது சந்தி. ஐ-விகுதியென்னுமல் தைவிகுதியெனினும் பொருந்தும்; பகுதி-படர்க்கையில் தன்மைவந்த இடவழுவமைதி. மைந்தர்-தாய்தந்தைமுதலியோரை இம்மைமறுமைகளில் காக்கும்வலியுடையார் என்பதுபொருள். மைந்து- (வலி) பகுதி, அர்-பலர்பால்விகுதி, உகரக்கேடுசந்தி. பைந்தொடி-பண்புத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. அப்பெயர் விளியுருபேற்று-இகரம் ஈகாரமாய் நீண்டது. தொடி - தொடு, பகுதி, இ-செயப்படுபொருள்விகுதி-உகரக்கேடு-சந்தி, ஓ-எதிர்மறை.

(250.) பெரியவர்தந் நோய்போற் பிறர்நோய்கண் டுள்
எரியி னிழுதாவ ரென்க-தெரியிழாய் {ளம்
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண்.

(இ-ள்.) தெரியிழாய்-விளங்கிய ஆபரணத்தையுடையாளே, கண்-கண்கள், மண்டு - சேர்ந்த, பிணியால் - நோயினால், வருந்து - வருந்துகின்ற, பிறஉறுப்பை - மற்ற அவயவங்களை, கண்டுகலுழும்-பார்த்துஅழும், (அதுபோல) பெரியவர்-பெரியோர், பிறர்நோய்கண்டு - பிறருடையநோயைக்கண்டு, தம்நோய்போல்-தமது நோயைப்போல, உள்ளம்-மனம், எரியின்-தீயில்வைத்த, இழுதுஆவர்-நெய்போலஉருகுவர், என்க-என்றறிக—எ-று.

பிறர்நோய் - ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர், பொருள்-பண்புத்தற்கிழமை. பெரியவர் உள்ளம்ஆவர் என்பது திணைவழுவமைதி. நன்-சசு, கஅசு. தெரியிழாய்-வினைத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. விளியுருபேற்று ஈற்றைகாரம் ஆய் எனத்திரிந்தது.

நாலடியார்.

(251.) முன்னரே சாநாண் முனிதக்க மூப்புள
பின்னரும் பீடழிக்கு நோயுள-கொன்னே
பரவன்மின் பற்றன்மின் பாத்துண்மின் யாதும்
கரவன்மின் கைத்துண்டாம் போழ்து.

(இ-ள்.) சாம்நாள்-இறக்கிறநாளும், முனிதக்க-வெறுக்கத்தக்க, மூப்பு-முதுமையும், உள-உண்டு, பின்னரும்-(அவையேஅன்றி) மேலும், பீடு-பெருமையை, அழிக்கும்-அழிக்கின்ற, நோய்-நோய்கள், உள-உண்டு, (ஆதலால்நீர்) கைத்து-பொருள், உண்டாம்போழ்து-உண்டாயிருக்குங்காலத்தில், கொன்

னே - வீணே, பரவன்மின் - (பொருள் சம்பாதிப்பதற்காகப் பிறரை) வணங்காதிரும், பற்றன்மின் - இறுகப்பிடியாதிரும், பாத்து - (பிரமசாரிமுதலிய மூவர் முதலானோர்க்கும், தென்புலத்தார்முதலிய நால்வர்க்கும்) பகுத்து, உண்மின் - உண்ணும், யாதும் - எதையும், கரவன்மின் - ஒளியாதிரும். எ-று.

மூவர் - பிரமசாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி. இவர்முதலானோர் - ஆதரித்தவரால் கைவிடப்பட்டவர், தரித்திரர், ஒருவருமில்லாமல் உங்களிடத்துவந்து இறந்தவர். நால்வர் - தென்புலத்தார், தேவர், விருந்தினர், சுற்றத்தார். முன்னர் - முன் - பகுதி, நர் - பகுதிப்பொருள்விகுதி, நகரத்திரிபு - சந்தி. இதுபெயர்ச்சொல். பின்னர் - வினைமாற்றுப்பொருள்தரும் இடைச்சொல் - உம்மை இரண்டில்முன்னுள்ளது இறந்ததுதழீஇயஎச்சவும்மை. பின்னுள்ளதுமுற்றும்மை. சாநாள், மூப்பு உள எனபது செவ்வெண். இதில் இரண்டென்னுஞ்செவ்வெண்ணின் தொகையோடுமுற்றும்மைவிகாரத்தால்தொக்கது. ஏகாரம் இரண்டும் அசை. பாத்து - இதற்குப் பகுதிமுதலியவுறுப்பு, நன் - சூ - அநுபந்தத்திற்காண்க. பரவன்மின் - ஏவலெதிர்மறைப் பன்மைவினைமுற்று. பரவு - பகுதி, அல் - எதிர்மறைவிகுதி, அனைத்தும்ஒருபகுதி, மின் ஏவற்பன்மைவிகுதி, உகரக்கேடும், லகரம்னகரமாகத்திரிதலும் சந்தி. கைத்து - பொருள். கை - பகுதி, த் - சந்தி, து - ஒன்றன்பால்விகுதி. அர்த்தம்கையிலுள்ளது. கைத்துஉண்டாம்போழ்து - என்பதற்குக்கையில் (பொருள்)உண்டாகுங்காலத்திலெனப்பொருள்கொள்ளின் - கை - அத்துச்சாரியை அகரங்கெட்டுக் கைத்துஎன்றுனதெனக்கொள்க.

(252.) மறுமையு மிம்மையு நோக்கி யொருவற்
குறுமா றியைவ கொடுத்தல் - வறுமையால்
ஈதலிசையா தெனினு மிரவாமை
யீத லிரட்டி யுறும்

Office of the
Director of Archaeology

(இ-ள்.) மறுமையும் (ஒருவன்) மறுமைப்பயனையும், இம்மையும்-இம்மைப்பயனையும், நோக்கி-ஆராய்ந்து, ஒருவற்கு-(இரக்கின்ற) ஒருவனுக்கு, உறும்ஆறு-தகுந்தவழியில், இயைவ-(தன்னால்)இசைந்தபொருள்களை, கொடுத்தல் - கொடுக்கக்கடவன், வறுமையால்-இல்லாமையால், ஈதல்இசையாது எனினும்- கொடுத்தல்இசையாதானாலும், இரவாமை-(ஒருவரிடத்துப்போய்த்தான்) யாசியாமை, ஈதல்-கொடுத்தலாலுண்டாகும்பயனுக்கு, இரட்டி-இரண்டுபங்குபயனுடையதாக, உறும்-பொருந்தும்—எ-று.

கொடுத்தல்-வியங்கோள்வினைமுற்று. கொடு - பகுதி, த்-சந்தி, து-சாரியை, அல்-விகுதி, உகரக்கேடு-சந்தி. முன்னுள்ள உம்மைகள்-எண். பின்னுள்ள உம்மை-இழிவுசிறப்பு. இரட்டி-இரண்டுடையதுபொருள். இரண்டு-பகுதி,(எண்ணலளவை யாகுபெயர்.)இ-ஒன்றன்பால்விகுதி, உகரக்கேடு சந்தி, ணகரம் டகரமானது வலித்தல். பின்னுள்ள ஈதல் - காரணவாகுபெயர்.

(253. நடுவூருள் வேதிகைச் சுற்றுக்கோட் புக்க
படுபனை யன்னர் பலர்நச்ச வாழ்வார்
குடிகொழுத்தக் கண்ணுங் கொடுத்துண்ணு மாக்கள்
இடுகாட்டு ளேற்றுப் பனை.

(இ ள்)பலர்-பலராலும்,நச்ச-விரும்ப,வாழ்வார்-வாழ்கின்றவர்கள்,நடுஊருள்-ஊர்நடுவில், சுற்று-சுற்றிலும்,வேதிகை-மேடையினால்,கோள்புக்க-கொள்ள(நடுவில்)உள்ள,படு.பயனுண்டாகிய, பனை - பெண்பனையை, அன்னர் - ஒப்பாவர், குடி-(தமது)குடும்பம், கொழுத்தக்கண்ணும்- உயர்ந்தவிடத்தும், கொடுத்து-(பலருக்கும்)கொடுத்து, உண்ணு-(தாமும்) அநுபவியாத, மாக்கள்-மனிதர், இடுகாட்டுள்- சுடுகாட்டிலுள்ள, ஏற்றுப்பனை-ஆண்பனையை (ஒப்பர்)—எ-று.

நடுஊர்-இலக்கணப்போலி. கோள்-முதனிலைதிரிந்த தொழிற்பெயர் வினையெச்சப் பொருள்தந்துநின்றது. கொழுத்தக்கண்-எதிர்காலவினையெச்சம். கொழு-பகுதி, த் - சந்தி, து-அ-சாரியை, க்-சந்தி, கண்-வினையெச்சவிகுதி, உகரக்கேடு-சந்தி. கொழுத்த என்பது பெயரொச்சமானால் வருமொழி முதல் வல்லினமிகாது. உம்மை-உயர்வு. குடிகொழுத்தலைக்கூறவே அவர் கொழுத்தலைக் கூறவேண்டாதாயிற்று. ஈயாமையால் அவரிடத்துச் செல்வாருமில்லை, செல்லினும் பயனடைதலுமில்லையாதலால் அவரை இடுகாட்டுளேற்றுப் பனையென்றார்.

(254) பெயற்பான் மழைபெய்யாக் கண்ணு முலகம்
செயற்பால செய்யா விடினும் - கயற்புலால்
புன்னை கடியும் பொருகடற் றண்சேர்ப்ப
என்னை யுலகுய்யு மாறு.

(இ-ள்.) கயல்-மச்சங்களினாலுண்டாகிய, புலால்-புலால்நாற்றத்தை, புன்னை-(அங்குள்ள) புன்னைமலர்கள், கடியும்-(தமதுமணத்தினால்) ஓட்டுகின்ற, பொரு-(அலைகளால்கரையை) மோதுகின்ற, கடல்-கடலினது, தண்சேர்ப்ப-குளிர்ச்சியாகிய துறையையுடையானே, பெயல்-பெய்தலையுடைய, பால் - பகுப்பாகிய காலத்தில், மழைபெய்யாக்கண்ணும்-மழைபெய்யாவிட்டாலும், உலகம்-உலகத்திலுள்ளார், செயற்பால-(தாம்)செய்தற்பகுப்புடையனவாகிய அறங்களை, செய்யாவிடினும் செய்யாவிட்டாலும், உலகு - உலகத்துயிர்கள், உய்யும்ஆறு-பிழைக்கும்விதம், என்னை-யாது—எ-று,

பால்-இங்கேகாலப்பகுப்பையுணர்த்தியது.உலகமென்றது-செயற்பால்வற்றைச்செய்துபயனடைதற்குரியமக்களைஉணர்த்துதலால் இடவாகுபெயர்.உம்மைகளிரண்டும் எண்.புன்னை-முதலாகுபெயர். உலகென்றதுஓரறிவுயிர்முதலிய உயிர்களை

உணர்த்தலால்இதுவும் இடவாகுபெயர். மழை எல்லாவுயிர்க்கும்,செயற்பாலஃ விலங்குயிர்க்கேலாமையால் அஃதொழிந்த மக்க ளுயிர்க்குமெனக் கொள்க. மழைபோலச் செயற்பால செய்தலும் உலகுக்கு இன்றியமையாமையாகிய சிறப்புடையதென்பது கருத்து. என்னை - எவனென்னும் வினாவினைக் குறிப்பு முற்றின்மரூஉ.

௬௫ஆம்பாட்டம்.

(255 ஏற்றகைமாற்றாமையென்னானுந் தாம்வரையா
தாற்றாதார்க் கீவதா மாண்கடன்-ஆற்றின்
மலிகடற் றண்சேர்ப்ப மாறீவார்க் கீதல்
பொலிகட னென்னும் பெயர்த்து.

(இ-ள்) மலி-(வளம்)மிகுந்த, கடல்-கடலினது, தண்சேர்ப்ப-குளிர்ந்ததுறையையுடையானே, ஏற்றகை - (தம்மிடத்தில் இரப்பவர்கள்) ஏந்தியகையை, மாற்றாமை-மறுக்காமல், என்னானும்-யாதாயினும், தாம்வரையாது- தாம்ஒளிக்காமல், ஆற்றாதார்க்கு - (பிரதிசெய்ய மாட்டாத) அவ்விரப்பார்க்கு, ஆற்றின்-(நூலிற்கூறிய)முறையால், ஈவது-கொடுப்பதே, ஆண்கடன்-ஆண்மகனுடைய கடமை, மாறுஈவார்க்கு-(தாம்முன்பெற்ற பொருளினளவிற்கு ஏற்க) பிரதிகொடுப்பவர்க்கு, ஈதல்-கொடுத்தல், பொலிகடனென்னும் - மிக்க கடனென்னும், பெயர்த்து-பெயருடையது, 'ஆண்கடனன்று

மாற்றாமை-எதிர்மறைவினையெச்சம். மாற்று-பகுதி, ஆ-எதிர்மறைவிகுதி, உகரக்கேடு - சந்தி, அனைத்தும்ஒருபகுதி, மை வினையெச்சவிகுதி. என்-எவனென்னும் வினாவினைக்குறிப்பின் மரூஉ. ஆன்-ஆயின்என்பதன்மரூஉ. உம்மை இழிவுசிறப்பு. பிரிநிலைஏகாரம், விகாரத்தால் தொக்கது. ஆம்-அசை. பெயர்த்து-குறிப்புவினைமுற்று. பெயர் - பகுதி, த் - சந்தி, து-ஒன்றன்பால்விகுதி.

(256) இறப்பச் சிறிதென்னு தில்லென்னு தென்றும்
அறப்பயன்யார்மாட்டுஞ் செய்க-முறைப்புதவி
ஐயம் புகூஉந் தவசி கடிஞைபோல் [ன்
பைய நிறைத்து விடும்.

(இ-ள்.) இறப்ப-மிகுதியும், சிறிது-(எம் இடத்துள்ளபொருள்)சிற்றளவையுடையது,என்னுது-என்றுகருதாமல், இல்-(ஆதலால் இல்லை; என்னுது-என்றுசொல்லாமல்; என்றும்-தினமும், அறப்பயன்-அறமாகியபயனை, யார்மாட்டும்-(இரப்பவராகிய) எல்லாரிடத்தும், செய்க- (ஒருவன்) செய்யக்கடவன், (அச்செய்கையானது) புதவின் - (வீடுகளின்) வாயில்களில், ஐயம்-பிச்சைக்கு, புகும்-நுழையும், தவசி-தவசியினுடைய, கடிஞைபோல்-பிட்சாபாத்திரம் நிறைவதுபோல, பைய-மெல்ல, நிறைத்துவிடும்- (அறப்பயனை) நிறையச்செய்துவிடும்—எ-று.

இல்-இல்லையென்பதன்கடைக்குறை. என்னுது - இடைச்சொலடியாகப்பிறந்த எதிர்மறைவினையெச்சம். உம்மைகள் - முற்று. ஒருவன்அடையவேண்டிய பயனுன்கனுள் ஒன்ருதலின் அறப்பயனென்ருர். இது இருபெயரொட்டுப்பண்புத்தொகைநிலைத்தொடர். மாடு-எழாவதன்பரியாயவுருபு. அளபெடை-இயற்சீர் வெண்டளைகெடாமல்வந்த இசைநிறை அளபெடை. பைய-உடன்பாட்டுக் குறிப்புவினையெச்சம்.

(257) நட்டார்க்கு நள்ளா தவர்க்கு முளவவாயால்
அட்டது பாத்துண்ட லட்டுண்டல்-அட்ட
தடைத்திருந் துண்டொழுகு மாவதின் மாக்கட்
கடைக்குமா மாண்டைக் கதவு.

(இ-ள்.) நட்டார்க்கும்-உறவினர்க்கும், நள்ளாதவர்க்கும்-உறவினராகாத அயலவர்க்கும், உளவவாயால் - (தம்மிடத்து) உள்ளபொருள்களினளவால், அட்டது - சமைத்தஉண

வை, பாத்து-பகுத்து, உண்டல்-உண்ணுதலே, அட்டுஉண்டல்-சமைத்துண்ணுதலாம், அட்டது-சமைத்தஉணவை, அடைத்து- (வாயிலை) மூடி, இருந்து- (தம்மனைவியார்முதலானவருடன்) இருந்து, உண்டு-புசித்து, ஒழுகும்-நடக்கின்ற, (உயிர்வாழ்கின்ற) ஆவது- (பிறப்பினாலாகிய) பயன், இல்மாக்கட்கு-இல்லாதமக்களுக்கு, ஆண்டைக்கதவு - அவ்வுலகத்தினது கதவு, (துறக்கத்தின்கதவு) அடைக்கும்-மூடப்படும்—எ-று.

நட்டார், நள்ளாதவர் - வினையாலணையும்பெயர்கள். நட்டார். நள்-பகுதி, ட்-இறந்தகாலஇடைநிலை, ஆர்-பலர்பால்விகுதி, ளகரம் டகரமானது சந்தி. உடன்பாடு-நள்ளாதவர்-நள்-பகுதி, ள்-சந்தி, ஆ-எதிர்மறைவிகுதி, அனைத்தும்ஒருபகுதி, த்-எழுத்துப்பேறு, (விரித்தல்விகாரம்) ஆர் - பலர்பால்விகுதி, விகுதிஆகாரக்கேடு முதற்குறை. நள்ளாதார் என்பது நள்ளாதவரொன்று ஆனமைபற்றி இதனை ஈறுவிகாரப்பட்ட (திரிந்த) வினையாலணையும்பெயரென்பர். உள-பண்படியாகப்பிறந்தபெயர். அல்லது அதனடியாகப்பிறந்தகுறிப்புவினைப் பெயரெனினும்பொருந்தும். அட்டது-இறந்தகாலவினையாலணையும்பெயர். அடு-பகுதி, அ-சாரியை, து-ஒன்றன்பால்விகுதி, பகுதிஒற்று இரட்டியது-விரித்தல்விகாரம், அதுவேகாலங்காட்டியது, உகரக்கேடு-சந்தி. பாத்து - நன்-சு-அறு - இல்-காண்க. ஆவது. எதிர்கால வினையாலணையும்பெயர். ஆண்டை-ஆண்டுஎன்னும்பெயர் - ஐகாரச்சாரியைபெற்றது. ஆம்-அசை.

(258.) எறிநீர்ப் பெருங்கட லெய்தி யிருந்தும்
அறுநீர்ச் சிறுகிணற் றூறல்பார்த் துண்பர்
மறுமை யறியாதா ராக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை.

(இ-ள்.) எறி- (அலைகளை) எறிகின்ற. நீர்-நீர்வளப்பத்தையுடைய, பெருங்கடல்-பெருமையாகியகடலை, எய்திஇருந்தும்-

(சமீபத்தில்) அடைந்திருந்தும், அறுநீர்-நீர்வற்றிய, சிறுகிணற்றுஊறல் - சிறுமையாகிய கிணற்றினதுஊற்றுநீரை, பார்த்து-தேடி, உண்பர்-(உலகத்தார்) உண்பார்கள், (அதுபோலச்சான்றோர் பயன்படலால்) மறுமை அறியாதார்-மறுமைப் பயனை அறியாதவரது, ஆக்கத்தின் - செல்வத்தினும், சான்றோர்-(மறுமைஅறிந்தநற்குணங்களால்)நிறைந்தஅவரது, கழிநல்குரவே - மிக்கதரித்திரமே,தலை-சிறந்தது—எ-று.

வறியர், பிறர்க்குப்பயன்படாத பெருஞ்செலவத்தினரை நெருங்கியிருந்தும் அவரிடத்துச்சென்றிரவாமல், கிடைத்த பொருளைப் பிறர்க்குப்பயன்படுத்தும் நற்குணநிறைந்தோர் வறியராய்த்தூரத்திலிருப்பினும் அவர்பாற்சென் றிரப்பரொன்பதுகருத்து. சான்றோர் வறுமையடைந்தகாலத்தும் தமதுகடனென்று அறிந்து ஈதலால் அவ்வறுமையேதலையென்றார். உம்மை-உயர்வுசிறப்பு. ஊறல்-தொழிலாகுபெயர். ஆக்கம் - ஒருவன் ஆகுதற்குப் பொருள்காரணமாதலால் காரியவாகுபெயர். அறுநீர்-வினைத்தொகைநிலைத்தொடர். நீர்ச்சிறுகிணறு, இரண்டாம்வேற்றுமை யுருபும் பயனும் உடன்றொக்கதொகை. ஏ-பிரிநிலை.

(259.) எனதென தென்றிருக்கு மேழை பொருளை
எனதென தென்றிருப்பென் யானும்-தனதாயி
தானு மதனை வழங்கான் பயன்றுவ்வான் [ன்
யானு மதனை யது.

(இ-ள்.) எனது எனதுஎன்று - என்னுடையதேயென்றுதுணிந்து, இருக்குமேழை - (களித்து) இருக்கின்றமூடனது, பொருளை-பொருளை, எனது எனது என்று-என்னுடையதேயென்றுதுணிந்து,இருப்பென், (மகிழ்ந்து)இருப்பேன், யானும் - (அதற்குஅந்நியனாகிய) நானும், தனது ஆயின் - தன்னுடையபொருள்ஆனால், தானும்- (உரியவனாகிய) தானும், அத

ளை-அப்பொருளை, வழங்கான் -(அறத்தின்பொருட்டு) பிற ர்க்குக்கொடான், பயன்துவ்வான்- (அதன்) பயனாகிய உண வுமுதலியவற்றை அநுபவியான், யானும் - (என்தேயென்று சொல்லும்) என்செயலும், அதனை - அப்பொருளில், அது- கொடுத்தலும் அநுபவித்தலும் இலது—எ-று.

எனது-பொருளடியாகப்பிறந்த குறிப்புவினைமுற்று. யா ன்-பகுதி, அ-சாரியை, து-விகுதி, யா-இடப்பிறப்பாலொத்த எவ்வானது குறுக்கல்விகாரம். அடுக்கு-துணிவுப்பொருட்டு. ஏழை-பண்பாகுபெயர். உம்மைகள்மூன்றனுள் முன்னதும்பி ன்னதும் இறந்ததுதழீஇயதனோடு இழிவுசிறப்பு. இடையிலு ள்ளது-எதிரதுதழீஇயதனோடு உயர்வுசிறப்பு. தனது-தான்- பகுதி, அ-சாரியை, து-விகுதி, தா-தவ்வானது-குறுக்கல்வி காரம். இதுவும் குறிப்புவினைமுற்று.எனது-தனது இவ்விர ண்டையும் அவ்வினையாலணையும்பெயரெனினும், பொருளடி யாகப்பிறந்த பெயரெனினும்பொருந்தும். அது-குறிப்புவினை முற்று. ஈற்றிலுள்ளயான்-என்பது தன்காரியமாகிய வினை க்காதலால் காரணவாகுபெயர். ஐ - உருபுமயக்கம். நன்-சூ- சூ-கஉஉ.

பழமொழி.

(260.) அருமை யுடைய பொருளுடையார் தங்கண்
கரும முடையாரை நாடார்-எருமைமேல்
நாரை துயில்வதியு மூர குளந்தொட்டுத்
தேரை வழிச்சென்றா ரில்.

(இ-ள்.) எருமைமேல் - எருமையின்மேல், நாரை-நாரையா னது, துயில்வதியும்-தூங்குகின்ற (தூக்கத்தில்தங்குகிற) ஊ ர - மருதநிலத்துத்தலைவனே, குளம்-குளத்தை, தொட்டு- தோண்டி, தேரைவழி- (அக்குளத்தில் சேரும்படிசெய்ய) த வளையின்பின், சென்றார்-சென்றவர்கள், இல்-இல்லை, (அது

போல) அருமைஉடைய- (பிறரால்அடைவதற்கு) அருமையுடைய, பொருள்உடையார்-பொருளையுடையவர்கள், (செல்வர்கள்) தம்கண்-தம்மிடத்து, கருமம்உடையாரா- (யாதேனும்) ஒருகாரியத்தைவேண்டுவோரா, நாடார்- (தாமே) தேடார்—எ-று.

கருமமுடையார்தாமேவந்து அடைவரென்பது குறிப்பெச்சம். உடைய-குறிப்புப்பெயரொச்சம். உடையார்இரண்டும் வினைக்குறிப்புப்பெயர். தொட்டு-இறந்தகாலவினையெச்சம். தொடு-பகுதி, உ-வினையெச்சவிகுதி, பகுதிஒற்று இரட்டியது-விரித்தல்விகாரம், அதுவேகாலங் காட்டியது, உகரக்கேடு-சந்தி. இதற்குத்தொழிற்பெயர்-தொடுதல்.

சுடு-ஆம்பாடம். குறள்.

(261.) கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு.

(இ-ள்.) மாரிமாட்டு- (தமக்குநீருதவுகின்ற) மேகங்களினிடத்து, உலகு-உலகத்துயிர்கள், என்-என்னபிரதியுபகாரத்தை, ஆற்றும்-செய்கின்றன, (ஆதலால்) கடப்பாடு- (அம்மேகங்களைப்போல்வார்செய்யும்) ஒப்புரவுகளும், கைம்மாறு-பிரதியுபகாரத்தை, வேண்டா-வேண்டுவனஅல்ல—எ-று.

ஒப்புரவுகள்-உலகநடைஅறிந்து செய்யும்செயல்கள். வேண்டா-வேண்டு-பகுதி, ஆ-எதிர்மறைப்பலவின்பால்விகுதி, உகரக்கேடு சந்தி. கடப்பாடு-கடமைப்படுதல்பொருள். கடம்-படு-நிலைமொழியீற்றுமகரங்கெட்டு-வருமொழிமுதற் பகரம்மிகுந்து-கடப்படுஎனநின்று-படு-பாடெனநீண்டு முதனிலை திரிந்ததொழிற்பெயராய்நின்றது. இது ஒருசொல்லின் தன்மையது. கைம்மாறு-என்பதும்அது. முறையாகிய பிரதி-என்பது பொருள். கொல், ஓ-அசை. உலகு, இடவாகுபெயர்.

(262.) தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

(இ-ள்.) தக்கார்க்கு-தகுதியுடையார்க்கு (உண்டானல்)தாள்-முயற்சியை, ஆற்றி-செய்து, தந்த-சம்பாதித்த, பொருள் எல்லாம்-பொருள்முழுதும், வேளாண்மை-ஒப்புரவை, செய்தற்பொருட்டு-செய்தலாகியபயனுடையன—எ-று.

தக்கார்-தகு-பகுதி-ஆர்-பலர்பால்விகுதி, பகுதிவிகாரப்பட்டது விரித்தல்விகாரம், அதுவே இறந்தகாலங்காட்டியது உகரக்கேடு சந்தி. இதுவினையாலணையும்பெயர். நான்கனுருபின்-பொருள்-நேர்ச்சி.வேளாண்மை-(பிறருடைய)வேள்-விருப்பத்தை, ஆண்மை-ஆளுந்தன்மை. இதுவும்-ஒருசொல்வின்தன்மையது. பொருட்டு-பொருள்-பகுதி, டு-ஒன்றன்பாற்குறிப்புவினைமுற்றுவிகுதி, ளகரம் டகரமானது சந்தி.பொருளெல்லாம்பொருட்டு-என்றது பன்மையின் ஒருமைவந்தவழுவமைதி. நன-சு-சூ-கஅகூ.

(263.) ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

(இ-ள்.) உயிர்வாழ்வான் - உயிரோடுகூடிவாழ்வான்ஆவான், ஒத்தது-உலகநடையினை,அறிவான்-அறிந்துசெய்வோன், மற்றையான்-அது அறிந்துசெய்யாதவன், செத்தாருள் - (உயிருடையவனுயினும்,செத்தாரில், வைக்கப்படும்(ஒருவனுக) வைத்து எண்ணுதலேதகுதி—எ-று.

உயிர்க்குரிய அறிவுஞ்செயலும் தோன்ருமையால் செத்தாருள்வைக்கப்படுமென்ருர். ஒத்தது, அறிவான், வாழ்வான், செத்தார் வினையாலணையும்பெயர்கள். ஒத்தது ஒ-பகுதி, த்-சந்தி,த்-இறந்தகாலஇடைநிலை, அ-சாரியை,து-ஒன்றன்பால் விகுதி. செத்தார்-சா-பகுதி, த்-சந்தி, த் - இறந்தகால இடைநிலை,ஆர்-பலர்பால்விகுதி, ஆ-எவ்வானது-குறுக்கல்விகாரம். மற்றையான்-இடைச்சொலடியாகப் பிறந்தபெயர் அல்லதுவினைக்குறிப்புப்பெயர். இது பகுதிமுதலிய வுறுப்புகளைப் பிரித்து முன்னேகாட்டப்பட்டது.

(264.) ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் றிரு.

(இ-ள்.) உலகு - உலகநடையை, அவாம்-விரும்பிச்செய்யும், பேர்அறிவாளன்-பெருமையாகியஅறிவை யுடையவனது, திரு-செல்வம், ஊருணி-ஊரிலுள்ளார்தண்ணீருண்ணுங் குளம், நீர்நிறைந்தற்று-நீர்நிறைந்தாற்போலும்—எ-று.

ஊருணி-ஒருசொல்லின்தன்மையது. ஊருண்-பகுதி, இ-செயப்படுபொருள்விகுதி. ஊருணி நீர்நிறைந்தற்று-பால்வழுவமைதி, நன்-சு-சூ, கஅசுா-இல் சொற்றொறும் இற்று இதன்பெற்றி என்பதனுல்வந்தது. நிறைந்தற்று என்பதை - நிறைந்தால்அற்று, நிறைந்தது அற்றுஎன இருவகையாகப்பிரிக்க. இவ்விரண்டுந் தொகுத்தல்விகாரம்பெற்றன. முன்னது எதிர்காலவினையெச்சத் தொகாநிலைத் தொடர்,பின்னது இரண்டாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். அவாவும்என்பது அவாம்என்முனது. நன். சு. சூ, கசுக. உலகு என்பது உயர்ந்தோர்க்காகி, பின்அவரது ஒழுக்கத்துக் கானமையின் இருமடியாகுபெயர்.

(265, பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றுற் செல்வம்
நயனுடை யான்கட் படின்.

(இ-ள்.) செல்வம்-செல்வமானது, நயனுடையான்கண்-ஒபுரவுஉடையானிடத்து, படின்-உண்டானல், (அது) பயன்மரம்-பயன்படுகிறமரம், உள்ஊர்-ஊரினடுவே, பழுத்தற்று-பழுத்தாற்போலும்—எ-று.

பயன்மரம்-பண்புத்தொகைநிலைத்தொடர். உள்ளூர்-இலக்கணப்போலி. பழுத்தற்று-பழுத்தால்அற்று. வினையெச்ச ஈறுதொகுததல். அன்றி-பழுத்தது அற்றுஎனவும்பிரிக்க. தொழிற்பெயரீறு தொகுத்தல். தொடர்-நிறைந்தற்று என்றதற்குக் கூறியவாறு கூறுக. ஆல்-அசை.

(266) மருந்தாகித் தப்பா மரத்தற்றாற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்.

(இ-ள்.) செல்வம்-செல்வமானது, பெருந்தகையான் கண்-பெருந்தன்மைஉடையானிடத்து, படின் - உண்டானால், (அது) மருந்தாகி- (வேர்முதலியஎல்லாவுறுப்புகளும்நோய்களுக்கு) மருந்தாகி, தப்பா-தப்புதலில்லாத, மரத்துஅற்று-மரத்தைஒக்கும்—எ-று.

தப்புதலாது, கொள்ளுதற்கரிய இடங்களினிற்றல், மறைந்துநிற்றல், காலத்தால் இலை, பூ, காய், கனிமுதலியன இல்லாததாதல், பயன்படாமை. பெருந்தகையான். பண்படியாகப் பிறந்தபெயர்ப்பகுபதம். பெருந்தகை-பகுதி, ய்-சந்தி, ஆன்-ஆண்பால்விகுதி. ஆல்-அசை.

௬௯-ஆம்-பாடம்.

(267) இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்.

(இ-ள்.) கடன்-(தாம்)செய்யத்தகுவனவற்றை, அறி-அறிந்த, காட்சியவர்-இயற்கையறிவுடையார், இடன்இல்-செல்வம்இன்மையாகிய, பருவத்தும்-காலத்திலும், ஒப்புரவிற்கு-ஒப்புரவுசெய்வதற்கு, ஒல்கார்-தளரார்—எ-று.

இடனில்-எழுவாய்த்தொகாநிலைத்தொடர். இல்பருவம் பண்புத்தொகைநிலைத்தொடர். காட்சியவர் காட்சி-பகுதி, ய்-சந்தி,அ-சாரியை, வ்-சந்தி,அர்-பலர்பால்விகுதி, இதுதொழிலடியாகப்பிறந்த பெயர்ப்பகுபதம். காட்சி காண்-பகுதி, சி-தொழிற்பெயர்விகுதி, ணகரம் டகரமானது-சந்தி.

(268) ஒப்புரவி னால்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து.

(இ-ள்) ஒப்புரவினால்-ஒப்புரவுசெய்தலால், கேடு-(தனக்கு) கேடு, வருமெனின்-வருமென்றுசொல்வாருளரானால்அ,

ஃது-அதை, ஒருவன்-ஒருவன், விற்று-(தன்னை) விற்றுவது, கோள்தக்கதுஉடைத்து - கொள்ளுதலாகியதகுதியையுடையது—எ-று.

கேடு-முதனிலைதிரிந்ததொழிற்பெயர். கோட்டக்கது. இருபெயரொட்டுப் பண்புத்தொகைநிலைத்தொடர். தக்கது இறந்தகாலத்தொழிற்பெயர். உடைத்து. ஒன்றன்பாற் குறிப்புவினைமுற்று.

(269, வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

(இ-ள்) வறியார்க்கு (ஒருபொருளும்) இல்லாதவர்க்கு, ஒன்று-(அவர்வேண்டியதாகிய) ஒருபொருளை, ஈவதே-கொடுப்பதே, ஈகை-கொடுத்தலாம், மற்றுஎல்லாம்-அதல்லாதஎல்லாஈகையும், குறியெதிர்ப்பை-குறியெதிர்ப்பாகிய, நீரதுஉடைத்து-தன்மையைஉடையது—எ-று.

ஒன்று-எண்ணலளவையாகுபெயர். ஈவது - எதிர்காலத்தொழிற்பெயர். ஏ. பிரிநிலை. மற்று பிறிதென்னும்பொருளது. குறியெதிர்ப்புஆவது, அளவுகுறித்துவாங்கிய அளவேஎதிர்கொடுப்பது. இத்தொழிற்பெயர் ஈற்றில் ஐகாரச்சாரியைபெற்றது. நன். சூ, உயிரீற் - ருரு. ஐயீற்றுடைக்குற்றுகரமுமுளவே. நீரது பண்புப்பெயர். நீர் - பகுதி, அ-சாரியை, து-பகுதிப்பொருள்விகுதி. எல்லாம்உடைத்து என்பது பன்மையினொருமைவந்த வழுவமைதி. நன். சு. சூ.கஅகூ

(270) நல்லா றெனினுங் கொளறீது மேலுலகம்
இல்லெனினு மீதலே நன்று.

(இ-ள்) கொளல்-இரத்தல், நல்ஆறு - (முத்தியுலகுக்கு) நல்வழி, எனினும்-என்றுசொல்வாருண்டா யிருப்பினும், தீது-(அது) தீமையுடையது, மேல்உலகம் - அம்முத்தியுலகத்தை, இல்எனினும்-(அடைதல்) இல்லையென்று சொல்வாருளராயினும், ஈதலேநன்று - கொடுத்தலே நன்மையுடையது.

உம்மைகளிரண்டும் எதிர்மறைகள். தீது, நன்று குறிப்பு வினைமுற்றுகள். ஏ-பிரிநிலை.

(271) ஆற்றுவா ராற்றல் பசியாற்ற லப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின்.

(இ-ள்) ஆற்றுவார்-(தவத்தால்) வலியையுடையாரது, ஆற்றல்-வலியாவது, பசி-(தம்மையடைந்த) பசியை, ஆற்றல்-பொறுத்தல், (அவ்வலியானது) அப்பசியை - அந்தப்பசியை, மாற்றுவார் - (ஈகையால்) ஒழிப்பவரது, ஆற்றலின்-ஆற்றலுக்கு, பின்-பிற்பட்டது—எ-று.

ஆற்றுவார்,மாற்றுவார்-எதிர்காலவினையாலணையும்பெயர் ஆற்றுவராற்றல், ஆறும்வேற்றுமைத்தொகைநிலைத்தொடர். தொழிற்பண்புத்தற்கிழமை. மாற்றுவாராற்றல் -என்பதும் அது. ஆற்றலின் ஐந்தனுருபு-எல்லைப்பொருளில்வந்தது.

(272) அற்றா ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

(இ-ள்) அற்றார்-வறியாரது, அழிபசி-மிகுந்தபசியை, தீர்த்தல்-(அறத்தைநோக்கி)தீர்க்கக்கடவன், பொருள்பெற்றான் ஒருவன்-பொருளைப்பெற்றவனாகியஒருவன், வைப்புஉழி-(அப்பொருள்தனக்குஉதவ) வைத்தலாகிய இடம், அஃது - அந்தஅறம், (ஆதலால்) —எ-று.

அற்றார்-இறந்தகாலவினையாலணையும்பெயர். அழி-வினைத்தொகையாகிய காலங்கரந்தபெயரெச்சம். காரியபொருட்டாய்நின்று பசிஎன்னும்காரணப்பெயர்கொண்டது. எல்லா நன்மையுங்கெட வருதலால் அழிபசிஎன்றார். தீர்த்தல்-பிறவினைவியங்கோண்முற்று. தீர்-பகுதி, த்-சந்தி, து-சாரியை, அல்-விகுதி, உகரக்கேடு-சந்தி. வைப்பு-தொழிற்பெயர். வை-பகுதி. ப்-சந்தி, பு-விகுதி. இதுபண்புத்தொகைநிலைத்தொடராய் உழியென்னும் பெயர்கொண்டது.

சஎ-ஆம் பாடம்-மூதுரை.

(273) கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோடொப்பாரும்போல்வாரோ- விற்பிடித்
நீர்கிழிய வெய்த வடுப்போல மாறுமே [து
சீரொழுகு சான்ரோர் சினம்.

(இ-ள்) கடுஞ்சினத்து-கடுமையாகியகோபத்தினல், கற்பிளவோடு-கல்லினதுபிளப்போடு, ஒப்பர் - (பின்கூடாமையால்) ஒப்பவர்கள், கயவர்-கீழ்மக்கள், பொற்பிளவோடு-பொன்னினதுபிளப்போடு, ஒப்பாரும் - ஒப்பவர்களும், போல்வாரோ-இடையானவர்களே, சீர்-சிறந்தவழியில், ஒழுகு-நடக்கின்ற, சான்ரோர் - (நற்குணங்களால்) நிறைந்தோரது, சினம்-கோபம், வில்பிடித்து-வில்லைப்பிடித்து, நீர்கிழிய-நீர்கிழியும்படி, எய்த-(அம்பினல்) எய்ததினுலுண்டாகும், வடுப்போல - வடுவைப்போல, மாறும் - (ஒருவராலல்லாமல்உடனே) ஒழியும்—எ-று.

கடுஞ்சினத்தால் பிரிந்தவர் வேறுபட்டிருத்தலால் கயவரையும், ஒருவர்நடுவாகநின்று கூட்டக் கூடுதலால், சான்ரோரையும், போலுதலால் இடையாயினோரைப் போல்வார் என்ரூர். இதுவும்சான்ரோரும் வினையாலணையும்பெயர். ஓடு உருபுகள் ஒப்புப்பொருள. கற்பிளவு, பொற்பிளவு, ஆரும் வேற்றுமைத்தொகைநிலைத்தொடர். பொருள் தொழிற் பண்புத்தற்கிழமை. உம்மை இழிவுசிறப்பு. ஏ. பிரிநிலை. பின்னுள்ளது ஈற்றசை. எய்தவடு சுட்டவடுஎன்பது போலவந்த பெயரொச்சத்தொகாநிலைத் தொடர்.

நன்னெறி.

(274) உள்ளங் கவர்ந்தெழுந்தோங்குசினங் காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க-வெள்ளம்

தடுத்தலரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்த லரிதோ விளம்பு.

(இ-ள்.) வெள்ளம்-வெள்ளத்தை, தடுத்தல் - (புறத்திலே செல்லாமல்) தடைசெய்தல், அரிதோ-அருமையுடையதோ, தடகரை - பெருமையாகியகரையை, பேர்த்து - உடைத்து, விடுத்தல் - (புறத்திலேசெல்ல) விடுத்தல், அரிதோ-அருமையுடையதோ, விளம்பு (நீ) சொல்லு, (அதுபோல) உள்ளம்-மனத்தை, கவர்ந்து - (தன்) வசப்படுத்தி, எழுந்தோங்கு-மிகுதியும் உயர்கின்ற, சினம்-கோபத்தை, காத்துக்கொள்ளும் அடக்கிக்கொள்ளுகின்ற, குணமே-குணமே, குணம்-உயர்ந்த குணம், என்க - என்றுஅறிக—எ-று.

எழுந்தோங்கு-ஒருபொருட்பன்மொழி-ந-ன்சு, சூ. ககஅ காத்துக்கொள்ளும். கா-பகுதி; த்-சந்தி, து - சாரியை, க்-சந்தி, கொள்-தற்செயல் விகுதி, அனைத்தும்ஒருபகுதி, ள்-சந்தி, உம்-பெயரொச்சவிகுதி. ஏ-பிரிநிலை. என்க. இடைச்சொலடியாகப்பிறந்த வியங்கோள்வினைமுற்று. வெள்ளம். வெள்-பகுதி, ள்-சந்தி, அம்-பண்புப்பெயர்விகுதி. இங்கேஅதுபண்பாகுபெயராய்ப் புதுநீர்ப்பெருக்கை உணர்த்திற்று. ஓ-இரண்டும்வினா. தடங்கரை. உரிச்சொற்றொகைநிலைத் தொடர். தட-அகரவீற்றுரிச்சொல். மழவுஎன்றாற்போல தடவுஎன வுவ்விகுதிபெற்றும், தடம்என அம்விகுதிபெற்றும் தனித்துவழங்கும்தான் அசை.

(275) முனிவினு நல்குவர் மூதறி ஞருள்ளக்
கனிவினு நல்கார் கயவர் - நனிவிளைவில்
காயினு மாகுங் கதலிதா னெட்டிபழுத்
தாயினு மாமோ வறை.

(இ-ள்) கதலி-வாழை, நனிவிளைவு-மிகுதியும்விளைதல், இல் இல்லாத, காயினும்-காயினாலும், (பிஞ்சினாலும்) ஆகும்-பய

ன்படும், எட்டி-எட்டியானது, பழுத்துஆயினும் - பழுத்துஆ னாலும், ஆமோ-பயன்படுமோ, அறை-சொல்லு, (அதுபோ ல)மூதறிஞர்-பேரறிவையுடையமேன்மக்கள்,முனிவினும்-(ஒ ருவர்மேல்) வெறுப்புள்ளபோதும், நல்குவர்-(தம்மால்கூடி யஅளவு) பயன்படுவர், கயவர்-கீழ்மக்கள், உள்ளக்கனிவினு ம்- உள்ளம்மகிழ்ச்சியுள்ளபோதும்; நல்கார்-(சிறிதும்)பயன் படார்—எ-று.

முனிவு, கனிவு-தொழிற்பெயர். உம்மைகள் நான்கனுள் முதலாவது, இறந்தது தழீஇயதனோடு இழிவுசிறப்பு. இர ண்டாவது உயர்வுசிறப்பு. மூன்றாவது எதிரதுதழீஇயதனோ டு இழிவுசிறப்பு. இதை ஆக்க உம்மை எனினும் பொருந்து ம். நான்காவது இறந்ததுதழீஇயதனோடு உயர்வுசிறப்பு. ஓ. வினா. முதுமைஅறிஞர் மூதறிஞர் என்றானது. நன்-சு. ருஅ, நஈ. காயின்-ஐந்தனுருபு. ஏதுப்பொருட்டு.

நாலடியார்.

(276) மதித்திறப் பாரு மிறக்க மதியா
மிதித்திறப் பாரு மிறக்க-மிதித்தேறி
ஈயுந் தலைமே லிருத்தலா லஃதறிவார்
காயுங் கதமின்மை நன்று.

(இ-ள்) மதித்து-(தம்மை) நன்குமதித்து, இறப்பாரும்-ந டப்பவர்களும், இறக்க-(அவ்வாறே)நடக்கக்கடவர், மதியா நன்குமதியாமல், மிதித்து-தாழ்வுபடுத்தி, இறப்பாரும்-நடப் பவரும், இறக்க(அவ்வாறே)நடக்கக்கடவர், ஈயும்-(இழிவா கிய)ஈயும், தலைமேல் - (தமது)தலையின்மேல், மிதித்துஏறி இருத்தலால் - (காலால்) மிதித்தேறியிருப்பதினால், அஃது அறிவார்-அவ்வீயினதுஅறியாததன்மைஅறிவோர், காயும்-(ம தியாமிதித்திறப்பாரை) கோபிக்கும், கதம் - கோபம், இன் மை-இல்லாமலிருத்தல், நன்று-நல்லது—எ-று.

உம்மைகள் மூன்றனுள் முன்னது எதிரது தழீஇயஎச்ச உம்மை. இடையிலுள்ளது இறந்ததுதழீஇயஎச்சவும்மை. ஈற்றிலுள்ளது இழிவுசிறப்பு. மூன்றனுருபு ஏதுப்பொருட்டு. மதியா - ஈறுதொகுத்தலாய்நின்ற எதிர்மறைவினையெச்சம். முன்னுள்ள மிதித்து என்பது குறிப்புச்சொல்.

(277) காவா தொருவன்றன் வாய்திறந்து சொல்லுஞ்
ஓவாதே தன்னைச் சுடுதலால் - ஓவாதே சொல்
ஆய்ந்தமைந்த கேள்வி யறிவுடையாரெஞ்ஞான்
காய்ந்தமைந்த சொல்லார் கறுத்து. [றும்

(இ-ள்) ஒருவன்-(அறிவில்லாத) ஒருவன், காவாது-காக்காமல், தன்வாய்திறந்து - தன்வாயைத்திறந்து, சொல்லும் சொல்-சொல்லுகிறசொல், ஓவாது-ஒழியாமல், தன்னை-அவனையே, சுடுதலால்-வருத்துதலால், ஓவாது-இடைவிடாமல் ஆய்ந்து-(பலநூல்களையும்) ஆராய்ந்து, அமைந்த - நிறைந்த கேள்வி அறிவுஉடையார்-கேள்விகளையும் அறிவையுமுடைய பெரியோர், காய்ந்துஅமைந்த-(நூல்களினாலே) கடியப்பட்டுள்ள கடுஞ்சொற்களை, எஞ்ஞான்றும்-எந்நாளிலும், கறுத்து-கோபித்தும், சொல்லார்-சொல்லார்கள்—எ-று.

சொல்-சுடுதலாவது அக்கடுஞ்சொல் சொன்னமையாலுண்டாகிய தீவினையானது சொன்னவனையே சென்றடைந்து வருத்துதல். ஏ-இரண்டும் அசை. உம்மை முற்று. உயர்வுசிறப்பும்மை விகாரத்தால்தொக்கது. பின்னுள்ளஅமைந்த என்பது இறந்தகாலவினையாலணையும்பெயர்.

(278) நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்
வேர்த்து வெகுளார் விழுமியோர்-ஓர்த்ததனை
உள்ளத்தா னுள்ளி யுரைத்துரா யூர்கேட்பத்
துள்ளித்தூண் முட்டுமாங் கீழ்

(இ-ள்) நிகர்அல்லார்-(தம்மோடு) ஒத்தலில்லார், நேர்த்து-எதிர்த்து, நீர்அல்ல-நன்மையல்லாதசொற்களை, சொல்லியக்கால்-சொன்னால், வேர்த்து - புழுங்கி, வெகுளார் - கோபியார், விழுமியோர் - (அறிவில்) சிறந்தோர், அதனை-அக்கடுஞ்சொற்களை, ஓர்ந்து - ஆய்ந்து, உள்ளத்தால் - மனத்தால், உள்ளி - (பலமுறையும்) நினைத்து, உரைத்து - (பலரோடும்) சொல்லி, உராய் - (தன்னுடலைச்சுவர்முதலியவற்றோடு) உராய்ந்து, ஊர்-ஊரிலுள்ளாரெல்லாம், கேட்ப-கேட்கும்படி, துள்ளி-துடித்து, தூண்முட்டும் தூணில்முட்டுவன், கீழ்-கீழ்மகன்—எ-று.

அல்லார், அல்ல பண்படியாகப்பிறந்த வினைக்குறிப்புப்பெயர். சொல்லியக்கால், சொல் - பகுதி, ல் - சந்தி, இன் சாரியை, சாரியைனகரக்கேடு - கடைக்குறை, ய் - சந்தி, அ-சாரியை, க்-சந்தி, கால்-எதிர்காலவினையெச்சவிகுதி. விழுமியோர் விழுமு-பகுதி, இ-சாரியை, ய்-சந்தி, ஆர்-பலர்பால்விகுதி. விகுதிஆ-ஓவானது, நன்-சு, சூ. கசுஎ. இதுபண்படியாகப்பிறந்தபெயர். ஓர்த்து-வலித்தல்விகாரம். அதனை என்பது தொகுதியொருமை. உராய்என்னும் முதனிலைத் தனிவினை-வினையெச்சப்பொருள்படநின்றது. ஊர்-இடவாகுபெயர்- கீழ்-பண்பாகுபெயர்.

சஅ - ஆம்பாடம்.

(279) இளையா னடக்க மடக்கங் கிளைபொருள்
இல்லான்கொடையேகொடைப்பயன்-எல்லாம்
ஒறுக்கு மதுகை யுரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை.

(இ-ள்) இளையான் - இளமைப்பருவத்தையுடையான், அடக்கமே-அடங்குதலே, அடக்கம்-அடங்குதலாம், கிளை-வளர்கின்ற, பொருள்இல்லான் - பொருளில்லாதவறியன், கொ

டையே-(ஏதேனும்ஒன்றை) கொடுத்தலே, கொடைப்பயன் கொடையாகியபயனும், எல்லாம்-(போரின்வகைகளை) எல்லாம், ஒறுக்கும்-வெல்லத்தகும், மதுகை-(உடலினது) வலியையும், உரன்-(அறிவினது)வலியையும், உடையாளன் - உடையான், பொறுக்கும்-பொறுக்கின்ற, பொறையே-பொறுத்தலே, பொறை-பொறுத்தலாம்—எ-று.

ஏ-இரண்டும் பிரிநிலை. எழுவாயாகநின்ற அடக்கமென்பதனோடும் பிரிநிலைஏகாரங்கூட்டுக. உடையாளன்-உடையனுந்தன்மையை யாளுதலுடையான் என்பது பொருள். உடையாள்-பகுதி, அன் - விகுதி. தொழிலடியாகப்பிறந்தபெயர். கொடை, பொறை-ஐகாரவீற்றுத்தொழிற்பெயர். கொடை-கொடுக்கப்படும் பொருளை உணர்த்துமானுல் ஐகாரவீறு-செயப்படுபொருள் விகுதியெனக்கொள்க. பிறப்பின் பயனுகிய எல்லா அறங்களிலும் கொடுத்தல் சிறந்ததாதலால் கொடைப்பயனென்றார். இது இருபெயரொட்டுப் பண்புத்தொகை.

(280) கல்லெறிந் தன்ன கயவர்வாயின்னுச்சொல்
எல்லாருங் காணப் பொறுத்துய்ப்பர் ஒல்லை
இடுநீற்ருற் பையவிந்த நாகம்போற் றத்தம்
குடிமையால் வாதிக்கப் பட்டு.

(இ-ள்) (உயர்ந்தகுடியிற்பிறந்தோர்) இடு-(மந்திரித்து)எறிகின்ற, நீற்ருல்-நீற்றினுல், பைஅவிந்த-படம் அடங்கிய, நாகம்போல்-நாகத்தைப்போல, தத்தம்-தங்கள் தங்களது, குடிமையால்-உயர்குடிப்பிறப்பின்தன்மையால், வாதிக்கப்பட்டு-வருத்தப்பட்டு, கல்எறிந்தன்ன-கல்லை எறிந்தாலொத்த, கயவர்வாய்-கீழ்மக்களுடைய் வாயினித்துண்டாகும், இன்னுச்சொல்-துன்பந்தருஞ்சொற்களை, எல்லாரும்காண-யாவருங்

காண, பொறுத்து-பொறுத்துக்கொண்டு, உய்ப்பர்- (தம்மை அடக்கமாகிய நல்வழியில்)செலுத்துவர்—எ-று.

குடிமையால் வாதிக்கப்படுதலாவது, கடுஞ்சொற்களைச் சொல்லுதலும்,சொல்லிக்கீழ்மக்களைத் தம்மோடு ஒப்பக்கொள்ளுதலும், குடிப்பிறப்புக்கு ஒவ்வாவெனக் கருதுதலும், தமது முன்னைவினையால் இஃது விளைந்ததெனத்தம்மை ஒறுத்தலுமாம். எறிந்தன்ன்-எறிந்தால்அன்ன, எறிந்ததுஅன்ன எனப்பிரிக்க. முன்னது வினையெச்சத்தொகாநிலைத்தொடர், பின்னது இரண்டாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். அன்ன-இடைச்சொலடியாகப்பிறந்த குறிப்புப்பெயரொச்சம். கயவர்-கயம் (கீழ்மை) பகுதி, மகரக்கேடும், வகரத்தோற்றமும் சந்தி, அர் - பலர்பால்விகுதி. இன்னாச்சொல்-பண்புத்தொகைநிலைத்தொடர். அன்றிஇன்னாத-என்னும்பெயரொச்சத்தீறு தொகுத்தலாய்நின்று புணர்ந்தபெயரொச்சத் தொகாநிலைத்தொடரெனினும் பொருந்தும்.

(281)மாற்றாராய் நின்றுதம் மாறேற்பார்க் கேலாமை
ஆற்றாமை யென்னா ரறிவுடையார்-ஆற்றாமை
நேர்த்தின்னா மற்றவர் செய்தக்காற் றாமவனைப்
பேர்த்தின்னா செய்யாமை நன்று.

(இ-ள்.) மாற்றாராய்நின்று-பகைவராய்நின்று, தம்-தமது, மாறு-பகையை, ஏற்பார்க்கு-ஏற்றுக்கொள்ளும்மெல்லியோனை, ஏலாமை-(தாம்) எதிர்க்காமையை, ஆற்றாமை-வலியில்லாமை, என்னார் - என்றுசொல்லார், அறிவுடையார்-அறிவுடையோர், (ஆதலால்) அவர்-அம்மெல்லியோர், ஆற்றாமை பொறுக்காமல், நேர்த்து-எதிர்த்து, இன்னா - துன்பந்தருஞ் செய்கையை, செய்தக்கால்-செய்தால், தாம்-(வலியோராகிய)தாம், பேர்த்து- மீட்டு, அவனை-அவனை, இன்னாசெய்யாமை-துன்பந்தருஞ்செயலைச் செய்யாதிருத்தல், நன்று-நன்மையுளது—எ-று.

ஏலாமை, ஆற்ருமை, செய்யாமை-எதிர்மறைத் தொழிற் பெயர்கள். பின்னுள்ள-ஆற்ருமை-எதிர்மறைவினையெச்சம். ஏற்பார்க்கு-இதிலுள்ள கு-உருபுமயக்கம். இன்னுசெய்யாமை-இன்னுவைச்செய்யாமை என இரண்டாவது விரித்தால் அவனா என்பதிலுள்ள ஐயுருபைக் குவ்வுருபாகத்திரிக்க. இன்ஞ-இரண்டும் காரியவாகுபெயர். நன்று குறிப்புவினைமுற்று.

(282) நெடுங்கால மோடினு நீசர் வெகுளி
கெடுங்கால மின்றிப் பரக்கும்-அடுங்காலை
நீர்கொண்ட வெப்பம்போற் ருனே தணியுமே
சீர்கொண்ட சான்ருேர் சினம்.

(இ ள்.) நீசர்-கீழ்மக்களுடைய, வெகுளி-கோபம், நெடுங்காலம்-நெடுநாள், ஓடினும் - செல்லினும், கெடுங்காலம்-ஒழியுங்காலம், இன்றி-இல்லாமல், பரக்கும் - வளரும், சீர்கொண்ட-நல்லொழுக்கத்தைக்கொண்ட, சான்ருேர்-மேன்மக்களுடைய, சினம்-கோபம், அடும்காலை- காய்ச்சுங்காலத்தில், நீர்கொண்ட-நீரானதுகொண்ட, வெப்பம்போல்-வெம்மையைப்போல, தானேதணியும்- (ஒருவராலன்றி) தானே ஆறிப்போம்—எ-று.

பரக்கும்-பர-பகுதி, க் - சந்தி, கு-சாரியை, உம்-விகுதி, உகரக்கேடு-சந்தி. வெப்பம்-வெம்-பகுதி, பம்-பகுதிப்பொருள் விகுதி, மகரம்-பகரமானது-சந்தி. ஏ-தேற்றம். பின்னுள்ளது-ஈற்றசை. உம் - உயர்வுசிறப்பு. நீசர்-நீசம்-பகுதி, அர்-பலர்பால்விகுதி. பகுதியின் அம்முக்கேடு-கடைக்குறை. வெகுளி-வெகுள்-பகுதி, இ-தொழிற்பெயர்விகுதி.

(283) உபகாரஞ் செய்ததனை யோராதே தங்கண்
அபகார மாற்றச் செயினும்-உபகாரம்
தாஞ்செய்வ தல்லாற் றவத்திறை றிங்கூக்கல்
வான்ருேய் குடிப்பிறந்தார்க் கில்.

(இ-ள்.) உபகாரம்-உபகாரத்தை, செய்ததனை-செய்ததை, ஓராது-உணராமல், தங்கண்-(உபகாரஞ்செய்த) தம்மிடத்து அபகாரம்-அபகாரத்தை, ஆற்ற-மிகுதியாக, செயினும்-(அவ்வுபகாரம் பெற்றுக்கொண்டவர்) செய்தாலும், உபகாரம்-உபகாரத்தை, தாம்செய்வது அல்லால்-தாம்செய்வதே அல்லாமல், தவற்றினல்-(அவர்செய்த)குற்றத்தால்,(அபகாரத்தால்)தீங்குஊக்கல்-(பிரதி)தீமைசெய்யக்கருதுதல், வான்தோய்குடி-வானுலகத்தைத்தீண்டியகுடியில், உயர்ந்தகுடியில்) பிறந்தார்க்கு-பிறந்தவர்களுக்கு, இல்-உண்டாவதில்லை—எ-று.

செய்தது - இறந்தகாலத்தொழிற்பெயர். செய்வது-எதிர்காலத்தொழிற்பெயர். ஊக்கல்-(மனமெழுதல்) தொழிற்பெயர். ஊக்கு-பகுதி, அல்-தொழிற்பெயர்விகுதி, உகரக்கேடு. சந்தி. வான்-இடவாகுபெயர். வான்றோய்குடி-என்றது-இலக்கணை. ஏ-ஈற்றசை. உம்மை-இழிவுசிறப்பு.

(284) கூர்த்துநாய்கௌவிக்கொளக்கண்டுந்தம்வாயால்
பேர்த்துநாய் கௌவின ரீங்கில்லை-நீர்த்தன்றிக்
கீழ்மக்கள்கீழாய சொல்லியக்காற் சொல்பவோ
மேன்மக்க டம்வாயான் மீட்டு.

(இ-ள்) கூர்த்து-(கோபம்)மிகுந்து, நாய்-நாயானது,கௌவிகொள- (தம்மை) கவ்விக்கொள்ள, கண்டும் - பார்த்தும், தம்வாயால்-தமது வாயினல், நாய்-நாயை, பேர்த்துக்கௌவினர்-மாறுகக்கௌவினவர்கள், ஈங்குஇல்லை-இவ்வுலகத்தில்இல்லை, (அதுபோல) கீழ்மக்கள்-கீழ்மையாகியமக்கள், நீர்த்து-நன்மையாகியசொல், அன்றி-அல்லாமல், கீழாய - கீழ்மையாகிய சொற்களை, சொல்லியக்கால்-சொல்லினல், மேன்மக்கள்-மேன்மையாகிய மக்கள், தம்வாயால்-தமதுவாயினல், மீட்டுச்சொல்பவோ-பிரதிசொல்வார்களோ—எ-று

உம்-உயர்வுசிறப்பு, பேர்த்து, மீட்டு-வினைமாற்றுப்பொரு

லில்வந்த இடைச்சொற்கள். கீழாய-வினையாலணையும்பெய ர். ஓ-எதிர்மறை.

அறநெறிச்சாரம்.

(285) காய்த லுவத்த லகற்றி யொருபொருட்கண்
ஆய்த லறிவுடையார் கண்ணதே-காய்வதன்கண்
உற்ற குணந்தோன்றா தாகு முவப்பதன்கண்
குற்றமுந் தோன்றாக் கெடும்.

(இ-ள்.) ஒருபொருட்கண்-ஒருபொருளின்மேல், காய்வத ன்கண்-வெறுப்புண்டாகியபோது, உற்றகுணம் - (அதனிடத் துள்ள) நன்மை, தோன்றாதுஆகும் - தோன்றாததாகும், உவப்பதன்கண் - விருப்புண்டாகியபோது, குற்றமும் - (அத னிடத்துள்ள) குற்றமும், தோன்றா-தோன்றாமல், கெடும் இல்லாததாகும், (ஆதலால்) காய்தல்-வெறுப்பையும், உவத் தல்-விருப்பத்தையும், அகற்றி-நீக்கி, ஆய்தல்-(குணதோஷங் களை)ஆராய்தல், அறிவுடையார்கண்ணதே-அறிவுடையாரிட த்ததே—எ-று.

ஏ-பிரிநிலை. தோன்றுதலில் குணத்தினும் குற்றமேமுற்பட் டதாகலின் உம்மை-உயர்வுசிறப்பு. கண்ணது-இடமடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று. தோன்றா-மல்விகுதிதொகுத்த லாய்நின்ற எதிர்மறைவினையெச்சம்.

சகூ-ஆம்-பாடம்-குறள்.

(286) செல்லிடத்துக்காப்பான் சினங்காப்பானல்லிடத்துக்
காக்கினென் காவாக்கா லென்

(இ-ள்.) சினம்-(தன்)கோபம், செல்இடத்து - பலிக்குமிட த்தில், காப்பான் - (அக்கோபம்உண்டாகாமல்)காப்பவனே, காப்பான்-(அருளால்)தடுப்பவனாவான், அல்இடத்து - மற்ற பலியாதஇடத்தில், காக்கின்என்-(அதை) தடுத்தாலென்ன, காவாக்கால்என்-காக்காவிட்டாலென்ன—எ-று.

செல்லிடம்-தன்னின்மெலியார். அல்லிடம்-தன்னின் வலியார். செல்லிடம்-வினைத்தொகைநிலைத்தொடர். அல்லிடம்-பண்புத் தொகைநிலைத்தொடர். என்-எவனென்பதன்மரூஉ.

(287) மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய
பிறத்த லதனான் வரும்.

(இ-ள்) யார்மாட்டும்-யாவரிடத்தும், வெகுளியை-கோபித்தலை, மறத்தல்-மறந்துவிடுக, தீயபிறத்தல்-(ஒருவர்க்கு) தீயன உண்டாதல், அதனான்வரும்-அதனாலேவரும், (ஆதலால்) எ-று.

மறத்தல், அல்ஈற்று வியங்கோள்வினைமுற்று. பிறத்தல் தொழிற்பெயர். உம்மைமுற்று. தீய-பண்படியாகப் பிறந்த பெயர்.

(288) நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்தின்
பகையு முளவோ பிற.

(இ-ள்.) நகையும்-(முகத்தின்கண்உள்ள) நகையையும், உவகையும்-(மனத்தின்கண்உள்ள) களிப்பையும், கொல்லும்-கொன்றுஎழுகின்ற, சினத்தின்-கோபத்தினும், பிறபகையும்-(அதற்கு) வேறானவையாகிய பகைகளும், உளவோ-உண்டோ—எ-று.

உம்மை-உயர்வுசிறப்பு. ஓ-எதிர்மறை. பிற-இடைச்சொலடியாகப்பிறந்தபெயர்ப்பகுபதம். பிற-பகுதி, அ-விகுதி, பகுதி அகரம் கடைக்குறை.

(289) தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம்.

(இ-ள்) தன்னை-(ஒருவன்) தன்னை, தான்-தான், காக்கின்-(துன்பம்வராமல்) காக்கநினைத்தால், சினம்காக்க-(தன்மனத்தில்) கோபம்வராமல்காக்கக்கடவன், காவாக்கால்- காக்

காவிட்டால், சினம்-அக்கோபம், தன்னையேகொல்லும்-தன்னையேகெடுக்கின்றதுன்பங்களை அடைவிக்கும்—எ-று.

ஏ-பிரிநிலை. இங்கே கொல்லுதல் துன்பமிகுத்தல்.

(290, சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லியினமென்னும்
ஏமப் புணையைச் சுடும்.

(இ-ள்) சினம்என்னும் - கோபமென்னும், சேர்ந்தாரைக் கொல்லி-நெருப்பு, இனம்என்னும்- (தனக்கு இடமானவரையேஅல்லாமல் அவர்க்கு) இனமென்றுசொல்லும், ஏமம்-இன்பந்தருவதைஉபதேசிக்கும், புணையை-மரக்கலம் ஆயினுனையும், சுடும்-சுட்டுவிடும்—எ-று.

சேர்ந்தாரைக்கொல்லி - காரணப்பெயர். சேர்ந்தாரைக் கொல்-பகுதி, ல்- சந்தி, இ-வினைமுதற்பொருள்விகுதி, சேர்ந்தாரைஎன உயர்திணைப்பலர்பாலொன்றைக் கூறினும் நன்-சூ. கஎ0. ஆல்-மற்றநான்குபாலுங் கொள்க. ஏமப்புணை-இரண்டாம்வேற்றுமைஉருபும் பயனும் உடன்தொக்க தொகைநிலைத்தொடர்.

(291, சினத்தைப் பொருளென்று கொண்டவன்கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று

(இ-ள்) சினத்தை-கோபத்தை, பொருளென்று-(தன்வல்லமையைத்தெரிவிப்பதாகிய) ஒருகுணமென்று, கொண்டவன்(தன்னிடத்தே) கொண்டவன், கேடு-(அவ்வல்லமையை) இழத்தல், நிலத்து-நிலத்தில், அறைந்தான் - அறைந்தவனது, கை-கையானது, பிழையாதற்று-(நிலத்தைஅடைதல்) தப்பாததுபோலத்தப்பாது—எ-று.

கொண்டவன்கேடு-எழுவாய்த்தொகாநிலைத்தொடர். கொண்டவனது கேடுஎன ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடரொன்னின் அவ்வாறும்வேற்றுமையும் வினைமுதற்பொருளின்கண்வந்ததே ஆம். கேடு-முதனிலைதிரிந்த தொழிற்பெய

ர். பிழையாதற்று-பிழையாதது அற்று என எதிர்மறைத்தொழிற்பெயர்ஈறு தொகுத்தலாம், பிழையாத அற்று எனப்பெயரெச்ச ஈறுதொகுத்தலெனக்கொள்ளின், பெயரெச்சம்வருமொழிப்பகுதியோடுமுடிந்ததாம் அற்று அன்என்னும் இடைச்சொலடியாகப்பிறந்த குறிப்புவினைமுற்று.

ருo-ஆம்-பாடம்-நாலடியார்.

(292) கோதை யருவிக் குளிர்வரை நன்னட
பேதையோ டியாது முரையற்க-பேதை
உரைப்பிற் சிதைந்துரைக்குமெல்லும் வகையா
வழுக்கிக் கழிதலே நன்று. [ன்

இ-ள். கோதை-மாலையையொத்த, குளிர் குளிர்ச்சியாகிய வரை-மலையைச்சார்ந்த, நன்னட-நன்மையாகியநாட்டரசனே, பேதையோடு-மூடனிடத்து, யாதும்-(உறுதியைத்தருவதாகிய) எதையும், உரையற்க-சொல்லாதிருக்கக்கடவாய், (ஏனெனில்) உரைப்பின்-நீசொல்லினால், பேதை-மூடன், சிதைந்து-(சொல்வதற்குமுன்னிருந்த தனதுநிலைமை) கெட்டு, உரைக்கும்-(கடுஞ்சொல்) சொல்லுவான், வழுக்கி-(ஆதலால் அவனில்நின்று) தப்பி, கழிதலே-நீங்குதலே, நன்று-நன்மையுள்ளது—எ-று.

குளிர்வரை-பண்புத்தொகைநிலைத் தொடராகவாவது-வினைத்தொகைநிலைத் தொடராகவாவதுகொள்க. வரை-மூங்கிலின்பெயர் அதுவிளைகின்ற மலைக்காதலால்-சினையாகுபெயர்-பேதை-பண்பாகுபெயர். உம்-முற்றுப்பொருளோடு இழிவுசிறப்புப் பொருளில்வந்தது. ஓடுஉருபு- ஏழாவதனிடப் பொருளில்வந்தது. ஏ பிரிநிலை.

(293.) காதலார்சொல்லுங்கடுஞ்சொலுவந்துரைக்கும்
ஏதிலா ரின்சொலிற் றீதாமோ - போதெலாம்
மாதர்வண் டார்க்கு மலிகடற் றண்சேர்ப்ப
ஆவ தறிவார்ப் பெறின்.

இ-ள். போதுஎலாம்-மலர்களிலெல்லாம், மாதர்-அழகாகிய வண்டுஆர்க்கும்-வண்டுகள் ஆரவாரிக்கின்ற, மலி-(வெளம்) நிறைந்த, கடல்-கடலினது, தண்சேர்ப்ப-குளிர்ச்சியாகிய துறையையுடையானே, ஆவது-(தனக்கு ஆகவேண்டிய) நன்மையை, அறிவார்-அறியும்பெரியோரை, பெறின்-(ஒருவன்) பெற்றிருந்தால், காதலார்-(தன்னிடத்து) உள்ளன்புடையார், சொல்லும்-சொல்லுகின்ற, கடுஞ்சொல்-(செவிக்கு) கடுமையாகியசொல், உவந்து-மகிழ்ந்து, உரைக்கும்-சொல்லுகின்ற, ஏதிலார்-அயலாருடைய, (உள்ளன்பில்லாரது) இன்சொலின்-(செவிக்கு) இனிமையாகியசொல்லினும், தீதுஆமோ-தீமையைத்தருவதாகுமோ—எ-று.

முனகாதலாரொன்றமையால் உள்ளன்பில்லாரை அயலாரொன்ருர். ஐந்தனுருபு-எல்லைப்பொருட்டு. ஓ-எதிர்மறை. ஆவது-வினையாலணையும்பெயர். அறிவார் - உயர்திணைவினையாலணையும் பெயரும், தொடர் இரண்டாம்வேற்றுமைத் தொகைநிலையும்ஆதலால் வருமொழிமுதல் வல்லினம்மிகுந்தது.

(294.) வேற்றுமை யின்றிக் கலந்திருவர் நட்டக்கால்
தேற்று வொழுக்க மொருவன்க ணுண்டாயின்
ஆற்றுந் துணையும் பொறுக்க பொறுனுயின்
தூற்றுதே தூர விடல்.

(இ-ள்.) இருவர்-இரண்டுபேர், வேற்றுமைஇன்றி-(தான்அவனென்னும்) பேதமில்லாமல், கலந்துநட்டக்கால் - (தங்களில்) ஒற்றுமைப்பட்டுச் சிநேகித்தால், தேற்று- (பிறர்க்கு) தெ

ரிவிக்கக்கூடாத, ஒழுக்கம்-நடக்கை, ஒருவன்கண்- (இருவரில்) ஒருவனிடத்து, உண்டாயின்-உண்டானால், ஆற்றுந்துணையும் - (ஒருவன்) பொறுக்குமட்டும், பொறுக்க-பொறுக்கக்கடவன், பொருன்ஆயின்-பொறுக்கானால், தூற்றாதே-(அவனடங் கெட்டநடக்கையை) பலரறியச்சொல்லாமலே, தூரவிடல் (நட்பை) தூரவிடக்கடவன்—எ-று.

தேற்றாஒழுக்கம் என்பதில் தேற்றாஎன்பது பிறவினைக்கும் தன்வினைக்கும் பொதுவாதலால்-அவன்தெரியாமற்செய்த ஒழுக்கமெனவும் பொருளுரைத்துக்கொள்க. இருவழியும் பெயரொச்ச ஈறுதொகுத்தல். நட்டக்கால்-நடு-பகுதி, அ-சாரியை, க்-சந்தி, கால்-எதிர்காலவினையெச்சவிகுதி, பகுதி ஒற்று இரட்டியது விரித்தல்விகாரம், உகரக்கேடுசந்தி. ஏ-பிரிநிலை. விடல்-வியங்கோள்வினைமுற்று. உம்மை-முற்று.

(295.) இன்னா செயினு மினிய வொழிகென்று
தன்னையே தானோவி னல்லது-துன்னிக்
கலந்தாரைக் கைவிடுதல் கானக நாட
விலங்கிற்கும் விள்ள லரிது.

(இ-ள்.) கானகம்-காட்டைச்சார்ந்த, நாட-நாட்டையுடையானே, விள்ளல்-கூடிப்பிரிதல், விலங்கிற்கும்-மிருகங்களுக்கும், அரிது-அரிதாகும், (ஆதலால்) இன்னாசெயினும்-(சிநேகர்) துன்பந்தருஞ்செய்கைகளைச் செய்தாலும், இனிய- (நாம் முன்செய்த தீவினைப்பயன்கள் அவர்வழியாகவந்தன ஆதலால்) இனிமையுடையன, ஒழிகஎன்று-(அவர்செய்தனவென்று எண்ணுவதை) ஒழியக்கடவாயென்று, தன்னையே- (முன் அத்தீவினையைச்செய்த) தன்னையே, தான்நோவின்அல்லது, தான்நொந்து கொள்வதல்லாமல், துன்னி-நெருங்கி, கலந்தாரை-கலந்தசிநேகரை, கைவிடுதல்-சிநேகமொழியாதிருக்கக்கடவாய்—எ-று.

இன்னு-காரியவாகுபெயர். செய்யாமை பெரும்பான்மை யாதலால் செயினும்என்ற உம்மை இழிவுசிறப்பு. விலங்கிற் குமென்பதிலுள்ள உம்மையும் இழிவுசிறப்பு. ஒழிக என்பதி ல்-அகரஈறுதொகுத்தல். தன்னே, தான்-இரண்டும் முன்னிலை யில் படர்க்கைவந்தவழுவமைதி. ஏ-பிரிநிலை. நோவின் - இன் சாரிபைவேண்டா வழிவந்தமையால் விரித்தல்விகாரம். நோ வு முதனிலைதிரிந்து விகுதிபெற்ற தொழிற்பெயர். அல்லது- குறிப்புவினையெச்சம். கைவிடுதல் ஏவலொருமை எதிர்மறை வினைமுற்று. கைவிடு-பகுதி. து-சாரியை, அல்-விகுதி, உகரக் கேடு-சந்தி.

(296.) இன்பம் பயந்தாங் கிழிவு தலைவரினும்
இன்பத்தின் பக்க மிருந்தைக்க-இன்பம்
ஒழியாமை கண்டாலு மோங்கருவி நாட
பழியாகா வாறே தலை.

(இ-ள்.) ஒங்கு-உயர்ந்த, அருவி-அருவியையுடைய, நாட- மலைநாட்டையுடையானே, இன்பம்பயந்தாங்கு - இன்பங்கி டைத்தாற்போல, இழிவு-துன்பம், தலைவரினும்-கிடைத்தாலு ம், இன்பத்தின்பக்கம்-இன்பத்தின்பக்கத்தில், இருந்தைக்க- இருந்தாய்க்கு, (இருந்தஉனக்கு) இன்பம்ஒழியாமைகண்டா லும்-இன்பம் ஒழியாதுவருதலைக்கண்டாலும், பழிஆகா-பழி ப்புண்டாகாத, ஆறே-வழியில்நிற்றலே, தலை-சிறந்தது—எ-று

பயந்தாங்கு-பயந்தால்ஆங்கு, பயந்ததுஆங்கு-எனப்பிரிக்க ஆங்கு உவமைப்பொருள்தருவதோ ரிடைச்சொல். முன்இன் பம் என்றமையால் இழிவுஎன்பதற்குத் துன்பமெனப்பொரு ள் கூறப்பட்டது. இருந்தைக்க-நான்கனுருபேற்றுநின்ற மு ன்னிலையொருமை இறந்தகால வினையாலணையும்பெயர். இரு- பகுதி, த்-சந்தி, த்-இறந்தகாலஇடைநிலை, ஐ-விகுதி, சந்தியா ல்வந்ததகரம் நகரமானது மெலித்தல். இருந்தை - என்பது

நான்கனுருபேற்று இருந்தைக்கு-எனநின்று, நன்.பெயரியல் சுக-ஆம்-சூத்திரத்தால் நான்கனுருபு அகரமாகத்திரிந்து இருந்தைக்க எனஆயிற்று. இதனை-வியங்கோள்வினைமுற்றெனக் கொள்வாருமுண்டு. உம்மைகளிரண்டில் முன்னதுஇழிவுசிறப்பு. பின்னது உயர்வுசிறப்பு. ஏ-பிரிநிலை. ஒழியாமை - எதிர்மறைத் தொழிற்பெயர்.

(297) தான்கெடினுந் தக்கார்கே டெண்ணற்கதன்னுடம்பின்
ஊன்கெடினு முண்ணார்கைத் துண்ணற்க-வான்கவிந்த
வையக மெல்லாம் பெறினு முரையற்க
பொய்யோ டிடைமிடைந்த சொல்.

(இ-ள்.) தான்கெடினும்- (ஒருவன்) தான் கெடுவதாயிருப்பினும், தக்கார்கேடு-பெரியோர்கெடுதலை, எண்ணற்க - எண்ணாதிருக்கக்கடவன், தன்உடம்பின்-தன்உடம்பிலுள்ள, ஊன்கெடினும்-தசைகெடுவதாயிருப்பினும், உண்ணார்-உண்ணத்தகாதவருடைய, கைத்து-பொருளை, உண்ணற்க-உண்ணாதிருக்கக்கடவன், வான்கவிந்த-ஆகாயத்தால் கவியப்பட்ட, வையகம்எல்லாம்-பூமியைஎல்லாம், பெறினும்-பெறுவதாயிருப்பினும்,பொய்யோடு-பொய்யுடனே, இடைமிடைந்த-இடையே கலந்த, சொல்-சொல்லை, உரையற்க-சொல்லாதிருக்கக்கடவன்—எ-று.

தக்கார்கேடு-ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடராகக்கூறினும் பொருந்தும். தக்கார்-இறந்தகால வினையாலணையும்பெயர். உம்மைகள்மூன்றும் உயர்வுசிறப்பு. கைத்து இடமடியாகப்பிறந்தபெயர். கைஅத்து-சாரியை அகரங்கெடப்புணர்ந்த பெயராகக்கொள்ளின் கையில்எனஏழாவதுவிரிக்க. வான்கவிந்த-எழுவாய்த் தொகாநிலைத்தொடராகவுங் கொள்ளலாம். பொய்யோடு - இதில்ஒடுஉருபு மயக்கப்பொருளில் வந்தது. (மயக்கம் கலப்பு.)

௬க - ஆம் - பாடம் - குறள்

(298) அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்த றலை.

(இ-ள்.) அகழ்வாரை-(தன்னைத்) தோண்டுவாரை, தாங்கும்-(வீழாமல்) தாங்குகிற, நிலம்போல-நிலத்தைப்போல, தம்மைஇகழ்வார் - தம்மை அவமதிப்பவரை, பொறுத்தல்தலை-பொறுத்தல்தலைமையான அறமாம்—எ-று.

அகழ்வார், இகழ்வார்-எதிர்கால வினையாலணையும்பெயர், தாங்குநிலம்-வினைத்தொகை நிலைத்தொடராகவுங் கொள்ளலாம்.

(299.) பொறுத்த லிறப்பினை யென்று மதனை
மறத்த லதனினு நன்று.

(இ-ள்.) என்றும்-தண்டிப்பதற்குக்கூடியகாலத்திலும்,இறப்பினை (பிறர்செய்த) மிகுதியாகியசெய்கையை, பொறுத்தல்-பொறுக்கக்கடவர், அதனை-அந்தமிகையை, மறத்தல்(மனத்தில்வையாமல் அப்போதே) மறந்துவிடுதல், அதனினும்-அப்பொறுமையினும், நன்று-நன்மையாகும்—எ-று.

பொறுத்தல்-வியங்கோள்வினைமுற்று. மறத்தல்-தொழிற்பெயர். இறப்பு-தொழிற்பெயர்-அளவுகடந்துசெய்தல். அதாவதுதீங்கு. முன்னுள்ளஉம்மை-முற்று. பின்னுள்ளஉம்மை-உயர்வுசிறப்பு. எல்லைப்பொருட்டாகிய ஐந்தனுருபு - நன்றென்னுங் குறிப்புவினைமுற்றைக் கொண்டது.

(300.) ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.

(இ-ள்.) ஒறுத்தாரை-(தமக்குத்தீங்குசெய்தவனை) தண்டித்தவரை, ஒன்றுஆக-ஒருபொருளாக, வையார் (அறிவுடை

யோர்) மனத்தில்கொள்ளார், பொறுத்தாரை-(அத்தீங்கை) பொறுத்தவரை, பொன்போல்-பொன்னை ஒன்றில் மூடிவைப்பதுபோல், பொதிந்துவைப்பர்-(தம்மனத்துள்) பொதிந்து வைப்பர்—எ-று.

மனத்துள் பொதிந்துவைத்தலாவது, அவருடைய பெருங்குணத்தைப்பற்றி இடைவிடாமல் நினைத்தல். பொதிதல்-மூடுதல். ஒன்று - எண்ணலளவையாகுபெயர். ஏ-ஈற்றசை. போல-என்னுஞ் செயவெனெச்சத் தீறுதொகுத்தல்.

(301.)ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
　　பொன்றுந் துணையும் புகழ்.

(இ-ள்.) ஒறுத்தார்க்கு-(தீங்குசெய்தவனை) வருத்தினவர்க்கு, ஒருநாளைஇன்பம் - அவ்வொருதினத்திலேயே இன்பமாம், பொறுத்தார்க்கு-(அத்தீங்கை) பொறுத்தவர்க்கு, பொன்றுந் துணையும்-(உலகம்)அழியுமளவும், புகழ்-புகழுளதாகும்-எ-று.

நாளை-என்பதில் பிரிநிலையேகாரந்தொகுத்தல். அச்சொல்லில் ஐ-சாரியை. உம்மை-முற்று.

302.)திறனல்ல தற்பிறர் செய்யினு நோநொந்
　　தறனல்ல செய்யாமை நன்று.

(இ-ள்.) திறன்அல்ல - (செய்யும்) வகைஅல்லாத கொடியவைகளை, தற்பிறர்-தன்னிடத்துப்பிறர், செய்யினும்-செய்தாலும், நோ-(அதனால்வரும்) துன்பத்திற்கு,நொந்து - (மனம்) நொந்து, அறன்அல்ல - தருமமல்லாத செய்கைகளை, செய்யாமை - (செய்தவர்க்கு) செய்யாதிருத்தல், நன்று-(ஒருவனுக்கு) நன்மையுள்ளது—எ-று.

திறன்அல்ல-அறன்அல்ல- எழுவாய்த்தொகாநிலைத்தொடர்கள். அல்வழிப்புணர்ச்சிப் பதினொன்கின் மேற்பட்ட புணர்ச்சி என்பாரும் உண்டு. அல்ல-இரண்டும் குறிப்புவினையாலணை

யும் பெயர்கள். உம்மை-இழிவுசிறப்பு. நோ-முதனிலைதிரிந்த தொழிற்பெயர். நொந்து - நொ-பகுதி, த்-சந்தி, த்-இறந்த காலஇடைநிலை, சந்தித்தகரம் நகரமானது-மெலித்தல். செய்யாமை-எதிர்மறைத்தொழிற்பெயர்.

(303.) மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல்.

(இ-ள்.) மிகுதியால்-கர்வத்தினால், மிக்கவை - தீயவைகளை, செய்தாரை-செய்தவரை, தாம்-தாங்கள், தம்-தம்முடைய, தகுதியால்-பொறுமையினால், வென்றுவிடல் - வென்று விடக்கடவர்கள்—எ-று.

மூன்றனுருபிரண்டும்-கருவிப்பொருள. மிக்கவை-ஈறு விகாரப்பட்ட இறந்தகாலவினையாலணையும்பெயர்.

நீதிநெறிவிளக்கம்.

(304) கொலையஞ்சார்பொய்ந்நாணார்மானமுமோம்பார்
களவொன்றோவேனையவுஞ்செய்வார்-பழியொடு
பாவமிஃ தென்னார் பிறிதுமற் றென்செய்யார்
காமங் கதுவப்பட் டார்.

(இ-ள்.) காமம்-காமத்தினால், கதுவப்பட்டார்-பிடிக்கப்பட்டவர்கள், கொலைஅஞ்சார்-கொலைசெய்தலுக்கு அஞ்சார், பொய்நாணார்-பொய்பேசுதலுக்குக்கூசார், மானமும்-மானத்தையும், ஓம்பார்-காக்கார், களவுஒன்றோ-களவுஒன்றுதானோ, ஏனையவும்செய்வார்-மற்ற பாதகங்களையுஞ்செய்வார், இஃது-இக்காமம், பழியொடு-பழியுடனே, பாவம் என்னார்-பாவத்துக்குக் காரணமென்றுநினையார், பிறிது என்செய்யார்-வேறேஎன்னசெய்யமாட்டார், காமம்-காமத்தினால், கதுவப்பட்டார்-பிடிக்கப்பட்டவர்கள்—எ-று.

கொலை-தொழிற்பெயர். கொல்-பகுதி, ஐ-தொழிற்பெயர் விகுதி. அஞ்சார்முதலிய வினைமுற்றுகள் வேறுபல அடுக்கிக் கதுவப்பட்டாரொன்னும் ஒருபெயரோடுமுடிந்தது. நன்-சு-சூ-கசுஅ. கதுவப்பட்டார்-இறந்தகாலச்செயப்பாட்டு வினையாலணையும்பெயர். களவொன்று - இருபெயரொட்டுப் பண்புத்தொகை. ஒன்று-எண்ணலளவையாகுபெயர். ஓ-வினா. முன்னுள்ள உம்மை உயர்வுசிறப்பு. பின்னுள்ள உம்மை இறந்ததுதழீஇயதனோடு முற்றுப்பொருளையுந் தந்தது. மற்ற பாதகங்கள் கொலையும், பொய்யும், களவும் ஒழிந்த குருநிந்தையும், கள்குடித்தலுமாம். மற்று அசை.

(305.) சிற்றின்பஞ் சின்னீர தாயினு மஃதுற்றார்
மற்றின்பம் யாவையுங் கைவிடப-முற்றுந்தாம்
பேரின்ப மாக்கட லாடுவார் வீழ்பவோ
பாரின்பப் பாழ்ங்கும் பியில்.

(இ-ள்) சிறுஇன்பம்-சிற்றின்பமானது, சில்நீரது ஆயினும்-அற்பத்தன்மையுடையதானாலும், அஃது-அச்சிற்றின்பத்தை, உற்றார்-அடைந்தவர்கள், மற்றுஇன்பம்யாவையும் - வேறின்பங்களையெல்லாம், கைவிடப-கைவிடுவார்கள், பேரின்பம்-பேரின்பமாகிய, மாக்கடல்-பெருங்கடலில், முற்றும்ஆடுவார்-முழுதும்ஆடுகிறவர்கள், பார்இன்பம்-உலகஇன்பமாகிய, பாழ்கும்பியில்-பாழ்நரகத்தில், வீழ்பவோ-வீழ்வார்களோ— எ-று.

சின்னீரது-பண்புத்தொகைநிலைத்தொடர். விரிந்தால்-சின்மையாகிய நீரதுஎனவிரியும். நீரது-பண்படியாகப்பிறந்த குறிப்புவினைமுற்று. மற்று-பிறிதென்னும்பொருளில்வந்த இடைச்சொல். உம்மைகள்மூன்றுள் முன்னது இழிவுசிறப்பு, மற்றஇரண்டும் முற்று. ஓ-எதிர்மறை. பாழ்ங்கும்பி-பண்புத்தொகைநிலைத்தொடர்.

நாலடியார்.

(306.) தெண்ணீர்க் குவளை பொருகயல் வேலென்று
கண்ணில்புன் மாக்கள் கவற்ற விடுவெனோ
உண்ணீர் களைந்தக்கா னுங்குசூன் றிட்டன்ன
கண்ணீர்மை கண்டொழுகு வேன்.

(இ-ள்) உள்நீர்-உள்ளிருக்கும்நீரை, களைந்தக்கால்-நீக்கி விட்டால், நுங்கு-நுங்கை, சூன்றிட்டன்ன-தோண்டிஎடுத் தாற்போன்ற, கண்ணீர்மை-கண்ணினதுதன்மையை, கண் டு-அறிந்து, ஒழுகுவேன்-(துறவறத்தில்) நடப்பேன், (நடக் கும்நான்) கண்இல்-அறிவில்லாத, புல்மாக்கள்-சிறுதன்மை யையுடைய மனிதர்கள், (அக்கண்களை) தெள்நீர்-தெளிவாகி ய நீரில்முளைத்த, குவளையென்று-குவளைமலரொன்றும், பொ ரு-பொருகின்ற, (போர்செய்கின்ற)கயலென்று சேல்மீனெ ன்றும், வேலென்று-வேலாயுதமென்றும், கவற்ற- (என்மன த்தை) கவலைப்படுத்த, விடுவெனோ-(என் ஊக்கத்தை)விடுவே னோ—எ-று.

குவளை-முதலாகுபெயர். முதலிலுள்ளகண்- உவமையாகு பெயர். மாந்தர், மக்கள், மாக்கள், நித்திய பகுவசனம். அ தாவது பன்மையாகவே நிற்கும்பெயர்கள். கவற்ற-பிறவி னைச் செயவெனெச்சம். கவற்று-பகுதி, அ-விகுதி, உகரக் கேடு-சந்தி. கவல - தன்வினைச்செயவெனெச்சம். ஓ-எதிர்ம றை. என்று-என்னும் இடைச்சொல்லைக்குவளை, கயல்-என் பவற்றோடுங்கூட்டுக. நன் - சு- சூ-கருஅ. சூன்றிட்டன்ன- சூன்றிட்டால்அன்ன, சூன்றிட்டதுஅன்ன-எனப்பிரிக்க.

(307.) முல்லைமுகைமுறுவன் முத்தென்றிவைபிதற்று
கல்லாப்புன் மாக்கள் கவற்ற விடுவெனோ [ம்
எல்லாருங் காணப் புறங்காட் டுதிர்ந்துக்க
பல்லென்பு கண்டொழுகு வேன்.

(இ-ள்) எல்லாரும்-யாவரும், காண - காணும்படி, புறங்காடு-சுடுகாட்டில், உதிர்ந்துஉக்க-சிந்திக்கிடந்த, பல்என்பு-பல்லாகியஎன்பை, கண்டு-பார்த்து, ஒழுகுவேன் - (துறவறநெறியில்)நடப்பேன், முறுவல்-பற்களை, முல்லைமுகையென்று-முல்லையரும்பென்றும், முத்தென்று - முத்துகளென்றும், இவை-இவ்வுவமைகளை, பிதற்றும் - விடாதுபேசுகின்ற, கல்லா-கற்றறிவில்லாத, புல்மாக்கள்-அற்பமனிதர்கள், கவற்ற-(என்னை)கவலைப்படுத்த, விடுவேனோ- (என் ஊக்கத்தை)விடுவேனோ—எ-று.

முறுவல்-பல்லுக்கும், நகைக்கும்பொது. இங்கே பல்லுக்காயிற்று. முல்லைமுகை-ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். பொருள்-உறுப்புத்தற்கிழமை. ஓ-எதிர்மறை. உம்மை முற்று. காட்டுப்புறம் என்பது புறங்காடென வந்தது இலக்கணப்போலி. உதிர்ந்துக்க - ஒருபொருட் பன்மொழி. நன்-சு-சூ-கக அ. பல்லென்பு. இருபெயரொட்டுப் பண்புத்தொகைநிலைத்தொடர்.

(308.) பண்ட மறியார் படுசாந்துங் கோதையும்
கொண்டுபாராட்டுவார் கண்டிலர்கொல்-மண்டிப்
பெடைச்சேவல்வன்கழுகுபேர்த்திட்டுக்குத்தும்
முடைச்சாகா டச்சிற் றுழி.

(இ-ள்) முடை-தீநாற்றமாகிய, சாகாடு (உடலாகிய)வண்டி, அச்சு-(உயிராகிய) அச்சாணி,இற்றுழி-(இற்றஉழி) முறிந்தவிடத்து, பெடைவன்கழுகு-பெடையாகியவலியகழுகும், சேவல்வன்கழுகு-சேவலாகிய வலியகழுகும்,மண்டி-(அச்சாகாட்டை)நெருங்கி, பேர்த்திட்டு-மறித்து, (திருப்பி)குத்தும்-குத்தும்,பண்டம் (இப்படிப்பட்ட)உடலாகியபொருளினதுதன்மையை, அறியார்-அறியாமல்,படு-மிகுதியாகிய,சாந்தும்-சந்தனத்தையும், கோதையும்-மாலையையும், கொண்டு-பெற்று,

பாராட்டுவோர் - கொண்டாடுவோர், கண்டிலர்கொல்-பார்த் திலர்போலும்—எ-று.

கண்டிலர் - இறந்தகாலஎதிர்மறைத்தெரிநிலை வினைமுற்று. காண்-பகுதி, ட்-இறந்தகாலஇடைநிலை, இல்-எதிர்மறைவிகுதி, பகுதிஆ-அவ்வானது குறுக்கல்விகாரம், அனைத்தும் ஒரு பகுதி,அர்-பலர்பால்விகுதி. கொல் ஐயப்பொருளது. இற்றுழி-பெயரெச்சத்தீறு தொகுத்தலாய்ப் புணர்ந்தபுணர்ச்சி.

(309) கழிந்தாரிடுதலைகண்டார்நெஞ்சுட்கக்
குழிந்தாழ்ந்தகண்ணவாய்த்தோன்றி- ஒழிந்தாரைப்
போற்றி நெறிநின்மி னிற்றிதன் பண்பென்று [ப்
சாற்றுங்கொல் சாலச் சிரித்து.

(இ-ள்.) இடு-மண்ணில்புதைத்த, கழிந்தார்-இறந்தவர்களது, தலை-தலைகள், கண்டார்-(தம்மை) பார்த்தவர்களது, நெஞ்சுஉட்க-மனம்பயப்பட, குழிந்துஆழ்ந்த-மிகுதியும்ஆழ்ந்த, கண்ண ஆய்-கண்களையுடையனவாகி, தோன்றி-காணப்பட்டு, ஒழிந்தாரை-(தமது நிலையினின்று) நீங்கினவருக்கு, போற்றி-(தீயவற்றைச் செய்யவொட்டாமல் உம்மை)பாதுகாத்து, நெறி-நன்னெறியில், நின்மின்-நில்லும், இதன்-இவ்வுடலினது, பண்பு-தன்மை, இற்றென்று-இத்தன்மையதென்று,சாலச்சிரித்து-மிகச்சிரித்து, சாற்றும்கொல் - சொல்வது போலும்—எ-று.

குழிந்தாழ்ந்த-ஒருபொருட்பன்மொழி. ஐ-உருபுமயக்கம். இற்று-இன்-என்னும் இடைச்சொலடியாகப்பிறந்த ஒன்றன்பாற் குறிப்புவினைமுற்று. இச்செய்யுளில் பெயராதபொருள்களாகிய கழிந்தாரிடுதலைகளில் இயல்பாகிய குழிந்தாழ்தல் முதலிய தன்மைகளை ஒழித்து இக்கவி தாம்கருதிய வேறொன்றை ஏற்றிச்சொன்னமையால் பெயராத பொருட்டற்

குறிப்பேற்றம். கூ, பெயர்பொருளல் பொருளெனவிருபொருளினும், இயல்பின் விளைதிறனன்றி யயலொன்று, தான் குறித்தேற்றுதல்தற் குறிப்பேற்றம். கொல்-என்பது-அவ்வலங்காரத்தில் புணர்த்துவதோரிடைச்சொல். "தொழுதகை மடந்தையர் சுடர்விளக்கெனப்-பழுதறுமேனியைப் பார்க்குமாசைகொல்- எழுதுசித்திரங்களு மிமைப்பிலாதவே" எனக் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பநாடர் செய்யுளாலுமுணர்க.

ருரு-ஆம் பாடம்-நீதிநெறிவிளக்கம்.

(310) தம்முடை யாற்றலு மானமுந் தோற்றுத்தம்
இன்னுயி ரோம்பினு மோம்புக - பின்னர்ச்
சிறுவரை யாயினு மன்ற தமக்காங்
கிறுவரை யில்லை யெனின்.

(இ-ள்) தம்முடை-தம்முடைய, ஆற்றலும் - வலியையும், மானமும்-பெருமையையும், தோற்று-(தாமே) இழந்து, தம்-தமது, இன் உயிர்-இனிமையாகிய உயிரை, ஓம்பினும்-காத்தாலும், ஓம்புக-காக்கக்கடவர், பின்னர்-(அவ்வாறுகாத்த)பின்பு, சிறுவரைஆயினும்-கணப்பொழுதாயினும்,தமக்கு-தமக்கு, ஆங்கு-அவ்வுயிர்வாழ்தலில், இறுவரை - முடியுங்காலம்,மன்றஇல்லைஎனின்-இல்லையென்னுந்துணிவுஉண்டானல்—எ-று.

தம்முடை-என்பதில்-உடையஎன்னும் ஆறும்வேற்றுமைச்சொல் லுருபின் அகரவீறு தொகுத்தல். தம்இன்னுயிர்-ஆறும்வேற்றுமைத்தொகைநிலைத்தொடர். பொருள்- ஒற்றுமை. உம்மை-நான்கனுள் முன்னுள்ள இரண்டும் எண். இடையிலுள்ளது எதிர்மறையோடு இழிவுசிறப்பு. ஈற்றிலுள்ளது இழிவுசிறப்பு. பின்னரொன்னு மிடைச்சொல் காலத்தை உணர்த்திற்று. மன்ற-தேற்றப்பொருள்தரும் இடைச்சொல். ஆங்கு-முதனீண்ட சுட்டுப்பெயர்.

நாலடியார்.

(311) ஆவாநா மாக்க நசைஇ யறமறந்து
போவாநா மென்னாப் புலைநெஞ்சே-ஓவாது
நின்றுஞற்றிவாழ்தி யெனினுநின் வாழ்நாள்கள்
சென்றன செய்வ துரை.

(இ-ள்) நாம்-நாம், போவாம்-இறப்போம், என்னா-என்று கருதாத, புலை-புன்மையாகிய, நெஞ்சே-மனமே, அறம்-அறத்தை, மறந்து-செய்யமறந்து, ஆக்கம்-செல்வத்தை, நசைஇ விரும்பி, நாம் - நாம், ஆவாம் - (அச்செல்வத்தில்) பெருகுவோம், ஓவாது-ஒழியாமல், நின்று (அப்பொருள்தேடும் நிலையிலே நின்று, உஞற்றி-முயற்சிசெய்து, வாழ்தியெனினும்-நீ வாழ்வாயானாலும், நின்வாழ்நாள்கள்-உன்னுடைய ஆயுள் நாள்கள், சென்றன-கழிகின்றன, செய்வது-இனிச்செய்யும் முயற்சியை, உரை-(எனக்கு) சொல்லு—எ-று.

ஆவாம், போவாம்-உளப்பாட்டுத் தன்மைப்பன்மை எதிர்காலவினைமுற்று. நசைஇ-நசை பகுதி, இ இறந்தகால வினையெச்ச விகுதிபுணர்ந்துகெட்டு, கெட்டபோது ஐகாரம் அளபெழுந்தது. புணர்ந்துகெடுதல்- கடைக்குறை. அளபெடை-நீட்டல்விகாரம். இது சொல்லிசையளபெடை. புலை-பண்புப்பெயர். புல்-பகுதி, ஐ-விகுதி. உம்மைஉயர்வுசிறப்பு. சென்றன-விரைவுபற்றி நிகழ்காலம் இறந்தகாலமாய்வந்த காலவழுவமைதி. உரை-உரையாயென்னும் ஏவலொருமை வினைமுற்றின் ஆய்-விகுதிபுணர்ந்துகெட்டு நின்றது.

(312) இன்றுகொலன்றுகொலென்றுகொலென்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
ஒருவுமின் றீயவை யொல்லும் வகையால்
மருவுமின் மாண்டா ரறம்.

(இ-ள்) கூற்றம்-யமன்(வருதல்) இன்றுகொல்- இளமைக் காலத்திலோ, அன்றுகொல் - மூப்பின்காலத்திலோ, என்று கொல்-எக்காலத்திலோ, என்னாது - என்றுகருதாமல், பின் றையே-முதுகினிடத்தேயே, நின்றதென்று-நின்றுனென்று, எண்ணி-நினைத்து, தீயவை-தீக்கருமங்களினின்றும், ஒருவு மின்-நீங்குங்கள், மாண்டார்-மாட்சிமைப் பட்டவராற்சொல் லப்பட்ட, அறம்-அறத்தை, ஒல்லும்வகையால் - கூடியவகை யால், மருவுமின்-சேருங்கள்—எ-று.

அண்மைச்சுட்டுப்பெயராதலால் இன்று-இளமைக்காலத் தையும், சேய்மைச் சுட்டுப்பெயராதலால் அன்று - மூப்புக் காலத்தையும் உணர்த்தின. பின்றை-பின் - (இடைச்சொல்) பகுதி, று-ஒன்றன்பால்விகுதி, பகுதி விகுதியால் முடிந்தபி ன்று ஐகாரச் சாரியைபெற்றுப் பின்றைஎன நின்றது. ஏ-பிரிநிலை. கூற்றம்-பொருளா லுயர்திணையாயினும் சொல்லா ல் அஃறிணையாதலால் நின்றதென்னும் அஃறிணை வினைகொ ண்டது.

(313) உறக்குந் துணையதோ ராலம்வித் தீண்டி
இறப்ப நிழற்பயந் தாஅங் - கறப்பயனும்
தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்.

(இ-ள்) உறங்கும்துணையது - உறங்கிவிழும் (காலத்தின்) அளவினதாகிய, ஓர்ஆலம்வித்து-ஒராலம்விதை, ஈண்டி-முளை த்து, இறப்ப-மிகவும், நிழல்-நிழலை, பயந்தாங்கு - கொடுத் தாற்போல, தான்-கொடுக்கப்படும்பொருள், சிறிதுஆயினும்-சிறிதாயிருப்பினும், தக்கார்-நல்லோருடைய,கைப்பட்டக்கா ல்-கையிற்பட்டால், அறப்பயனும்-அவ்வறத்தின்பயனும், வா ன்சிறிதா-ஆகாயம்சிறிதாக,போர்த்துவிடும்- மூடிவிடும்-எ-று.

உறகரும்-வலித்தல்விகாரம். துணையது - காலத்தின்மேல் நின்றது. பயந்தாங்கு என்பதில் தொழிற்பெயரீறுவது, எதிர்காலவினை யெச்சத்தீறுவது தொகுத்தலெனக்கொள்க. பயந்தது ஆங்கு, பயந்தால் ஆங்குஎன இருவகையாகப்பிரிக்கலாம். போர்த்துவிடுதல் அறப்பயனுதலாலும், ஆலம்வித்து உவமையாதலாலும், சிறிதாயின் என்னும் வினைக்குத்தான் என்பது எழுவாயாதலாலும் அது கொடுக்கப்படும் பொருளுக்காயிற்று. பயனும் என்றவும்மை இறந்தததழீஇ யதனோடு உயர்வுசிறப்பில் வந்தது. ஆயினும் என்றவும்மை இழிவுசிறப்பு. வான்சிறிதாப்போர்த்துவிடுமென்றது-இலக்கணை. பொருள்-மிகுதியாய் நிரம்புமென்பது. ஆ-என்பதில் ஈறுதொகுத்தல். ஆல்வித்துஎன்பது ஆலம்வித்தெனஇடையே அம்முச்சாரியைபெற்றது. ஆதலால் ஆலவித்தென மகரங்கெடவில்லை.

(314) வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும்வைகற்றம் வாழ்நாண்மேல்வைகுதல்
வைகலை வைத்துணரா தார்.

(இ-ள்) வைகலும்-தினமும், வைகல்-நாட்கழிவை, தம்தமது, வாழ்நாள்மேல்-ஆயுளிலே, வைகுதல்வைத்து-தங்குதலாகவைத்து, வைகலை-அந்நாட்கழிவை, உணராதார்-அறியாதவர்கள், வைகலும்-தினமும், வைகல்- நாட்கழிவு-வரக்கண்டும்-வரப்பார்த்தும், அஃது-அவ்வரவை, உணரார்-அறியாமல், வைகலும்-தினமும், வைகுமென்று-கழியுமென்று, வைகலை-நாட்கழிவை, இன்புறுவர்-களிப்பார்—என்று.

வைகல்என்னுஞ் சொல்லைச்சார்ந்துவந்த உம்மைகள் மூன்றும் முற்று. மற்றஒன்று உயர்வுசிறப்பு. உணராதார் எதிர்மறை வினையாலணையும்பெயர். உணரார் எதிர்மறை வினைமு

ற்று வினையெச்சமாய்வந்தது. இச்செய்யுள் சொற்பொருட்பின் வருநிலையணி.

(315) மான வருங்கல நீக்கி யிரவென்னும்
ஈன விளிவினால் வாழ்வேன்மன் - ஈனத்தால்
ஊட்டியக் கண்ணு முறுதிசேர்ந் திவ்வுடம்பு
நீட்டித்து நிற்கு மெனின்.

(இ-ள்) ஈனத்தால்-இழிவினால், ஊட்டியக்கண்ணும்-உண்பித்தாலும், உறுதிசேர்ந்து-தளராமையைப்பெற்று, இவ்வுடம்பு-இத்தேகம், நீட்டித்து-(ஆயுளை) பெருகச்செய்து, நிற்குமெனின்-நிலைக்குமானால், மானம்-மானமாகிய, அருங்கலம்-(பெறுதற்கு)அரிய ஆபரணத்தை, நீக்கி-ஒழித்து, இரவென்னும்-இரத்தலென்னும், ஈனம்-ஈனமாகிய, இளிவினால்-இழிவினால், வாழ்வேன்மன்-வாழ்வேன், உறுதிசேர்ந்து நீட்டித்து நில்லாதாதலால் வாழேனாயினேன்—எ-று.

மன்-ஒழியிசைப்பொருள்படநின்றது. நன்-சு, கூ. கறுக ஊட்டியக்கண்-எதிர்காலவினையெச்சம். ஊட்டு-பகுதி,இன்-சாரியை, சாரியை னகரக்கேடு-கடைக்குறை, ய்-சந்தி,அ-சாரியை, க்-சந்தி, கண்-விகுதி. உம்மை-உயர்வுசிறப்பு. நீட்டித்து-இறந்தகாலப் பிறவினை வினையெச்சம். நீட்டி-பகுதி, த்-சந்தி, த்-இறந்தகால இடைநிலை, உ-விகுதி. நீட்டு பகுதி என்றால் இவ்வினையெச்சம் நீட்டி எனவரும்.

ருச-ஆம்பாடம்-குறள்.

(316) ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்கம்
உயிரினு மோம்பப் படும்.

(இ-ள்) ஒழுக்கம்-ஒழுக்கமானது, விழுப்பம்-சிறப்பை,தரலால் - தருதலால், ஒழுக்கம் - அவ்வொழுக்கம், உயிரினும்-உயிரைப்பார்க்கிலும், ஓம்பப்படும் - பாதுகாக்கப்படும்—

பின்னுள்ள ஒழுக்கம் - சுட்டுப்பொருட்டாய்வந்தது. உம்மை-உயர்வுசிறப்பு. விழுப்பம்-விழு-பகுதி, ப்-சந்தி,பம்-பண்புப்பெயர்விகுதி. விழுமு-பகுதியென்றால் அது அம்விகுதியேற்றபோது விழுமம் எனவரும்

(317) பரிந்தோம்பிக்காக்க வொழுக்கந்தெரிந்தோம்பித்
தேரினு மஃதே துணை.

(இ-ள்) ஒழுக்கம்-ஒழுக்கத்தை,ஓம்பி-(ஒன்றினாலும் அழிவுபடாமல்) விரும்பி, பரிந்துகாக்க-வருந்தியுங் காக்கக்கடவன், தெரிந்து-(பல அறங்களையும்)ஆராய்ந்து, ஓம்பி-(துணையாவது எதுவென்று மனத்தை)ஒருவழிப்படுத்தி, தேரினும்-தெளிந்தாலும், அஃதே-அவ்வொழுக்கமே, துணை-துணையாய் முடிவது (ஆதலால்)—எ-று.

உயர்வுசிறப்பும்மைவிகாரத்தால் தொக்கது. தேரினும் என்றவும்மையும் உயர்வுசிறப்பு. ஏ பிரிநிலை.

(318.) அழுக்கா றுடையான்க ணாக்கம்போன் றில்லை
ஒழுக்க மிலான்க ணுயர்வு.

(இ-ள்.) அழுக்காறு-பொறாமையை, உடையான்கண் - உடையவனிடத்து, ஆக்கம்போன்று-செல்வம்இல்லாமையைப் போல, ஒழுக்கம்இலான்கண்-ஒழுக்கம் இல்லாதவனிடத்தும் உயர்வு-உயர்குலமாகுதல், இல்லை-இல்லையாம்—எ-று.

போன்று-செயவெனச்சத்திரிபு. நன்-கூ-கூ, கசுசு-ஒருபுடைதழுவிவந்த இறந்தகாதழீஇயஎச்சவும்மை விகாரத்தால் தொக்கது.

(319.) நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்கம்
என்று மிடும்பை தரும்.

(இ-ள்.) நல் ஒழுக்கம் - (ஒருவனுக்கு) நல்லொழுக்கமானது, நன்றிக்கு-அறத்துக்கு, வித்துஆகும்-காரணமாய் இன்

பந்தரும், தீயொழுக்கம்-தீயநடக்கையானது, என்றும்-இம்மைமறுமைகளிலும், இடும்பைதரும் - துன்பத்தைக்கொடுக்கும்—எ-று.

நன்றி-பண்புப்பெயர். அதுஇங்கே அறத்துக்காயிற்று. நல்-பகுதி-றி-விகுதி, லகரம் றகரமானது-சந்தி, சந்திறகரம்-னகரமானது மெலித்தல். உம்மை-முற்று. கு-பொருட்டுப்பொருளது.

(320.) உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லா ரறிவிலா தார்.

(இ-ள்) உலகத்தோடு-உயர்ந்தாருடனே, ஒட்ட-பொருந்த, ஒழுகல்-நடத்தலை, கல்லார்-கல்லாதவர், பலகற்றும்-பலநூல்களையுங் கற்றாராயினும், அறிவிலாதார் - அறிவில்லாதவராம்—எ-று.

முற்றும்மை - தொகுத்தல் - கற்றும்என்றவும்மை - உயர்வுசிறப்பு.

நீதிநெறிவிளக்கம்.

(321.) பகையின்று பல்லார் பழியெடுத் தோதி [ன்று
நகையொன்றே நன்பயனுக் கொள்வான்-பயமி
மெய்விதிர்ப்புக் காண்பான் கொடிறுடைத்துக்
கைவிதிர்த் தஞ்சப் படும். [கொல்வான்போல்

(இ-ள்) பகைஇன்று-பகையில்லாமல், பல்லார்-பலருடைய, பழிஎடுத்துஓதி-பழியையெடுத்துச்சொல்லி, நகைஒன்றே-நகைத்தலொன்றையே, நல்பயனு - நன்மையாகியபயனுக, கொள்வான்-கருதுகிறவன், பயம்இன்று-(வேறொரு) பயனுமில்லாமல், மெய்விதிர்ப்பு-(ஒருவனுடைய) உடலின்நடுக்கத்தை, காண்பான்-காணும்பொருட்டு, கொடிறு-கொடிற்றை உடைத்து - உடைத்து, கொல்வான்போல் - வருத்துவோன்

போல, கைவிதிர்த்து - கைநடுங்கி, அஞ்சப்படும் - (பிறரால்) அஞ்சப்படுவான்—எ-று.

இன்று-இரண்டும் இன்றியென்னும் எதிர்மறைக்குறிப்பு வினையெச்சத்தின் ஈற்றிகரம் உகரமாய்த்திரிந்துவந்தன. பயம்-பயன்-மகரத்துக்கு னகரம்வந்தது மொழியிறுதிப்போலி. னகரம் அஃறிணைப்பெயரில் இருகுறிலையடுத்தமகரத்துக்கேவரும் ஏ-பிரிநிலை. காண்பான்-எதிர்காலவினையெச்சம். காண்-பகுதி பான்-விகுதி. அஞ்சப்படும் - செய்யுமென்னும் வாய்பாட்டுச் செயப்பாட்டு வினைமுற்று. விதிர்த்து என்னுஞ் சினைவினை-அஞ்சவென்னும் முதல்வினையோடுமுடிந்தது. நன்-சு-சூ, கசஉ

நாலடியார்.

(322.) கடுக்கி யொருவன் கடுங்குறளை பேசி
மயக்கி விடினு மனப்பிரிப்பொன் றின்றித்
துளக்க மிலாதவர் தூய மனத்தார்
விளக்கினு ளொண்சுடரே போன்று.

(இ-ள்.) துளக்கம்இலாதவர்-(அறிவு) கலங்குதலில்லாதவர், ஒருவன்-ஒருவன், கடுங்குறளை-கடுமையாகியகோளை, பேசி-(தம்மிடத்து) சொல்லி, கடுக்கி-வெறுக்க, மயக்கிவிடினும் அறிவு) மயங்கச்செய்துவிட்டாலும், மனப்பிரிப்பு - மனத்தைப்பிரியச்செய்தல், ஒன்றுஇன்றி-சிறிதும்இல்லாமல், விளக்கினுள்-விளக்கிலே, ஒள்சுடரே-ஒள்ளியசுடரையே, போன்று-ஒத்து, தூயமனத்தார்-சுத்தமான மனமுடையவராயிருப்பர்—எ-று.

கடுக்கி-செயவெனெச்சத்திரிபு. உம்மை-உயர்வுசிறப்பு. மனப்பிரிப்பு-செயப்படு பொருளின்கண்வந்த ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். ஒன்றுஎன்னும் பண்புசிறுமையை உணர்த்திற்று. விளக்கு-தானியாகுபெயர். ஏ-தேற்றம்

சுடரைப்போலுதலாவது சுடர்தன்னைச்சார்ந்த துரும்புமுத லியவற்றை எரித்துத் தான் தூய்மையதாக நிற்றல்போலப்பி றனொருவன் தன்கட்டான்மேற்சொல்லுங் குறளை மனத்தில் வையாமல்தூய்மையனாகநிற்றல். போன்றுஎன்னும் இறந்தகா லவினையெச்சம் மனத்தாரொன்னுங் குறிப்புவினைகொண்டது.

(323.) கணமலை நன்னாட கண்ணின் றொருவர்
குணனேயுங் கூறற் கரிதால்-குணனழுங்கக்
குற்ற முழைநின்று கூறுஞ் சிறியவர்கட்
கெற்றா லியன்றதோ நா.

(இ-ள்) கணம்-கூட்டமாகிய, மலை-மலையைச்சார்ந்த, நல் நாட-நன்மையாகிய நாட்டையுடையானே, கண்நின்று-எதி ரேநின்று, ஒருவர்-ஒருவருடைய, குணனேயும் - நற்குணமு மே, கூறற்கு-(தம்மால்) சொல்லுதற்கு, அரிது-அருமையுள் ளது, குணன்அழுங்க-(அவருடைய) நற்குணங்கெட, உழை நின்று-புறத்திலேயிருந்து, குற்றம்-குற்றத்தை, கூறும்-சொ ல்லுகின்ற, சிறியவர்கட்கு-கீழ்மக்களுக்கு, நா-நாக்கானது, எற்றால்-எப்படிப்பட்டபொருளால், இயன்றதோ-செய்யப்ப ட்டதோ—எ-று.

ஏ-பிரிநிலை. உம்மை-உயர்வுசிறப்பு. ஆல்-அசை. எற்று-இ டைச்சொலடியாகப்பிறந்த குறிப்புவினையாலணையும்பெயர். எற்று-என்னுஞ்சொல்லின் பகுதியேவினாவால் ஐயப்பொரு ளைத்தருதலால்-ஓ-இழிவுசிறப்புப்பொருளது.

பழமொழி.

(324.) பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும்-நல்லாய்
மணலின் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலுந்தன் வாயாற் கெடும்.

(இ-ள்) நல்லாய்-நற்குணமுடையாளே, மணலில்முழுகி-மணலில்நுழைந்து, மறைந்துகிடக்கும்-மறைந்துகிடக்கின்ற துணைவும்-தவளையும், தன்வாயால்-தன்ஒலியால், கெடும் (பாம்புக்ககப்பட்டு) நாசமாகும், (அதுபோல) பொல்லாதுசொல்லி-(புறத்திலே ஒருவர்மேல்) குற்றத்தைசசொல்லி, மறைந்து-(கண்டவிடத்து அவர்க்கு இனியவனாகுதலில்) மறைந்து, ஒழுகும்-நடக்கும், பேதை-அறிவில்லான், தன்சொல்லாலே (பகைவராலல்லாமல்) தன்சொல்லினாலேயே, தன்னை-தன்னை, துயர்படுக்கும்-துன்பத்துக்கு உட்படுத்துவான்—எ-று.

பேதை-பண்பாகுபெயர். ஏ-பிரிநிலை. உம்மை-உயர்வுசிறப்பு. வாய்-கருவியாகுபெயர்.

நன்னெறி.

(325.) உண்டு குணமிங் கொருவர்க் கெனினுங்கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே-வண்டுமலர்ச்
சேக்கை விரும்புஞ் செழும்பொழில்வாய் வேம்
காக்கை விரும்புங் கனி. [பன்றே

(இ-ள்.) வண்டு-வண்டுகள், மலர்-மலராகிய, சேக்கை-படுக்கையை, விரும்பும்-விரும்புகின்ற, செழும்பொழில்வாய்-செழுமையாகியசோலையில், காக்கை-காகம், விரும்புங்கனி-விரும்புகிறபழம், வேம்புஅன்றே-வேப்பங்கனியாம், (அதுபோல) இங்கு-இவ்வுலகத்தில், ஒருவர்க்கு-ஒருவருக்கு, குணம்-நற்குணம், உண்டெனினும்-உண்டாயிருப்பினும், கீழ்-கீழ்மகன், கொண்டு-எடுத்து, புகல்வது-(தான்) சொல்வது, அவர்குற்றமே-அவருடையகுற்றமேயாம்—எ-று.

உம்மை-உயர்வுசிறப்பு. கீழ்-பண்பாகுபெயர், புகல்வது-வினையாலணையும்பெயர். ஏ-பிரிநிலை. வேம்பு-முதலாகுபெயர் ஓ-எதிர்மறை. மலர், கனி-இவ்விரண்டுசொல்லும்-வினைமுதற்பொருளுணர்த்தும் இகரவிகுதிபுணர்ந்து கெட்டுநின்றன.

௫௯-ஆம்-பாடம்-குறள்.

(326.) அறங்கூறா னல்ல செயினு மொருவன்
புறங்கூறா னென்ற லினிது.

(இ-ள்.) ஒருவன்-ஒருவன், அறம்கூறான்-அறமென்றுசொல்வதும் செய்யாமல், அல்லசெயினும் - பாவங்களைச்செய்தாலும், புறம்கூறான்என்றல்-(பிறனை) புறத்திலேஇகழ்ந்து பேசானென்று (உலகத்தோரால்) சொல்லப்படுதல், இனிது-நல்லது—எ-று.

கூறான் வினைமுற்று வினையெச்சமாய்நின்றது. உம்மை இழிவுசிறப்பு. என்றல்-இடைச்சொலடியாகப்பிறந்த தொழிற்பெயர்.

(327.) புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூறு மாக்கந் தரும்.

(இ-ள்.) புறங்கூறி- பிறனை காணாதபோதுஇகழ்ந்துபேசி, பொய்த்து-(கண்டபோது அவனுக்குநல்லவனாக) பொய்அன்புகாட்டி, உயிர்வாழ்தலின்-(ஒருவன்) உயிர்வாழ்வதிலும், சாதல்-இறத்தல், அறம்-அறநூல்கள், சொல்லும்-சொல்லுகின்ற, ஆக்கம்-மறுமைப்பயனை, தரும்-கொடுக்கும்—எ-று.

பொய்த்து-பெயரடியாகப்பிறந்த இறந்தகாலவினையெச்சம். அறம்-காரியவாகுபெயர்.

(328.) கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல்.

(இ-ள்.) கண்நின்று-(ஒருவனுக்கு) எதிரேநின்று, கண்-தாட்சிணியம், அற-இல்லாமல், சொல்லினும்-சொன்னாலும், முன்இன்று-அவனுக்கு எதிரேஇல்லாமல், பின்-பின்வருங்குற்றத்தை, நோக்கா-ஆலோசியாத, சொல்-சொல்லை, சொல்லற்க சொல்லாதிருக்கக்கடவர்—எ-று.

காலத்தை உணர்த்திநின்ற பின்என்பது தன்னிலேநிகழுங் குற்றத்துக்காதலால் இடவாகுபெயர். சொல்லினும்என்ற து சொல்லுதல்கூடாதென்னும் பொருள்தருதலால் உம்மை எதிர்மறை. இன்று - இன்றிஎன் பதனீறு திரிந்துநின்றமை யால் வருமொழிப்பகர மியலபாயிற்று. நன்-உயி-சூ-உங- அன்றி இன்றி என்வினையெஞ்சிகரம்-தொடர்பினுள் உகரமா ய்வரின் இயல்பே.

(329.) அறஞ்சொல்லு நெஞ்சத்தா னன்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும்.

(இ ள்.) அறம்-அறத்தை, சொல்லும்நெஞ்சத்தான்-சொல் லுகின்றமனத்தையுடையான், (மனத்திலுடையவனுகிச்சொ ல்லுவோன்) அன்மை-அல்லாதவனுதல், புறஞ்சொல்லும்-பு றத்திலேஇகழும், புன்மையால-(மனத்தினது) புன்மையினு லே, காணப்படும்-அறியப்படும்—எ-று.

அன்மை-குறிப்புத்தொழிற்பெயர். காணப்படும்-செயப் பாட்டுவினைமுற்று.

(330.) பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளும்
திறன்றெரிந்து கூறப் படும்.

(இ-ள்.) பிறன்-மற்றவனுடைய, பழி-பழியை, கூறுவான் (புறத்திலே) சொல்லுவோன், தன்பழியுள்ளும் - தன்பழிக ளுள்ளும், திறன் (தான்) வருந்தும்வகையுடையபழிகள்,தெ ரிந்து - ஆராயப்பட்டு, கூறப்படும் - (அவனுல்) சொல்லப்ப டும்—எ-று.

திறன்-பண்பாகுபெயர். உம்மை-இறந்ததுதழீஇய எச்சவு ம்மை.

(331) ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னு முயிர்க்கு.

(இ-ள்.) ஏதிலார்-அயலாருடைய, குற்றம்போல் - குற்றத்தைக்காணுதல்போல, தம்குற்றம் - தமதுகுற்றத்தையும், காண்கிற்பின்-காணவல்லவரானால், மன்னும்உயிர்க்கு - (அவரது) நிலைபெறுமுயிர்க்கு, தீது-துன்பம், உண்டோ-உளதாகுமோ—எ-று.

இறந்ததுதழீஇய எச்சவும்மை தொகுத்தல். காண்கிற்பின் எதிர்காலவினையெச்சம். காண்-பகுதி, கில்-ஆற்றலுணர்த்தும் விகுதி, அனைத்தும்ஒருபகுதி, ப்-எழுத்துப்பேறு, இன்-விகுதி. ஓ-எதிர்மறை.

நாலடியார்.

(332.) இசையா வொருபொரு ளில்லென்றல் யார்க்கும்
வசையன்று வையத் தியற்கை-நசையழுங்க [ம்
நின்றோடிப் பொய்த்த னிரைதொடீஇ செய்ந்ந
கொன்றாரிற் குற்ற முடைத்து. [ன்றி

(இ-ள்.) நிரைதொடீஇ-முறையாகஅணிந்த வளையலையுடையாளே, இசையா (கொடுப்பதற்கு) இசையாத, ஒருபொருள் ஒருபொருளை, இல்என்றல்-இல்லைஎன்றுசொல்லுதல், யார்க்கும்-எவர்களுக்கும், வசைஅன்று - பழிப்பன்று, வையத்து உலகத்தில், இயற்கை-சுபாவமாகும், (ஒத்ததாகும்) நசை-(தம்மைக்கேட்டோன்) விருப்பத்தாலே, அழுங்க - வருந்தும்படி, நின்று-(தருவோமென்னுஞ்சொல்லில்) ஒழியாமல், ஓடி-(நாள்கள்) கழிய, பொய்த்தல்-பொய்சொல்லுதல், செய்நன்றி-(ஒருவர்) செய்தஉபகாரத்தை, கொன்றாரின்-மறந்தவரைப்போல, குற்றம்உடைத்து-பாவமுடையதாகும்—எ-று.

சொல்லுவாருடையகுற்றத்தை அவர்சொல்லின் மேலேற்றிப்பொய்த்தல் குற்றமுடைத்து என்றார் ஆயினும் நின்றோடிப்பொய்ப்போர் குற்றமுடையரென்பது கருத்தாகக்கொள்க உம்மை-முற்று. ஓடி-செயவெனச்சத்திரிபு. நிரைதொடீஇ-வி

னைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. ஐந்த னுருபு-ஒப்புப்பொருளது.

(333.) காலாடு போழ்திற் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனிற் பலராவர்-ஏலா
இடரொருவ ருற்றக்கா லீர்ங்குன்ற நாட
தொடர் புடையே மென்பார் சிலர்.

(இ-ள்.) ஈர்ங்குன்றநாட-குளிர்ச்சியாகிய மலைநாட்டையுடையானே, ஒருவர் - ஒருவர், கால்ஆடுபோழ்தில்-முயற்சியோடுதிரியுங்காலத்தில், கழிகிளைஞர் - மிக்கஅன்புடையஉறவினர், வானத்துமேல்-ஆகாயத்தில், ஆடு-உலாவுகிற, மீனின் தாரகைகளிலும், பலர்ஆவர்-பலராயிருப்பர், ஏலா-ஏற்கவிரும்பாத, இடர்-(வறுமையினது) துன்பத்தை, உற்றக்கால்-அடைந்தால், தொடர்புஉடையேம்-(கேட்டோர்க்கு அவர்வாழ்ந்தகாலத்தில்) சிநேகமுடையவர்களாயிருந்தோம், என்பார்-என்பவர்கள், சிலர்-சிலராயிருப்பர்—எ-று.

ஆடுமீன் - வினைத்தொகைநிலைத்தொடர். ஆடும்மீன் பெயரெச்சத் தொகைநிலைத்தொடர். என இருவகையாயும் பிரித்துக்கொள்க. ஐந்தனுருபு - எல்லைப்பொருளது. சிலர்-பண்படியாகப்பிறந்த குறிப்புவினைமுற்று.

(334.) நல்லாவின் கன்றாயி னாகும் விலைபெறூஉம் -
கல்லாரே யாயினுஞ் செல்வர்வாய்ச் சொற்செல்லும்
புல்லீரப் போழ்தி னுழவேபோன் மீதாடிச்
செல்லாவா நல்கூர்ந்தார் சொல்.

(இ-ள்.) நல்ஆவின்-சாதிப்பசுவினது, கன்றுஆயின்-கன்றுனால், நாகும்-பெண்ணும், விலைபெறும்-நல்லவிலைபெறும், (அதுபோல) கல்லாரேஆயினும்-கற்காதவர்களேஆனாலும், செல்வர்வாய் - செல்வர்களுடைய வாயினிடத் துண்டாகும், சொல் செல்லும்-சொற்கள் (யாவராலும்) ஏற்றுக்கொள்ளப்

படும், நல்கூர்ந்தார்சொல்-வறுமையடைந்தோருடையசொற்கள், புல்ஈரப்போழ்தின் (நிலம் சிறிது ஈரமுள்ளகாலத்தில், உழவேபோல் (உழுபடை) உழுதல்போல, மீதுஆடி-மேலோடேசென்று, செல்லாவும் - ஏற்றுக்கொள்ளப் படாவும் —எ-று.

கன்றுஎன்னுஞ்சொல் கடமைமுதலியமிருகத்தின் பிள்ளைக் குமரபுப்பற்றிவரும்பெயர். நிகண்டு. கடமைமான்எருமை பெற்றங்கவயம் ஒட்டகமேயானை. விடுபரிமரைகராமே மேவியகவரிகன்றும். இதுவாழை, மாமுதலியவற்றிற்கும் வாழைக்கன்று, மாங்கன்று எனவழங்கும் நாகு-எருமைமுதலிய மிருகத்தின் பெண்ணுக்குவழங்கும். நிக-எருமையே மரையேபெற்றம் ஏற்ற நீர்ச்சாதிநாகாம். உம்மைகளிரண்டும்-இழிவுசிறப்பு. ஏ-இரண்டும் தேற்றம். அளபெடை. அலகுபெற்றும் பெறாதும் வந்த இன்னிசைஅளபெடை. உழவு-உழு-பகுதி, அ-சாரியை,வு-தொழிற்பெயர்விகுதி, உகரக்கேடு-சந்தி. இது ஒருமுயற்சியில் வருந்தலை உணர்த்தினால் உழ-பகுதி, வு-விகுதி. முக்காலங்களிலும் அது, உழுதான், உழுகின்றான், உழுவான் எனவும், இது உழந்தான், உழக்கின்றான், உழப்பான் எனவும்வரும்.

(335.) இடம்பட மெய்ஞ்ஞானங் கற்பினு மென்றும்
அடங்காதா ரென்று மடங்கார் - தடங்கண்ணாய்
உப்பொடு நெய்பா றயிர்காயம் பெய்தடினும்
கைப்பறு பேய்ச்சுரையின் காய்.

(இ-ள்.) தடங்கண்ணாய் - விசாலமான கண்களையுடையாளே,பேய்ச்சுரையின்காய்-பேய்ச்சுரைக்காய்கள், உப்பொடு-உப்புடனே, நெய்-நெய்யையும், பால்-பாலையும்,தயிர்-தயிரையும், காயம்-காயவர்க்கங்களையும், பெய்து-சேர்த்து, அடினும் சமைத்தாலும், கைப்புஅறு-கசத்தல்நீங்கா (அதுபோல) என்றும்அடங்காதார்-எந்நாளிலும் அடங்காதவர்கள், மெய்ஞ்

ஞானம்-மெய்ஞ்ஞானநூல்களை, இடம்பட-மிகுதியாக, கற்பி னும்-கற்றலும், என்றும்-எப்போதும், அடங்கார்-அடங்குத லிலரானவர்—எ-று.

மெய்ஞ்ஞானம் - காரியவாகுபெயர். கற்பின்-எதிர்காலவி னையெச்சம்-கல்-பகுதி, ப்-விரித்தல்விகாரம், இன்-விகுதி, ல கரம் றகரமானது சந்தி. காய்-தொழிலடியாகப்பிறந்தபெயர் இது வினைமுதற்பொருளுணர்த்தும் இகரவிகுதி புணர்ந்து கெட்டு நின்றது. உம்மைநான்கனுள் - முதலிலும் ஈற்றிலும் நின்ற இரண்டும் உயர்வுசிறப்பு. இடையில்நின்ற இரண்டும் முற்று.

(336.) ஆவே றுருவின வாயினு மாபயந்த
பால்வே றுருவின வல்லவாம்-பால்போல்
ஒருதன்மைத் தாகு மறநெறி யாபோல்
உருவு பலகொள லீங்கு.

(இ-ள்) ஆ-பசுக்கள், வேறுஉருவினஆயினும்(ஒன்றையொ ன்றுஒவ்வாத) வேறுருவை யுடையனவாயிருப்பினும், ஆ-அப் பசுக்கள், பயந்த-கறந்த, பால்-பால்கள், வேறுஉருவின-வே றுஉருவமுடையன, அல்லஆம்-அல்லனஆகும், ஈங்கு-இவ்வு லகத்தில், அறநெறி-அறநெறியை உணர்த்தும்நூல்கள், பால் போல்-பாலைப்போல, ஒருதன்மைத்துஆகும் - ஒருதன்மையு டையனஆகும், ஆபோல்-பசுக்களைப்போல, உருவுபலகொள ல் - (பாஷைபெயர்முதலியவற்றால்) பலஉருவைக்கொள்ளு தல் வேற்றுமையாம்—எ-று.

ஆ, பால் - பால்பகாவஃறிணைப்பெயர். அறநெறி-காரியவா குபெயர். இது சாதியொருமையாதலால் ஒரு தன்மைத்துஎ ன்னும் ஒருமைவினைகொண்டது. அறநெறி உருவுபலகொள லென்பதற்கு-அறநெறி இல்லறந் துறவறமெனப் பலஉருவு கொள்ளுதல் வேற்றுமைஎனினும்பொருந்தும். உம்மை-இழி வுசிறப்பு. வேற்றுமைஎன்னுஞ்சொல் எஞ்சிநின்றது.

(357.) தாஞ்செய்வினையல்லாற்றம்மொடுசெல்வதுமற்
றியாங்கணுந் தேரிற் பிறிதில்லை - ஆங்குத்தாம்
போற்றிப் புனைந்த வுடம்பும் பயமின்றே
கூற்றங்கொண் டோடும் பொழுது.

(இ-ள்.) கூற்றம்-யமன், கொண்டு (உயிரை) பற்றி, ஓடும் பொழுது - விரைந்துசெல்லும்பொழுது, ஆங்கு - கூடிவாழ்ந்தகாலத்தில், தாம் தாங்கள், போற்றி (உணவுமுதலியவற்றால்) பாதுகாத்து, புனைந்த - (ஆடையணிமுதலியவற்றால்) அலங்கரித்துவைத்த, உடம்பும்-உடம்பினாலும், பயமின்று - (தமக்கு) பயனிலது, யாங்கணும்-எல்லாநூல்களிலும், தேரின்-ஆராயின், தம்மொடுசெல்வது-தம்முடன்செல்வது, தாம்செய்வினை அல்லால் - தாம்செய்தவினையல்லாமல், பிறிதுஇல்லை வேறு இல்லை—எ-று.

தேரின்-என்றமையால் யாங்கண்என்பதற்கு நூல்களெனப் பொருள்சொல்லப்பட்டது. செல்வது - வினையாலணையும் பெயர். முன்னுள்ளஉம்மை-முற்று. பின்னுள்ளஉம்மை-உயர்வுசிறப்பு. மற்று, ஏ-அசை.

௫௮-ஆம் பாடம்-குறள்.

(338.) தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.

(இ-ள்.) தன்நெஞ்சுஅறிவது-தன்மனம்அறிவதை, பொய்யற்க-(பிறர்அறியவில்லையென்று) பொய்க்காம லிருக்கக்கடவன், பொய்த்தபின்-பொய்த்தால், தன்னெஞ்சே - (அதைஅறிந்த) தனதுமனமே, தன்னைச்சுடும் - தன்னை அப்பாவப்பயனை அடைவிக்கும்—எ-று.

தன்னெஞ்சு-ஆறும்வேற்றுமைத்தொகைநிலைத்தொடர்.பொருள் உறுப்புத்தற்கிழமை. நெஞ்சு-இடவாகுபெயர். அறிவது

எதிர்காலவினையாலணையும்பெயர். பொய்த்தபின்-எதிர்காலவினையெச்சம். பொய்-பகுதி, த்-சந்தி, து-அ-சாரியை, பின்-விகுதி, உகரக்கேடு - சந்தி. இதனை இறந்தகாலப் பெயரொச்சத்தொகாநிலைத்தொடரென இரண்டுசொல்லாக்கினும் அமையும், பொய்த்தபின்பு-என்பதுபொருள். ஏ-பிரிநிலை.

(339.) உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தார்
உள்ளத்து ளெல்லா முளன்.

(இ-ள்.) உள்ளத்தால்-(ஒருவன்) தன்னுள்ளத்துக்கு, பொய்யாது-(ஏற்க) பொய்சொல்லாமல், ஒழுகின்-நடந்தால், உலகத்தார்-உயர்ந்தோருடைய, உள்ளத்துள்எல்லாம்-உள்ளத்திலெல்லாம், உளன்-உளன்ஆம்—எ-று.

உள்ளத்தால் - உருபுமயக்கம். உண்மைகூறுதலினது அருமையைப்பற்றி உயர்ந்தோர் எப்பொழுதும் அவனையேநினைப்பர் ஆதலால் உள்ளத்துளெல்லாமுளன் என்றார்.

(340.) மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை.

(இ-ள்.) மனத்தொடு-(ஒருவன்) தன்மனத்தோடுபொருந்த, வாய்மை-உண்மையை, மொழியின்-சொன்னால், தவத்தொடு தானம் - தவத்தோடுதானத்தை, செய்வாரின் - செய்பவரிலும் தலை - சிறப்புடையான்—எ-று.

ஒடு, ஓடு-உருபுகளிரண்டும் மகரவீற்றுப் பெயர்ச்சொற்களோடு புணரும்போது அத்துச்சாரியையும், அத்தோடுஇன் சாரியையும்பெற்றும், பெறுதும்புணரும். முறையேஉதாரணம் - மனத்தொடு, மனத்தோடு, மனத்தினொடு, மனத்தினோடு, மனமொடு, மனமோடுஎனவரும்.

(341.) புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்.

(இ ள்.) புறம் (ஒருவனுக்கு) உடம்பு, தூய்மை-சுத்தமாகு ந்தன்மை, நீரான்-நீரினாலே, அமையும்-உண்டாம், (அதுபோல) மனம்-மனம், தூய்மை-சுத்தமாகுந்தன்மை, வாய்மையால்-உண்மையினால், காணப்படும்-உண்டாம்—எ-று.

தூய்மைஇரண்டும் குறிப்புத் தொழிற்பெயராதலால் புறந் தூய்மை, அகந்தூய்மை, இரண்டும் எழுவாய்த் தொகாநிலைத் தொடரெனக்கொள்க. ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடரெனின் புறத்தூய்மை, அகத்தூய்மை எனவரும்.

(342) எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

(இ-ள்.) எல்லாவிளக்கும்- (புறத்திருளைஓட்டுகிற) விளக்குகளெல்லாம், விளக்குஅல்ல-விளக்குஆகா, சான்றோர்க்கு-(துறவறத்தால்) அமைந்தோர்க்கு, பொய்யாவிளக்கே-பொய்க்காதவிளக்கே, விளக்கு-விளக்காவது—எ-று.

உம்மை-முற்று. ஏ-பிரிநிலை. நான்கனுருபு தகுதிப்பொருளது. விளக்கு-விளங்கு-பகுதி, இ-வினைமுதற்பொருள்விகுதி புணர்ந்துகெட்டுக்கெட்டபோதுமெல்லெழுத்து வல்லெழுத்தாதலாகிய விகாரம்பெற்ற தொழிலடியாகப் பிறந்தபெயர். அன்றி முதனிலை திரிந்ததொழிற்பெயராகக் கொண்டுதொழிலாகுபெயரொன்றாயினும், பொருள்களை விளங்குதல்செய்தற்குக் காரணமாகிய சுடர்க்கு அதன்காரியமாகியவிளக்கு என்னும் தொழிற்பெயர் பெயராதலால் காரியவாகுபெயரொன்றாயினுங்கொள்க. எல்லாவிளக்காவன சூரியன்-சந்திரன்-தீ.

(343) யாமெய்யாக் கண்டவற்று ளில்லையெனைத்தொ(ன்றும்
வாய்மையி னல்ல பிற.

(இ-ள்.) யாம்-நாம், மெய்யா - உண்மையுணர்த்தும் நூல்களாக, கண்டவற்றுள்- கண்ட நூல்களுள், எனைத்துஒன்றும்

யாதொருதன்மையாலும், வாய்மையின் - உண்மையினும், பி றநல்ல - வேறுநல்லஅறங்கள், இல்லை-இல்லை—எ-று.

மெய்யாகஎன்பது ஈறுதொகுத்தலாக மெய்யாஎனநின்ற து. கண்ட பலவின்பாற்படர்க்கை இறந்தகால வினையாலணை யும்பெயர். அகரவீற்றுப்பலவின்பாற் பெயர்ச்சொற்க ளெல் லாம் வேற்றுமையுருபு ஏற்கும்போது அற்றுச்சாரியை பெ ற்றேவரும். கண்டவற்றினுள் என இன்சாரியை யுடன்பெறு தலுமுண்டு. உம்மை முற்று.

ருகூ-ஆம்பாடம்-குறள்.

(344 இருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.

(இ-ள்.) மருள்நீங்கி-மயக்கத்தினின்றுநீங்கி, மாசுஅறு-கு ற்றமற்ற, காட்சியவர்க்கு-மெய்யறிவுடையார்க்கு, இருள்நீங் கிபிறப்பினைநீக்கி, இன்பம்பயக்கும்-முத்தியைக்கொடுக்கும்.

முதலினுள்ளநீங்கி மெலித்தல்விகாரம். அல்லது இருள்நீ ங்கஎனப்பொருள்கொள்ளின் செயவெனெச்சத்திரிபெனக. இருள் நரகம். அதுதன்காரணமாகிய பிறப்புக்கானமையால் காரியவாகுபெயர். பின்னுள்ள நீங்கியென்னும் வினையெச் சம்காட்சியவவொன்னும் வினைக்குறிப்புப்பெயரின் பகுதியை க்கொண்டது.

(345 ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வான நணிய துடைத்து.

(இ-ள்.) ஐயத்தின்நீங்கி சந்தேகத்தினின்றுநீங்கி, தெளிந் தார்க்கு உண்மையுணர்ந்தவர்க்கு, வையத்தின் - பூமியிலும், வானம்-முத்தியுலகம், நணியதுஉடைத்து - கிட்டியதைஉடை யது—எ-று.

இழிவுசிறப்பும்மை விகாரத்தால்தொக்கது. நணியது இற ந்தகாலத்தொழிற்பெயர்.

(346 எப்பொரு ளெத்தன்மைத் தாயினுமப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

(இ-ள்.) எப்பொருள்-யாதொருபொருள், எத்தன்மைத்து ஆயினும் - யாதொருதன்மையுடையதாய்த் தோன்றினும், அப்பொருள்-அப்பொருளில், மெய்ப்பொருள்-உண்மையாகி யபொருளை, காண்பது-கண்டறிவதே, அறிவு-மெய்யறிவு— உம்மை உயர்வுசிறப்பு, இழிவுசிறப்பு இரண்டுக்கும் பொது. பிரிநிலைஏகாரந்தொகுத்தல்.

(347 சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு.

(இ-ள்.) சென்றஇடத்தால் (மனத்தைஅது) சென்றபுலனிடத்தில், செலவிடா-செல்லவிடாமல், தீதுஒரீஇ-கெட்டபுலனினின்றுநீக்கி, நன்றின்பால்-நல்லபுலனிடத்தில், உய்ப்பது செலுத்துவது, அறிவு-அறிவாம்—எ-று.

ஆல்உருபு உருபுமயக்கம். விடா வினையெச்சவீறுதொகுத்தல். ஒரீஇ-ஒரு பகுதி, இ இறந்தகாலவினையெச்சவிகுதி பெற்று, ஒரிஎனநின்று இகரம் ஈகாரமாய் அளபெடுத்தல் நீட்டல் விகாரம். இதுசொல்லிசையளபெடை, நன்றுபண்படியாகப் பிறந்தபெயர்.

(348 எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினுமப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

(இ-ள்) எப்பொருள்- யாதொருபொருளை, யார்யார்வாய் யாவர்யாவருடையவாயினால், கேட்பினும் (சொல்ல) கேட்டாலும், அப்பொருள் - அப்பொருளினது, மெய்ப்பொருள் உண்மையாகியபயனை, காண்பது-காணவல்லது, அறிவு-அறிவாம்—எ-று.

யாவனொன்பதன் மருஉ ஆகியயார் என்னும்சொல்லின் அடுக்குப்பன்மைப்பொருளில்வந்தது. உம்மை உயர்வுசிறப்பு-இ

ழிவுசிறப்பென்னும் இரண்டனுக்கும்பொது. காண்பது வினை யாலணையும்பெயர்.

சுo - ஆம் பாடம்.

(349, எண்பொருள வாகச் செலச்சொல்லித்தான்பிற
நுண்பொருள் காண்ப தறிவு. (ர்வாய்

(இ-ள்.) தான்என்பொருளஆக தான் (கேட்பேர்க்கு) எளியபொருளுள்ளசொற்களாக,செலச்சொல்லி-மனங்கொள்ளச்சொல்லி, பிறர்வாய் பிறரிடத்து, நுண்பொருள்-(கேட்குஞ்சொற்களினது) நுட்பமாகியபொருளை, காண்பது,காணவல்லது, அறிவு-அறிவாம்—எ-று.

எள் என்னும் பண்படி வருமொழிமுதல் வல்லினமாதலால் மெலிமுன்திரிதல்போலத் திரிந்தது. பொருள்காண்பது இரண்டாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடராதலாலும் - நிலைமொழி அஃறிணைச்சொல்லாதலாலும், ளகரம், நன் சு, எo சூத்திரத்தின்படிதிரியாது, அரு. சூத்திரத்தின்படி விகாரத்தியல்பாயிற்று. இத்தொகைநிலைத்தொடரில் உயர்திணைப்பெயர்களாயின் அவற்றினீருவது வருமொழிமுதல் வல்லினமாவது விகாரப்பட்டேவரும்.

(350) எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு.

(இ-ள்) உலகம் உலகமானது, எவ்வது-எவ்வழியால் - உறைவது-நடப்பதுஆயிற்று, உலகத்தோடு - அவ்வுலகத்தோடு அவ்வது-அவ்வழியால்,உறைவது நடப்பது, அறிவு அறிவாம்

உலகமென்றது உயர்ந்தோரை அது இடவாகுபெயர். எவ்வது வினைப்பெயர், எ பகுதி. வ் சந்தி, தன்னொற்றிரட்டலாகிய வ் சந்தி, அ-அசாரியை, து ஒன்றன்பால்விகுதி. அவ்வது என்னும் சுட்டுப்பெயரையும் அவ்வாறேபிரிக்க.

(351) அறிவு டையா ராவ தறிவா ரறிவிலார்
அஃதறி கல்லா தவர்.

(இ-ள்) அறிவுடையார் அறிவுடையாராவார், ஆவது-வரக் கடவதை, அறிவார் முன்அறியவல்லவர், அறிவிலார்-அறிவி லாராவார், அஃது-அதை, அறிகல்லாதவர்-அறியவலியில்லார்.

ஆவது எதிர்கால வினையாலணையும்பெயர். அறிகல்லாதவ ர் ஈறுதிரிந்த எதிர்மறைவினையாலணையும்பெயர். அறி-பகுதி, கு-சாரியை, அல் - எதிர்மறைவிகுதி, அனைத்துமொருபகுதி; ஆ-சாரியை, த்-விரித்தல்விகாரம், அசாரியை, வ்-சந்தி, அர்-ப லர்பால்விகுதி.

(351.) அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ
தஞ்ச லறிவார் தொழில்.

(இ-ள்.) அஞ்சுவது-அஞ்சப்படுவதை, அஞ்சாமை-அஞ்சா திருத்தல், பேதைமை-அறிவில்லாமையாம், அஞ்சுவது-அந்த அஞ்சப்படுவதை, அஞ்சல்-அஞ்சுதல், அறிவார்-அறிவுடையா ரது, தொழில்-தொழிலாம்—எ-று.

அஞ்சுவதிரண்டும் எதிர்காலவினையாலணையும்பெயர். அஞ் சாமை-எதிர்மறைத்தொழிற்பெயர்.

(353.) அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலார்
என்னுடைய ரேனு மிலர்.

(இ-ள்.) அறிவுடையார் - அறிவையுடையார், எல்லாம்உ டையார்-எல்லாவற்றையும் உடையராவார், அறிவுஇலார் - அ றிவுஇல்லாதவர், என்உடையரேனும்-எதைஉடையராயினும், இலர் - (ஒன்றும்) இலராவர்—எ-று.

உம்மை-உயர்வுசிறப்பு. அறிவிலார்-எழுவாய்த்தொகாநிலை த்தொடர். திணைவழுவமைதி - நன்-சூ-, க அசுா. அறிவையி

லாறென விரிக்கவுங்கூடுமாதலால் இரண்டாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடரெனினும் பொருந்தும்.

(354.) சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாம்
சொல்லிய வண்ணஞ் செயல்.

(இ-ள்.) சொல்லுதல்-(நாம் இத்தொழிலைச்செய்வோமென்று ஒழுங்குபட) சொல்லுதல், யார்க்கும்-யாவர்க்கும், எளிய-எளியவாகும், சொல்லியவண்ணம்-சொல்லியபடி, செயல்-செய்தல், அரியஆம்-அருமையுள்ளனவாகும்—எ-று.

சொல்லுதல், செயல்-இரண்டும் பால்பகாவஃறிணைப்பெயர்கள்- நன்-பொது-சூ-அ-பொதுப்பெயர்வினைகளின் பொதுமைநீக்கும் மேல்வருஞ்சிறப்புப் பெயர்வினைதாமே-என்னுஞ் சூத்திரப்படி, எளிய-அரியஎன்னும் பலவின்பாற் குறிப்புவினைமுற்றுகளாகிய சிறப்புவினைகளால் பொதுமைநீங்கிப் பலவின்பாற்பெயராய் நின்றன. உம்மை முற்று.

ஸ்ரீ

ஸ்ரீமத்பராங்குசாயநம:

இலக்கணங்கூறுமுறை.

நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமு மாங்கே தரும்.

நடுவின்றி, அஃறிணை ஒன்றன்பாற்படர்க்கைப் பண்புப்பெயர்ச்சொல். அல்வழிப்புணர்ச்சி எழுவாய்த் தொகாநிலைத்தொடராய் இன்றிஎன்னும் குறிப்புவினைகொண்டது. நிலைமொழி யீறுகெட்டது விகாரச்சந்தி.

இன்றிநன்பொருள், (இக்குறிப்புவினையெச்சம் நடுவென்பதன் வினையாதலால்) அஃறிணை யொன்றன்பாற் படர்க்கைச்செயப்படுபொருள்குன்றிய குறிப்பு எதிர்மறை வினையெச்சவினைச்சொல். அல்வழிப்புணர்ச்சி வினையெச்சத்தொ

காரிலைத்தொடராய் வெஃகினென்னும் வினையொடுமுடிந்த து. நிலைமொழியீறும் வருமொழிமுதலும் விகாரப்படாம ல்நின்றது இயல்புச்சந்தி. நன்பொருள்என்பது இடைப்பிற வரலாய் வருமொழியாய்நின்று புணர்ந்தமையால் இது பு ணர்ச்சியில்வழிப்புணர்ச்சி.

நன்பொருள், அஃறிணைஒன்றன்பாற் படர்க்கைப் பண் புப்பெயர்ச்சொல். அல்வழிப்புணர்ச்சிப் பண்புத் தொகைநி லைத்தொடராய்ப் பொருளென்னும் பெயரோடுமுடிந்தது. நி லைமொழியீறு கெட்டதும்லகரந் திரிந்ததும் விகாரச்சந்தி.

பொருள்வெஃகின், அஃறிணை ஒன்றன்பாற் படர்க்கை ப்பெயர்ச்சொல். அடையப்படுபொருளில்வந்த இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடராய் வருமொழியோடுபு ணர்ந்தது. நிலைமொழியீறும், வருமொழிமுதலும் விகாரமி ன்றிநின்றது இயல்புச்சந்தி.

வெஃகிற்குடி, (இது ஒருவனுடையவினையாதலால்) உய ர்திணை ஆண்பாற்படர்க்கைச் செயப்படுபொருள் குன்றுதத ன்வினை எதிர்காலஉடன்பாட்டு வினையெச்ச வினைச்சொல். அல்வழிப்புணர்ச்சி வினையெச்சத் தொகாநிலைத்தொடராய்ப் பொன்றி என்னும் வினையோடுமுடிந்தது. குடிஇடைப்பிறவ ரலாய்நின்று புணர்ந்தது புணர்ச்சியில் வழிப்புணர்ச்சி. நிலை மொழியீறுதிரிந்தது விகாரச்சந்தி.

குடிபொன்றி, அஃறிணை யொன்றன்பாற் படர்க்கைப் பெயர்ச்சொல். வேற்றுமைப்புணர்ச்சி அழித்தற்பொருளில் வந்த இரண்டாம்வேற்றுமைத் தொகைநிலைத் தொடராய்ப் பொன்றி என்னும் வினையோடுமுடிந்தது. வருமொழிமுதல் மிகாதது இயல்புச்சந்தி.

பொன்றிக்குற்றம் அஃறிணை ஒன்றன்பாற்படர்க்கைச் செ யப்படுபொருள் குன்றியதன்வினை நிகழ்கால உடன்பாட்டு

வினையெச்ச. வினைச்சொல். அல்வழிப்புணர்ச்சி வினையெச்சத் தொகாநிலைத்தொடராய்ச் சொல்லெச்சமாய்நின்ற செய்தென்னும் வினையோடுமுடிந்தது. இந்நிகழ்காலத்துக்குரிய வினையெச்சம் இங்கே காரியப்பொருட்டாய்நிற்றலால் இறந்தகால முணர்த்திற்று. இது செயவெனெச்சத்திரிபு. வருமொழிமுதலிற் ககரந்தோன்றியது விகாரச்சந்தி.

குற்றமும், (பெயரினும் வினையினும் பின்முன் ஓரிடத் தோன்றுவ திடைச்சொலாதலால்) இறந்ததுதழீஇய எச்சப்பொருள்தரும் இடைச்சொல். அல்வழிப்புணர்ச்சி இடைச்சொற் றொகாநிலைத்தொடர். நிலைமொழி ஈறும்வருமொழிமுதலும் விகாரப்படாமல்நிற்பது இயல்புச்சந்தி.

குற்றமுமாங்கு, அஃறிணை ஒன்றன்பாற் படர்க்கைப்பண்புப்பெயர்ச்சொல். வேற்றுமைப்புணர்ச்சி ஆக்கற்பொருளில்வந்த இரண்டாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடராய் தரும்என்னும் வினையை அவாவிநிற்பினும் இடைப்பிறவாலாகிய வருமொழியோடு புணர்ச்சியில் வழிப்புணர்ச்சியாய்ப் புணர்ந்தது. நிலைமொழியீறும் வருமொழிமுதலும் விகாரப்படாமல்நிற்பது இயல்புச்சந்தி.

ஆங்கே, தேற்றப்பொருள்தரும் இடைச்சொல். அல்வழிப்புணர்ச்சி இடைச்சொற் றொகாநிலைத்தொடர். நிலைமொழியீற்றுகரங்கெட்டது விகாரச்சந்தி.

ஆங்கேதரும், அஃறிணை ஒன்றன்பாற் படர்க்கைச்சுட்டுப் பெயர்ச்சொல். (இது உருபுஏற்காமல் ஏழாவத னிடப்பொருளிலேயே வருவதாகலின்) - வேற்றுமைப்புணர்ச்சி ஏழாம் வேற்றுமைத்தொடராய்த்தரும் என்னும் செய்யுமென் வாய்பாட்டுச் செயப்படுபொருள் குன்றுததன்வினை நிகழ்கால வினைமுற்றோடுமுடிந்தது. வருமொழிமுதல் மிகாமல்நின்றது இயல்புச்சந்தி. இடைச்சொல் தனித்தியலின்றிப் பெயரினும் வினையினும் பின்முன் ஓரிடத்து ஒன்றுவதாதலால் - குற்றமு

ம்என்பதில் உம்மையையும், ஆங்கேஎன்பதில் ஏகாரத்தையு
ம்பிரித்துத் தனிநிலைமொழியாகவைத்து இலக்கணங்கூறும
ல், குற்றமும்என்வும், ஆங்கே எனவும்வைத்து இலக்கணங்
கூறியது என்க.

ஸ்ரீ

ஹரிஓம் - நன்றாக - குருவாழ்க,

ஸ்தற்பார்வியற்சுருக்கம்.

பா - நான்குவகைப்படும்.

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பாஎன.

பாவிற்குரியஉறுப்புகள் அறுவகைப்படும்.

எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடைஎன.

எழுத்து இன்னதென்பதும், அதன்வகையும் எழுத்திலக்க
ணத்துள் கண்டுகொள்க.

அசை - எழுத்தால் ஆக்கப்படுவது.

அது இரண்டுவகைப்படும், நேரசை, நிரையசை என.

நேரசை, ஒருகுறிலாவது ஒருநெடிலாவதுதனித்தும், ஒ
ற்றடுத்தும்வருவது.
